JL
m211, N29BH
N29ol.1
1985/8



மகாத்மா காந்தி.

# "பாரதி"

## ஒரு மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி)

ஆசிரியர்: ரா. நாராயணஸ்வாமி.

மாலை 1 | உத்தமபாளையம் 1929-௵ ஜனவரி௴ | மணி 1

### பரம்பொருள் வணக்கம்.

ஆத்திசூடி யிளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்,
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்,
எசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத் தாலே யுணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறு மறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை யகற்றினர்;
அதனருள் வாழ்த்தி யமரவாழ் வெய்துவோம்.

பாரதி.

198518

# பாரத நாடு

மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியு நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்டொழிலும் வாணிபமும் ஓங்கியசீர் நாடு
கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு
கடவுளருட் கோயில்களே காட்சியளி நாடு
பலசமய உண்மையெலாம் பரந்தொளிரு நாடு
பழைமைமிகு புகழ்பெருகு பாரதநன் னாடே. (௧)

உண்மையரிச் சந்திரனை உவந்தளித்த நாடு
உயர்ஜனகன் ராமபிரான் உலவியபொன் னாடு
கண்ணன்விளை யாடலெல்லாங் கண்டுகளி நாடு
கன்னனொடு பஞ்சவர்கள் காத்ததனி நாடு
தண்மைநிறை புத்தரவர் தருமம்வளர் நாடு
தகைமையுறு வள்ளுவர்தந் தமிழ்பிறந்த நாடு
பண்ணமருங் கரிகாலன் பரித்தபுகழ் நாடு
பகைவர்களுந் தொழுதேத்தும் பாரதநன் னாடே. (௨)

வான்மீகி வியாசமுனி வளர்ந்திருந்த நாடு
வாகடதன் வந்திரியும் வசிட்டமுனி நாடு
“நான்” மறந்த சுகர்முதலோர் ஞானமொளிர் நாடு
நாயன்மார் ஆழ்வார்கள் நண்ணியதன் னாடு
மேன்மையுறு பட்டினத்தார் மேவுமணி நாடு
வேதாந்த ராமகிருஷ்ணர் விளங்கியசெந் நாடு
பான்மைபெறு கம்பர்முதல் பாவலர்கள் நாடு
பத்தரொடு ஞானிகள்வாழ் பாரதநன் னாடே. (௩)



சந்த்ரவதி சாவித்ரி ஜானகியின் நாடு
தமயந்தி திரௌபதியுஞ் சார்ந்திருந்த நாடு
இந்திரர்சொல் கண்ணகியின் எழில்நிறைகொள் நாடு
எங்களவ்வை யின்மொழியே எங்குமொளிர் நாடு
அந்தமிகு காரைக்கால் அம்மைசிவ நாடு
ஆண்டாளும் மங்கையர்தம் அரசிவந்த நாடு
பந்தமிலா விக்டோரியா பரிந்தாண்ட நாடு
பாவையர்தம் வடிவான பாரதநன் னாடே. (௪)

தந்தையெனுந் தாதாபாய் தவழ்ந்துறைந்த நாடு
தத்தரொடு கோகுலர்தஞ் சரிதநிகழ் நாடு
நந்தலில்சு ரேந்திரநாத் நாவலர்வாழ் நாடு
நாயகனார் திலகமுனி நலஞ்சிறக்கு நாடு
இந்துவெனக் காந்தியொளி எழுகின்ற நாடு
இனியஅர விந்தமலர் இன்பமிகு நாடு
பந்துவையும் நீத்தலஜ பதிபிறந்த நாடு
பற்றறுத்தோர் பதந்தாங்கும் பாரதநன் னாடே. (௫)

ஞானமொடு கல்விநலம் நல்குதிரு நாடு
நாதாந்த மோனநிலை நாட்டமிகு நாடு
தானமதை உடலாகத் தாங்குகின்ற நாடு
தான்வருந்திப் பிறர்க்குதவுந் தயைபிறந்த நாடு
ஈனவருந் தொழுதேத்தும் வளம்பெருகு நாடு
வாழ்விழந்தே இதுகாலை வாடுகின்ற நாடு
ஊனமிலா உரிமைபெற ஊக்கமிகு நாடு
உத்தமரை அளிக்கின்ற ஒருபாரத நாடே. (௬)

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்,
ஆசிரியர், “நவசக்தி.”

## தமிழ் நாடு.

வேழமுடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. **ஔவையார்.**

* * * * *

எத்தமுள்ள இந்திரனா ராளுமெங்கள் நாடு
சந்திரர்கள் சூரியர்கள் தவம்புரியும் நாடு
தவமுனிவ ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள் நாடு
கொச்சிமலை குடகுமலை யெங்களது நாடு
குமரேசர் வாழுவதும் எங்களது நாடு
பச்சைமலை பவளமலை எங்களது நாடு
பரமசிவன் வாழுவதும் எங்களது நாடு. **புகழேந்திப் புலவர்.**

---

## பாண்டிய நாடு.

தேன்பெருகுஞ் சோலை தென்னவள் நாடு
கனியுதிருஞ் சோலை கனமதுரை நன்னாடு
வடகாஞ்சி முத்திறங்கும் வடமதுரைப் பட்டணமாம்
தென்காஞ்சி முத்திறங்குந் தென்மதுரைப் பட்டணமாம்
வாழை வடக்கீனும் வடமதுரைப் பட்டணமாம்
சோலை கிழக்கீனுந் துய்யபலா மேற்கீனும்
வாழை வடக்கீனும் வாங்கமுகு தெற்கீனும்
கரும்பு மிளநீருங் கண்திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணுங் கதிருளக்கு நெற்காணும்
அரிதா ளறுத்துவர மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக ஐங்கலந்தேன் கூடுகட்டும்
யானை கட்டத்தாளும் வானமட்டும் போராகும்
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று
யானைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை.

**புகழேந்திப் புலவர்.**

---



## தமிழ்த் தெய்வ வணக்கம்.

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

**மனோன்மணீயம்.**

---

# முகவுரை.


நினைத்தார்களுக்கு நினைத்தபடி நினைத்தவைகளைக் கொடுக்கும் நித்திய நிமலனை வாழ்த்தி, வணங்கி, நிர்மலனது இன்னருளைத் துணைக் கொண்டு இப்பத்திரிகைக்கு முன்னுரை கூற முன்வருகிறேன். ஆரம்பத்தில் இந்தியா நாட்டைப்பற்றியும், அதன் தற்கால நிலையைப் பற்றியும் கூறிவிட்டுப் பத்திரிகையின் பயன்களைச் சிறிது கூற விரும்புகிறேன். இவ்வாறு செய்வது அவசியமென்றும் கருதுகிறேன்.

## முற்கால இந்தியா

பொன் விளையும் நாடெனவும், கற்பக நாடெனவும் புகழப் பெற்ற நமது பாரதகண்டம்—பலவகை ஏற்றங்களும், இயற்கை வளங்களும், வனப்புக்களும் வாய்ந்த நமது மாதுரு பூமி—“இல்லை” என்று வந்தவர்களுக்கு இல்லை என்னாது கொடுத்துதவிய நமது ஜென்ம தேசம்—அநேக விஷயங்களில் உலகத்திற்கே திலகமெனத் திகழ்ந்த நமது பாரத வர்ஷம்—அருளுடைய தவமக்கள், அறிவுடைய மேன்மக்கள், ஆவேசம் உடைய வீர மக்கள், ஆற்றலுடைய அரிய மக்கள் ஆயிரம் ஆயிரமாக அவதரித்து, அவனிக்கே அறிவுச் சுடர் அளித்த நமது அருமைத் தவத் தாய் நாடு—“தான் வருந்திப் பிறர்க்குதவும் தயை பிறந்த” நமது தரும நாடு—ரோம், கிரேக், எகிப்து, பாபிலோனியா முதலிய தேசங்களிலிருந்து தனது உயர் பண்டங்களால் செல்வத்தை இழுத்த நமது நாவலந்தீவு—அலெக்சாந்தர், கொலம்பஸ், கஜினி முகம்மது, கோரி முகம்மது முதலிய அயல் நாட்டார்களைத் தனது ஐஸ்வர்யத்தால் கவர்ச்சித்த நமது இந்தியா—சுமத்திரா, ஜாவா, பாலி, காம்போஜம், சம்பா, சயாம் முதலிய இன்னும் அநேக தேசங்களுக்குத் தனது மக்களை அனுப்பி, அத்தேசங்களை நாகரீகமடையச்செய்த நமது பாரதவுலகம்—“**அன்பே கடவுள், கடவுளே அன்பு**” என்ற அரிய ஆத்மீக தத்துவத்தை ஆதியில் வையகத்திற்கு எடுத்து காட்டிய நமது தாயகம் பண்டைக் காலத்திலே நாகரீகத்தில் முதன்மைபெற்று, உலகத்தின் மகுட மணியாக விளங்கியது.

## தமிழகம்

நம் பாரத வர்ஷத்தின் நிலை இவ்வாறாக, உலகத்திலே முதலாவது மனித வர்க்கம் உண்டான இடம் தமிழகமாகத்தான் இருக்க வேண்டுமென இப்பொழுது சில ஆராய்ச்சிக் காரர்களால் [illegible]கப்படும் அவ்வளவு பெருமை வாய்ந்த நமது தேனொழுகும் தமிழ் நாடு—சங்கத்தின் தன்மையையும் நன்மையையும் ஆதியில் உலகத்திற்கு உபதேசித்தது மட்டுமின்றிக், காரியத்தில் செய்து காட்டிய வீரத் தமிழ் நாடு—எல்லா மதத்தினர்களாலும், எல்லாத் தேசத்தினர்களாலும், எல்லாப் பிரிவினர்களாலும், எல்லா மொழியினர்களாலும், எல்லா வயதினர்களாலும், எல்லாக் காலத்தினர்களாலும் ஒப்புக்கொள்ளக் கூடிய மறையை—தமிழ் வேதத்தை—திருக் குறளை அளித்த தமிழ் தேசம் கல்வியிலும், கலைகளிலும், செல்வத்திலும், வீரத்திலும், தீரத்திலும் முற்காலத்தில் சிறப்புற்றிருந்தது.



## இந்தியாவின் தற்காலம்

இவ்வாறு பலப்பல பண்டைப் பெருமைகளையுடைய நமது தாயகமும் தமிழகமும் இப்பொழுதிருக்கும் நிலைமையைக் கவனிப்போம். இந்தியாவின் செல்வங்களெல்லாம் சிதைந்தன; கலைகளெல்லாம் மங்கி மறைந்தன. வீரமும், தீரமும், ஆற்றலும், அந்தஸ்தும் அடியோடு அழிந்துபோய் தேசமே அடிமைப்பட்டு தரித்திரத்தால் தகிக்கப்பட்டுச் சுதந்திரமின்றி வாடி வதங்கிக்கொண்டிருக்கிறது. எத்தனையோ தேசங்களுக்கு எவ்வளவோ சாமான்களை யனுப்பி எவ்வளவோ ஐஸ்வர்யம் அடைந்த நாடு, இன்று அயலவர்களால் அடிமை நாடு என்று அழைக்கப்படுகிறது. அநேக ஜனங்கள் அளவற்ற வறுமையுற்று மலேயா, பீஜி, தென் ஆப்பிரிக்கா, கானடா முதலிய தேசங்களுக்குப் போய்ப் பிழைப்பதைக்கண்டு, அயல் நாட்டார்கள், இந்தியாவைக் கூலிக்காரர்கள் தேசம் என்று ஏசும்படி ஆகிவிட்டது. சுருங்கச் சொன்னால் சுதந்திர இந்தியா அடிமை இந்தியாவாகவும், செல்வ இந்தியா தரித்திர இந்தியாவாகவும், மணி இந்தியா பிணி இந்தியாவாகவும் மாறிவிட்டது.

## தேசீயத்தில் வேலை

நமது தேசத்தின் இப்பரிதாப நிலைமையைக்கண்டு, தேசாபிவிருத்திக்காக உழைக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு **தேசாபிமானம்** என்னும் விதையை இங்கு முதல் முதல் விதைத்தவர் ராஜா ராம் மோகனராய். அவர் காலம் முதல் இந்நாட்டில் தேசியமும், ஆசார சீர் திருத்தங்களும் மிகமிக மெதுவாக வளர்ந்து கொண்டு வருகின்றன.

நமது பரதகண்டம் பண்டைக் காலத்தில் பற்பல மா பெருஞ் சிறப்புகளைப் பெற்றிருந்ததென்று இக்காலத்தில் நாம் பெருமையுடன் பேசிக்கொள்வதால் அடையும் பயனென்ன? இழந்த பெருமைகளை மீண்டும் அடைவதற்கு நாம் பெரிதும் விடாது உழைத்தல் வேண்டும். அவைகளை அடைவதற்கென்றே காங்கிரஸ்சபை கண்டார்கள். ஆதியில் காங்கிரஸைக் கூட்டிய அறிவாளிகளை விரலால் எண்ணிவிடலாம். ஆனால் அது இன்று இலட்சக்கணக்கான அங்கத்தினர்களைக் கொண்டு இந்தியாவின் மா பெருஞ் சபையாகப் பிரகாசிக்கின்றது. காங்கிரஸ் சபை மெல்லென பல செயல்களை ஆக்கியே வந்திருக்கிறது. தாதாபாய் என்ற பெரியோர் தோன்றி, தான் அரும் பெருங் கிளவராகித், தன் உயிர் போமளவும் உழைத்துக் காங்கிரஸை கௌரவமான நிலைமைக்குக் கொண்டு வந்தார். தேச பக்தர்களான திலகர், கோகலே முதலியவர்கள் தோன்றிக் காங்கிரஸுக்காக அரும் பாடு பட்டார்கள். மகாத்மா காந்தி, தேசபந்து தாசர், அறிஞர் லஜபதிராய் முதலிய உறுதியான தேசாபிமானிகள் உற்பவித்துக் காங்கிரசுக்காக அரும்பாடு பட்டதின் பயனாகவே காங்கிரஸ் மகா உன்னத நிலை அடைந்து கொண்டிருந்தது. அத் தருணத்தில் இதனுடைய வேலைகளைக் கண்டு, இராஜப் பிரதிநிதியே என்ன செய்வதென்று தெரியாது திகைத்துப் போகும்படியாகக் காங்கிரஸ் தேச ஜனங்களுக்கிடையில் அவ்வளவு அதிகமாக ஒற்றுமை உணர்ச்சியை வளர்த்து வேலை செய்தது.

## மகா யுத்தம்

உலகத்தையே நிலைகலங்கச்செய்த சென்றுபோன ஐரோப்பிய பெரும் போருக்குப்பின்னால், உலகில் ஓர் உதயம் தோன்றி மக்களிடையில் ஓர் நவீன உணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. இப் புதிய உணர்ச்சி நமது தேசத்திலும் பரவாமலில்லை. மகிமையற்று மதிப்பாரின்றிக் கிடந்த சில சுதந்திரமற்ற தேசங்கள் மகா யுத்தத்திற்குப் பிறகு விடுதலையடைந்தன. சில நாடுகள் அளவிலும், ஆற்றலிலும், அந்தஸ்திலும் அதிகரித்துவிட்டன. சில வல்லரசுகள்



சில நல்லரசுகளுக்குச்செய்த கஷ்டங்களை உலகம் கவனித்துக்கொண்டிருந்தது. முடி அரசின் தன்மையையும் குடி அரசின் நன்மையையும் உலக மக்கள் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தார்கள். சுருங்கக் கூறினால் ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு உலகில் பற்பல மாறுதல்கள், இயக்கங்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றனவென்று ஒவ்வொருவருக்கும் நன்கு தெரிகிறது.

## யுத்த காலத்தில் பத்திரிகைகள்

கடந்த மகா யுத்தத்திற்குப் பின்னால் பத்திரிகையின் அபிவிருத்தி அதிகம் என்றே சொல்லல் வேண்டும் யுத்த சமயத்தில் புராணங்களை, கதைகளைக் காட்டிலும் நமது நாட்டில் பத்திரிகைகளை அதிக ஆவலுடன் படிக்க ஆரம்பித்தார்கள். ஐரோப்பிய யுத்தத்தின் வெற்றிக்குக்காரணம் சைனியங்களல்ல, துப்பாக்கிகளல்ல, விஷக்காற்றல்ல, மரண ஒளி (Death-Ray) அல்ல. ஆனால் பத்திரிகைகளே காரணமென்று ஒருவர் சொல்லுகிறார். பத்திரிகைகளுக்கு இவ்வாறு அபார சக்தி இருக்குமாயின் பத்திரிகைகளின் உபயோகங்களைப்பற்றியும் அவைகள் இந்தியாவிலும் வேறு பல நாடுகளிலும் எவ்வாறு இப்பொழுது இருக்கிறதென்பதைப் பற்றியும் கவனிப்போமாக.

## பத்திரிகைகளின் பயன்கள்

உயர்ந்த விஷயங்களை ஆசிரியர் போன்று உபதேசிப்பதும் பத்திரிகை—பற்பல கலா ஞானங்களைப் பல பாகுபாடுகளுடன் மாதா மாதிரி அளிப்பதும் பத்திரிகை—சிந்தைக் கினியவைகளைத் தேடித்தேடி அலைந்து சேகரித்துப் பிதா போன்று அறிவுக்கு ஆகாரம் அளிப்பதும் பத்திரிகை—குற்றங் குறைகளைக் கூறிச் சீர்திருத்தங்களை நேசனை நிகர்த்து உதவி அளிப்பதும் பத்திரிகை—குற்றங்களைக் கடிந்து, நல்லவைகளைப் போற்றி, அயோக்கியர்களை அடக்கி, யோக்கியர்களை ஆதரித்து, நீதி மன்னன் போன்று ஆட்சி செய்வதும் பத்திரிகை—பல வகைப்பட்ட விஷயங்களில்

ஈடுபட்டு உலக முன்னேற்றத்தின் பொருட்டுத் தொண்டன் என உழைப்பதும் பத்திரிகை—பல சிக்கலான விஷயங்களில் வழி காட்டி போன்று பாதை தெரிவிப்பதும் பத்திரிகை—அற்புத, அரிய விஷயங்களைத் தூதுவன் போன்று அறிவிப்பதும் பத்திரிகை—இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்தும் அறிந்த அறிஞன் போன்று அபிப்பிராயம் அளிப்பதும் பத்திரிகை. அரசாங்கங்களை ஆக்குவதும், ஆதரிப்பதும் அழிப்பதும், உடன்படிக்கைகளை உண்டாக்குவதும், உறுதி செய்வதும், உடைப்பதும், சண்டை சச்சரவுகளைக் கிளப்புவதும், சரி செய்வதும், சமாதானத்தை நிலவச் செய்வதும், உலக எழுச்சியை உண்டாக்குவதும், ஒடுக்குவதும் ஆகியவைகளுக்கும் பத்திரிகையே.

வெறும் வர்த்தமானங்களை மாத்திரம் வெளியிடுவதில் திருப்தி கொள்ளாது, கண் மூடித்தனமாய் ஒரு கட்சியையும் ஒருக்காலும் சேராது, அநியாயத்திற்கு ஆதரவு அளிக்காது, ஏழைகளுக்கு எப்பொழுதும் அனுதாபம் காட்டத் தவறாது, பிற்போக்கினர்களை என்றும் எதிர்த்துநின்று, ஜன சமூக சீர் திருத்தத்திற்காகப் போராடும் ஒரு ஸ்தாபனம் பத்திரிகைதானென்று சொல்வது குற்றமாகாது. வியாபாரிகள் விலையை அறிந்துகொள்ளவும், தங்கள் விளம்பரங்களை வெளியிடவும், காரியஸ்தர்கள் தங்களுக்காகப் பொருள்களை வாங்கவும், குடியானவர்கள் தமது விளை பொருள்களை விற்கவும்-வேண்டும் சில சாமான்களை வாங்கவும், தொழிலாளிகள் வேலைகள் தேவையான இடங்களை அறியவும், தேவையானவர்கள் தேவைகளை தெரிவிக்கவும் பத்திரிகை ஒரு பெருஞ் சாதனமாக இருக்கிறது. உலக மக்கள் கல்வியிலும், கேள்வியிலும், நாகரீகத்திலும், சகல வழிகளிலும் மேன்மையடையப் பத்திரிகை ஒரு விசேஷ உபகரணமாயிருக்கிறது. பத்திரிகையினால் பொது அறிவு அடைந்தவர்கள், கல்வி கற்றவர்கள், தேசாபிமானம் பாஷாபிமானம் கொண்டவர்கள் எண்ணில, எண்ணில. இன்னும் இது பொது ஜன அபிப்பிராயத்தை உண்டுபண்ணுகிறது மட்டுமின்றிப், பொது ஜன அபிப்பிராயத்தையும் திட்டப்படுத்துகிறது. பத்திரிகைகள், மந்திரிகளையுங்கூட சில சமயங்களில் மதிக்காமல் மன்னர்களுக்கு மதியுரைகள் கொடுக்கும் மகத்துவம்தான் என்னே!



### அயல் நாடுகள்

கல்வி அபிவிருத்தியும், செல்வச் சிறப்பும், செல்வாக்குப் பெருக்கும், கலைகளின் வளர்ச்சியும், விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளின் பெருமிதங்களும் ஒரு தேச முன்னேற்றத்திற்கு அடையாளங்கள். இவ்வாறு முன்னேற்றமடைந்த நாடுகளில் பல பத்திரிகைகள் வெளி வருதைக் காணலாம். அங்கு ஒவ்வொரு இயக்கத்திற்கும், ஒவ்வொரு தொழிலுக்கும், ஒவ்வொரு பிரிவிற்கும் பற்பல பத்திரிகைகள் உண்டு. க்ஷவரம் செய்யும் தொழில் செருப்புத் தைக்கும் தொழில் முதலியவைகளுக்கும் பத்திரிகைகள் இருக்கின்றன. பல பத்திரிகைகளுக்குப் பல இலட்சக் கணக்கான சந்தாதாரர்கள் உண்டு. பத்திரிகையின் உண்மையான தத்துவத்தை அறிந்ததாலல்லவா மேல் நாட்டார்கள் பத்திரிகைகளுக்கும் பத்திராதிபர்களுக்கும் தனிப் பெருஞ் சிறப்புக் கொடுத்துப் பத்திரிகைகளை அதிகமாக ஆதரித்து வருகிறார்கள். பத்திரிகைத் தொழிலில் செல்வம் திரட்டியோர் பலர்; செல்வாக்குப் பெற்றோர் பலர்; கௌரவம் உற்றோர் பலர்; அதிகாரம் அடைந்தோர் அநேகர்.

ஊண், உடை, உறைவிடம் எப்படி அவசியமோ அப்படியே அவர்களுக்குப் பத்திரிகை அவசியமாயிருக்கிறது. மேனாட்டானுடைய வாழ்க்கையே பத்திரிகையில்தானிருக்கிறது போன்று அவன் நடக்கிறான். "நாகரீகமடைந்த தேசங்களெல்லாம் ஆண்டுதோறும் விளம்பரம் செய்வதற்காக மட்டும் 600,000,000 பவுன் செலவு செய்கின்றன. இதில் பாதிக்குமேற் பத்திரிகைகளுக்கே போய்ச் சேருகின்றது. ஐக்கிய ராஜ்யத்து ஆண்டின் வரவு செலவு மதிப்புத் திட்டத்தைக் காட்டிலும் இது இரண்டு மடங்கு அதிகம்," என்று டிப்பிள் என்பவர் எழுதுகிறார். பத்திரிகைகளை "அவசர இலக்கியம்" என்று அறிஞர் லார்டு மார்லி கூறுகிறார்.

வீதியில் பத்திரிகை விற்கும் பையனாகவிருந்து தனது சுய முயற்சியால் முன்னுக்குவந்து சுமார் 30 பத்திரிகைகளுக்குச் சொந்தக்காரராகி பத்திராதிப உலகத்திற்கே அரசராக விளங்கிய லார்டு

நார்த் கிளிப்பின் செல்வாக்குப் பெருக்கைச் சொல்லிமுடியாது. சில உயர்தர உத்தியோகஸ்தர்கள், மாஜி மந்திரிகள் பத்திரிகைகளுக்கு எழுதியே ஏதேஷ்டமாய்ச் சம்பாதிக்கிறார்கள். இவர்களில் மாஜி கெயிசரையும், லாயிட் ஜார்ஜையும், லார்டு பர்க்கென்ஹெட்டையும் குறிப்பிடலாம். மேலே நாடுகளில் எவ்வளவோ மூலதனம் வைத்துப் பெரும் பத்திரிகைகள் நடத்தி எவ்வளவோ சம்பாதிக்கிறார்கள். யுத்த சமயங்களில் பத்திரிகைகள் செய்யும் வேலைகள் அபாரமானது.

## ஐக்கிய ராஜ்யம்
## (United Kingdom)

இங்கிலாந்தில் 1633-ஆம் முதலாவது பத்திரிகை வெளியாகியிருப்பினும், இப்பொழுது அங்கு கணக்கற்ற பத்திரிகைகள் இருக்கின்றன. லண்டன் தபால் எல்லைக்குள்பட்டு மட்டும் 392 பத்திரிகைகள் உண்டு. இதில் 21 காலை தினசரிப் பத்திரிகைகளும், 6 மாலை தினசரிப் பத்திரிகைகளும், இங்கிலாண்டிலும், வேல்ஸிலும் 35 காலை தினசரிப் பத்திரிகைகளும், 80 மாலை தினசரிப் பத்திரிகைகளும் இருக்கின்றன. ஸ்காட்லாண்டில் 6 காலை தினசரிப் பத்திரிகைகளும், 10 மாலை தினசரிகளும், ஐர்லாண்டில் 8 காலை தினசரிகளும், 5 மாலை தினசரிகளும் இருக்கின்றன. கிரேட் பிரிட்டனே ஒரு தீவு. அதற்கடுத்த அதிகச் சிறு தீவுகளில் 5 தினசரிப் பத்திரிகைகள் நடக்கின்றன. சுமார் 4½ கோடி ஜனத்தொகை கொண்ட ஒரு தீவாகிய பிரிட்டனில் 175 தினசரிப் பத்திரிகைகளுக்கு மேலிருக்கின்றன. சில பத்திரிகைகளுக்கு அநேக லட்சக் கணக்கான சந்தாதாரர்களிருக்கிறார்கள். பின் கண்ட பிரபல பத்திரிகைகளுக்குச் சந்தாதாரர்கள் கீழ்க்கண்டவாறு:— "டெயிலி மெயில்" 1,817,147, "டெய்லி எக்ஸ்பிரஸ்" 855,000, "டெய்லி ஸ்கெட்ச்" 837,654, "ஈவினிங் நியூஸ்" 894,568, "ஸ்டார்" 802,600, "நியூஸ் ஆப் தி வொர்ல்ட்" 3,000,000. கடைசியில் சொன்ன "நியூஸ் ஆப் தி வொர்ல்ட்" என்னும் பத்திரிகை தினசரிப் பத்திரிகையல்ல. ஒரு தடவை இப்பத்திரிகையை வெளியிட



50 டன் காகிதம் செலவாகிறதாம். ஆனால் சென்ற வருடத்தில் இப் பத்திரிகையின் அரைப்பக்கத்தில் விளம்பரம் செய்வதற்காக மட்டும் 1,100 பவுன் கொடுத்தார்களாம். இந் நாடுகளில் பத்திரிகைத் தொழில் உயர்ந்த தொழிலாகிக் கொண்டிருக்கிறது.

சின்னஞ் சிறு பட்டிகளாய் 397 வீடுகள் கொண்டு 2000 பேர் அடங்கிய ஒரு கிராமத்தில் பத்திரிகைக் கடைக்காரன் விற்பனை ஜாப்தா:—லண்டன் தினசரிப் பத்திரிகைகள் 460, லண்டன் மாலைப் பத்திரிகைகள் 12, வாரப் பத்திரிகைகள் 362, ஞாயிற்றுக் கிழமைப் பத்திரிகைகள் 453, இதர மாதப் பத்திரிகைகளும் பிரசுரங்களும் 517. சுமார் 2,000 ஜனங்களுள்ள ஒரு குக்கிராமத்தில் ஆக மொத்தம் 1804 பிரசுரங்கள் விற்கப்படுகின்றன. இங்கு இவ்வாறு இவ்வளவு அதிகமாய்க் கிராம ஜனங்களும் பத்திரிகைகளை வாங்கிப் படித்து உலக விஷயங்களை யறிந்து வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டிலோ ?

## அமேரிக்கா

உலகத்திலுள்ள மனிதர்கள் அனைவரிலும் அமெரிக்கர்களே பத்திரிகைகளை அதிகமாகப் படிக்கிறவர்கள் என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட உண்மையான விஷயம். அமெரிக்கர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பத்திரிகை படிக்கும் பசி அளவு கடந்தது. ஒரு வீட்டில் சகலவித வசதிகளும் அமைத்துப் பத்திரிகை மட்டும் ஒரு அமெரிக்கனுக்குக் கொடுக்காவிட்டால், அவன் அங்கு செல்ல விரும்பான். ஆனால் அதற்கு மாறாக ஒரு வசதியற்ற வீட்டில் பல விதப் பத்திரிகைகளிருந்தால், அங்கு உடனே போய்ச் சந்தோஷமாக வாசித்துக்கொண்டிருப்பான். பத்திரிகையே அமெரிக்கனுக்குத் தோழனாகவும் துணைவனாகவுமிருக்கிறது. பத்திரிகைகள் அங்கு பொது ஜன அபிப்பிராயத்தை உண்டாக்குவதால், அதற்கு அதிக ஆற்றல் அமைந்திருக்கிறது. "அமெரிக்காவில் பிரசுரிக்கப்படும் சக்தி வாய்ந்த புஸ்தகம் சமாச்சாரப் பத்திரிகை" என்று அறிஞர் ஹென்றி வார்ட் பீச்சர் கூறுகிறார். "நாள் தவறாமல் அடங்கா

ஆவலுடன் அமெரிக்கர் படிக்கும் புஸ்தகம் சமாச்சாரப் பத்திரிகையே! என்று டாக்டர் சுதீந்திரபோஸ் சொல்லுகிறார். அமெரிக்காவில் பத்திரிகைகள் வெகு விரைவில் விருத்தியாகிக்கொண்டிருக்கின்றன.

சமீபகாலக் கணக்குப்படி அமெரிக்காவில் 2,441 தினசரிப் பத்திரிகைகளும் (இவைகளில் காலைப் பத்திரிகை 720, மாலைப் பத்திரிகை 1,721) 13,660 வாரப் பத்திரிகைகளும், 582 வாரம் இருமுறைப் பத்திரிகைகளும், 94 வாரம் மும்முறைப் பத்திரிகைகளும், 450 பட்சப் பத்திரிகைகள் அல்லது மாதம் இருமுறைப் பத்திரிகைகளும், 3,517 மாதப் பத்திரிகைகளும், 120 இருமாதப் பத்திரிகைகளும், 410 கால் ஆண்டுப் பத்திரிகைகளும், 80 பலவகைப் பத்திரிகைகளும் பிரசுரிக்கப் படுகின்றன. இவைகளைத் தவிர்த்து ஆண்டு வெளியீடுகளும் இருக்கின்றன. 1919வருஷத்தில் தினசரிப் பத்திரிகைகளுக்குச் சந்தாக்களிலிருந்து 192,819,519 டாலர்களும் (டாலர் = ரூ. 3-2-0) விளம்பரங்களின் மூலமாய் 373,501,890 டாலர்களும் கிடைத்தனவாம்! சென்ற ஆண்டில் 150 கோடி டாலர் அதாவது $468\frac{3}{4}$ கோடி ரூபாய் விளம்பரங்களில் செலவிட்டிருக்கிறார்களாம்.

அமெரிக்காவில் பத்திரிகைத் தொழில் உச்சமடைந்துகொண்டு வருகிறது. ஒரு சர்தாரண தினசரிப் பத்திரிகையை நகரத்தில் நடத்துவதற்குக் குறைந்தது 20, 30 லட்சம் ரூபாய் வேண்டியிருக்குமாம். "நியூ யார்க் டைம்ஸ்" (The New York Times) என்ற பத்திரிகை நடத்துவதற்கு அதன் சொந்தக்காரர் நாள் 1-க்கு ரூ 30,000 செலவு செய்கிறாராம். ஒக்ஸ் என்ற ஒருவர் 60 பவுன் கடன் வாங்கித் தனது கிராமத்திலிருக்கும் "டைம்ஸ்" என்ற பத்திரிகையை விலைக்கு வாங்கினாராம். அதைக்கொண்டே அந்த வறுமையுற்ற வாலிபர் தனது சுய முயற்சியால் மேன்மையுற்ற பின் "நியூ யார்க் டைம்ஸ்" என்ற பத்திரிகையை வாங்கினாராம். இப்பொழுது அதில் 3,319 தொழிலாளிகள் வேலை செய்கிறார்களாம். அதன் வருட வருமானம் 54,000,000 பவுன். வாரமொன்றுக்கு சம்பளப் பட்டிக்குமட்டும் 30,800 பவுனுக்குக் கணக்காகிறதாம்.



வருடம் 1-க்கு 1,200,000 பவுன் விலையுள்ள காகிதம் வாங்கப்படுகிறதாம். 400,000 பிரதிகள் பிரதி தினமும் 700,000 பிரதிகள் ஆதிவாரத்திலும் வெளியிடப்படுகின்றனவாம். அதற்கு 8,000 நகரங்களிலும், 100 அயல் நாடுகளிலும் சந்தாதார்கள் இருக்கிறார்களாம். "நியூ யார்க் டைம்ஸ்" ஞாயிற்றுக்கிழமைப் பதிப்பு 100 முதல் 150 பக்கம் கொண்டதாய் 2 அல்லது 3 பவுன் தூக்கமுடையதாய் இருப்பினும் 5 ஸெண்ட் ($2\frac{1}{2}$ அணா) களுக்கே விற்கப்படுகிறது. நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டு 160 முதல் 200 பக்கங்கள் வரையில் உள்ள "சாட்டர்டே ஈவினிங் போஸ்ட்" (The Saturday Evening Post) என்ற உயர்தரப் பத்திரிகையின் பிரதி 1-க்கு விலை 5 ஸெண்டுகள்தான். உருவத்திலும் உள்ளுரைகளிலும், உயர் தனி நோக்கத்திலும் உயர்தரமாகவே அமெரிக்கப் பத்திரிகைகள் பிரகாசிக்கின்றன.

### அமெரிக்க மாசிகைகள்

தினசரி வர்த்தமானப் பத்திரிகைகளைப் போன்று அவ்வளவு அத்தியாவஸ்யமாக எண்ணப்படாவிட்டாலும், அமெரிக்கர்கள் மாதப் பத்திரிகைகளை மிகவும் விரும்பி வாசித்துப் போற்றுவதால்தான் இன்று அனேக மாசிகைகள் உயர்நிலை அடைந்துகொண்டிருக்கின்றன. இலக்கியம், தத்துவ சாஸ்திரம், தேசீயம், அரசியல், விளையாட்டுகள், தையல், விவசாயம், கைத்தொழில், மதம் முதலிய இன்னும் அநேக விஷயங்களுக்கெல்லாம் பல உயர்தர மாதப் பத்திரிகைகள் நடைபெறுகின்றன. "அமெரிக்கன்" (The American) என்ற மாசிகைக்கு 22 லட்சம் சந்தாதாரர்களிருக்கிறார்கள்! இவ்விதம் பல சிறந்த பத்திரிகைகள் இருக்கின்றன. பால் போன்ற காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் அச்சிடப்பட்டு, பல வர்ணப் படங்களுடன் உயர்ந்த கட்டுரைகளைத் தாங்கிக் கொண்டு கண்ணைக் கவரும் அட்டைகளுடன் இம் மாசிகைகள் வெளி வருகின்றன.

பத்திரிகைகளுக்கும் மாசிகைகளுக்கும் வியாசங்கள் எழுதுகிறவர்களுக்கு அமெரிக்காவில் தக்கபடி வருமானம் கிடைக்கிறது. சில

கட்டுரை 1-க்கு ரூ. 7,500 முதல் 2,400 கிடைத்தனவாம். ரட்யார்ட் கிப்ளிங் (Rudyard Kipling) என்பவருக்கு 1 கட்டுரைக்காக ரூ. 75,000 கிடைத்ததாம். "அட்லாண்டிக் மன்திலி" (Atlantic Monthly) என்ற பத்திரிகை வியாசம் 1-க்கு ரூ. 225 முதல் 750 வரையும், "சென்ஸரி மகஜைன்" (Century Magazine) என்ற பத்திரிகை ஒவ்வொரு தனது கட்டுரைக்கும் ரூ. 300 முதல் ரூ. 1,200 வரையும், இன்னும் பல மாசிகைகள் பல மாதிரியும் கொடுக்கின்றன வென்று அமெரிக்காவிலிருக்கும் ஒரு இந்தியர் அறிவிக்கிறார். வீட்டிலிருந்து கொண்டே பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதிப் பிழைக்கக் கூடியவர்கள் அமெரிக்காவில் அநேகர்கள் இருக்கிறார்கள். அமெரிக்காவில் பத்திரிகைகளுக்கு எழுதும் தொழில் ரசவாதமாயிருக்கிறது. சந்தாதாரர்களின் ஊக்கத்தால் பத்திராதிபர்கள் மேன்மையாயிருக்கிறார்கள். பத்திராதிபர்களுடைய உதவியால் வியாசம் எழுதுபவர்கள் பணம் அடைகிறார்கள். உயர்ந்த அறிவாளிகளும், விற்பன்னர்களும், நிபுணர்களும், ஆராய்ச்சிக்காரர்களும் பத்திரிகைகளுக்கு அருமையான விஷயங்களை எழுதி வாசகர்களின் அறிவை விசாலிக்கச் செய்கிறார்கள். நமது அடிமைதரித்திர நாட்டிலோ?

## ஜப்பான்

சுமார் 50 வருடங்களுக்கு முன் மங்கிக்கிடந்த ஜப்பான் தேசம் இப்பொழுதிருக்கும் நிலையைக் கவனியுங்கள். எல்லாச் செல்வங்களுடன் செல்வாக்கும் பெற்று உலகம் போற்றும் வல்லரசுகளில் ஒன்றாய் உதயபானுவின் கொடியை உயர்த்தி மகிழும் நிப்பன் தேசம் இப்பொழுது தங்கமயமாய்ப் பிரகாசிக்கிறது. 1923-இல் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தால் கணக்கற்ற நஷ்டம் உண்டாகவே அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, கிரேட் பிரிட்டன் முதலிய தேசங்கள் தங்களுக்கு வியாபாரத்துறையிலும், ராஜீய விஷயத்திலும் போட்டியாயிருக்கும் தேசம்—ஆசியாக் கண்டத்தில் பலம் பொருந்திய தேசம் இனித் தொலைந்ததென்று சந்தோஷப்பட்டன. அம்மகத்தான கஷ்டங்களையும் நஷ்டங்களையும் தனது திறமையால் சரிசெய்து தனது தேச கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது ஜப்பான்.



ஜப்பானியர்களின் தேசாபிமானமும் பத்திரிகாபிமானமுமே ஜப்பான் தேசத்தின் முன்னேற்றத்திற்குக் காரணம். சுமார் 50 வருடங்களுக்கு முன் ஜப்பானில் பத்திரிகையின் பெருமையை அறியாதிருந்தும், அங்கு இப்பொழுது சுமார் 4,000 பத்திரிகைகளுக்கு மேலிருக்கின்றன. 10 லட்சம் முதல் 80 லட்சம் ரூபாய் வரை மூலதனம் வைத்துப் பத்திரிகை நடத்துகிற கம்பெனிகள் அங்கு பல விருக்கின்றன. "அஸாஹி", "ஒஸகா மைனிச்சி", "ஜிஜிசிம்போ" முதலியவைகள் அங்கு பிரபலப் பத்திரிகைகள். ஜப்பான் தலைநகரத்தில் மட்டும் 21 தினசரிப் பத்திரிகைகளும் ஒஸகா பட்டணத்தில் பல தினசரிப் பத்திரிகைகளும் வெளியிடப்படுகின்றன. பத்திரிகை அரசு லார்டு நார்த் கிளிப் "கீழ் நாட்டின் இங்கிலாந்து" என்று பிரக்யாதி பெற்ற ஜப்பான் தேசத்திற்கு வந்தபொழுது ஜப்பானில் பிரசுரமாகும் உயர்ந்த தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்துத் திகைத்துப் போய்விட்டாரென்றால், ஜப்பானியப் பத்திரிகைகளின் சிறப்புக்கள் எவ்விதமாயிருக்குமென்று நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள்.

ஜப்பானில் பத்திரிகைகளைப் பொதுஜனங்களும் கவர்ன்மெண்டும் அதிகமாக ஆதரிப்பதால் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசப்பத்திரிகைகளைக் காட்டிலும் ஜப்பானியப் பத்திரிகைகளுக்கு அதிகம் செல்வாக்குண்டு. ஜப்பான் ராஜ குடும்பத்தார்கூட ஒரு பத்திரிகை நடத்துவதாகக் கேள்வி. மேல் நாட்டாரைப் பின்பற்றியே இந்நாடு இதில் இவ்வளவு ஏற்றம் அடைந்திருக்கிறது. தேச பாஷையில் வெளிவரும் பத்திரிகைகளை அரசர்வரை அனைவரும் பொன்னே போல் போற்றி வருவதால், பாஷாபிமானம் அங்கு உச்சம் அடைந்துகொண்டிருக்கிறது. உலகில் அமெரிக்கர்களும் ஜப்பானியர்களுமே பத்திரிகைத் தொழிலில் இப்பொழுது மேன்மை பெற்று விளங்குகிறார்கள். அங்கு கந்தைத் துணி உடுத்தித் தெருத் தெருவாய் அலையும் பிச்சைக்காரன் முதல்—தோட்டி முதல் தொண்டமான்வரை பத்திரிகை படித்துப் பயனடைகிறார்கள். ஜப்பானிலுள்ள ராஜதந்திரிகள் உருவிய பட்டாக் கத்திகளுக்குப் பயப்

படுவதைக் காட்டிலும் அதிகமாகவே பத்திரிகைகளுக்குப் பயப்படுகிறார்கள். எல்லா ஜப்பானியப் பத்திரிகைகளும் தேச முன்னேற்றத்திற்கு உழைப்பவைகளே. நாட்டாருடைய அபிப்பிராயங்களையே இப்பத்திரிகைகள் கூறுகின்றன. பத்திரிகைகள் ஜப்பானியர்களுக்கு அதிக ஊக்கத்தையும், உற்சாகத்தையும், உணர்ச்சியையும் உண்டாக்கிக்கொண்டு வருகின்றன.

### ஆஸ்திரேலியா

இந்தப் புதிய கண்டத்திலும் பத்திரிகைகள் அதிகமாக வாசிக்கப்படுவதாக அந்நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவந்த ஒரு இந்தியப் பெரியார் கூறுகிறார். 3,000 ஜனத்தொகையுள்ள ஒரு கிராமத்தில் ஒரு தினசரிப் பத்திரிகையும் 10,000 ஜனத்தொகை கொண்ட ஒரு கிராமத்தில் இரு தினசரிப் பத்திரிகைகளும் நடக்கிறதாகவும் சொல்லுகிறார். லட்சக்கணக்கான சந்தாதார்கள் கொண்ட சில பத்திரிகைகள் இத்தேசத்தில் உண்டு. புதிதாக அபிவிருத்தி அடைந்த நாடாயிருப்பினும், பத்திரிகை விஷயத்தில் அதிக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. "உண்மை" (Truth) என்ற வாரப் பத்திரிகைக்கு 450,000 சந்தாதார்கள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

### கானடா

இந்நாட்டிலும் பல உயர்தரப் பத்திரிகைகள் தோன்றி, மேன்மை அடைந்துகொண்டிருக்கின்றன. ஐரோப்பியர்கள் எங்கு சென்றாலும் பத்திரிகை விதையை அவசியம் விதைத்தே விடுவார்கள்.

### ஆப்பிரிக்கா

தென்னாப்பிரிக்காவிலிருக்கும் பத்திரிகைகள் சில சமயங்களில் பத்திரிகா நிருபர்களைச் சிறு ஆகாய விமானங்களில் ஏற்றி அயல்நாடுகளுக்கனுப்பி, அங்கிருந்து கொண்டுவந்த சங்கதிகளைத் தெரிந்து, பத்திரிகைகளில் செய்திகளையும் விஷயங்களையும் பிரசுரிக்கிறதென்றால், தென்னாப்பிரிக்காவில் பத்திரிகைகளின் பிரபல்யத்தை விவரிக்கத் தேவையில்லை.



### கிரீன்லாண்டு

கிரீன்லாண்டு தேசத்தில் வசிப்பவர்களுக்கு **எஸ்கிமோ** என்று பெயர். இவர்களுடைய வீடுகள் பனிக்கட்டிகளால் ஆக்கப்பட்டவைகள். இவர்கள் வேட்டையாடும் ஜந்துக்களின் தோல்களே இவர்களின் ஆடைகள். இவர்கள் மிகவும் குள்ளர்கள். மிக மிகக் குளிரான கிரீன்லாண்டு தேசத்தின் பனி மலைகள் சமாச்சாரப் பத்திரிகையின் ஆவேசத்தைத் தணித்துக் குளிர்ச்செய்து பனிக்கட்டியாக்கிவிட முடியவில்லை. சென்ற பெரும்போருக்கு முன்பு டென்மார்க்கு தேசத்தில் அச்சுவேலை பழகிய ஒரு எஸ்கிமோவினால் எஸ்கிமோ பாஷையில் ஒரு சிறிய பத்திரிகை நடக்கிறது. மொத்தப் 15,000 எஸ்கிமோ ஜனங்களுக்கு 2,500 பிரதிகள் அச்சிடப்பட்டு ஒவ்வொருவருக்கும் இனாமாகக் கொடுக்கப்படுகிறது. உலகத்தில் பாதி நாகரீகமடைந்தவர்களுக்குங் கூடப் பத்திரிகாபிமானம் உண்டாகியிருக்கிறதென்பதற்கு எஸ்கிமோ ஜாதியார்களே உதாரணமாய் இன்று விளங்குகிறார்கள்.

### இங்கிலீஷ் பாஷையில் பத்திரிகைகள்

தினசரி, வார, மாதப் பத்திரிகைகளெல்லாம் சேர்ந்து, உலகத்தில் ஏறக்குறைய 60,000 பத்திரிகைகள் இருக்கின்றனவென்றும், இதில் சுமார் 25 000 பத்திரிகைகள் அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலே (U. S. A.) இருக்கின்றனவென்றும், ஆங்கில தினசரிப் பத்திரிகைகள் ஐக்கிய மாகாணங்களில் ஏறக்குறைய 2,000மும், கானடாவில் 100-ம், பிரிட்டனில் 175-ம், மற்ற தேசங்களில் கிட்டத்தட்ட 100-ம் இருக்கின்றனவென்றும், இவைகளில் ஏறக்குறைய 2,400 ஆங்கில தினசரிப் பத்திரிகைகள் உலகில் இருக்கின்றனவென்றும், லண்டன் உட்பட சில முக்கிய பிரிட்டிஷ் மாகாணங்களிலும் சேர்ந்து 1,000,000 பத்திரிகைகள் நாள் 1-க்கு வெளி வருகின்றனவென்றும் "பிரிட்டிஷ் பிரிண்டர்" (The British Printer) என்ற பத்திரிகை கூறுகின்றது.

ஆங்கிலப் பத்திரிகைகளை ஆராய்ந்து பார்த்தால், ஆங்கில பாஷையில் ஆண்டுதோறும் கோடானு கோடிப் பக்கங்கள் வெளியிடப்பட்டு உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் கோடா கோடி ஜனங்களால் வாசிக்கப்படுகின்றன. இவ்வாறு இப்பொழுது உலகத்தில் உன்னதமடைந்து விளங்குவது இங்கிலீஷ் பாஷையே. நமது தமிழ் நாட்டில் எத்தனை பத்திரிகைகள் இருக்கின்றன. பத்திராதிபர்களின், பத்திராசிரியர்களின் நிலை என்ன? **“பத்திரிகை படிக்காதவன் பாதி மனிதன்”** என்ற உண்மை மொழிக்கு இந்தியாவில் தற்சமயம் தமிழர்களே இலக்காயிருக்கிறார்கள் என்பது அறியப்படுகிறதா? தமிழர்களுக்குத் தக்கபடி பாஷாபிமானமிருந்தால் தமிழ் தழைத்தோங்கி உச்சமடைந்திருக்கும்; பற்பல தமிழ்ப் பத்திரிகைகளும் பெருகித் தமிழகத்தை அலங்கரித்துத் தமிழ் மணத்தைச் சதா கமழ்ந்துகொண்டேயிருக்கச் செய்திருக்கும். இப்பொழுதோ?

## இந்தியா

இந்தியாவானது ஏறக்குறைய 33 கோடி ஜனத் தொகை கொண்ட தேசம். தமிழ் நாட்டில் 25 000 கிராமங்களிருக்கின்றன. இங்கு பத்திரிகாபிமானம் என்பது தக்கபடி கிடையாது. சில விஷயங்களில் முற்காலத்தில் முற்போக்கடைந்திருந்தாலும், இன்று இந்தியா உலக வாழ்வில் பல வழிகளில் பின்னடைந்திருக்கிறது. சென்ற ஐரோப்பிய யுத்தம் நடக்கும் காலத்தில்தான் பொதுவாக இந்தியாவிலும் முக்கியமாகத் தமிழ் நாட்டிலும் பத்திரிகை படிக்கும் வழக்கம் சிறிது பரவியிருக்கிறது. நமது செந்தமிழ் நாட்டில் நுழைந்து பார்த்தால், உயரிய நூற்கள் பலப்பல; ஆனால், பத்திரிகைகளோ சிலச்சில இருக்கக் காண்கிறோம். நமக்கு இப் பத்திரிகைகள் போதாது, போதாது. இன்னும் ஏராளமான பத்திரிகைகள் வெளிவந்துலாவ வேண்டும். ஒவ்வொரு தொழிலுக்கும், ஒவ்வொரு இயக்கத்திற்கும் பற்பல பத்திரிகைகள் தோன்ற வேண்டும். இப்படி எம்முறைக்கும் பத்திரிகை இருந்துவர வேண்டும் என்பதே எனது பேரவா. நமது நாட்டில் சில பத்திரிகைகள் ஆரம்பத்தில் ஆர்வத்துடன் தோன்றினாலும், ஆதரிப்பாரற்று விடுவதால், அப்படியே மறைந்தும், ஒழிந்தும் போகின்றன. தமிழகத்தில் நிலவுகிற பத்திரிகைகள் ஒன்றேனும் போதிய சந்தாதார்களைப் பெற்று, அபிவிருத்தி அடைந்துகொண்டு வருவதாகத் தெரியவில்லை.



தேசாபிமானிகளாயிருக்க வேண்டுமானால், பாஷாபிமானிகளாயிருக்க வேண்டுமானால், பத்திரிகாபிமானம் இருந்தாலன்றி முடியாது. தேசம் சுதந்திரமடையவும், மதத்தின் பெயரால் நமது நாட்டில் பரவியிருக்கும் அருத்தமற்ற பொருத்தமற்ற மூடக் கொள்கைகளை அடியோடு அதம் செய்து அடிமைத் தனத்தை அகற்றி ஜனங்களைத் தட்டித் தட்டி எழுப்பவும் அநேக பத்திரிகைகள் தேவை, தேவை. எந்நாடு பத்திரிகைகளை ஆதரிக்கவில்லையோ அந்நாடு வாயற்று ஊமையாய்க் கிடக்கிறதென்றே சொல்ல வேண்டும். பத்திரிகைகளின் மூலமாகத்தான் இந்தியாவில் தேசீயம் இவ்வளவேனும் விருத்தியாகியிருக்கிறது; சமூகச் சீர்திருத்தமும் உண்டாகியிருக்கிறது.

இந்நாட்டில் ஆங்கிலத்தில் வெளிவரும் பத்திரிகைகளுக்குத்தான் விசேஷ மரியாதை. ஏன்? சுதேச பாஷையில் பிரசுரமாகும் பத்திரிகைகளை வாங்குவதும், வாசிப்பதும் அகௌரவமென்று நம்மவர்கள் நினைப்பதாலேயே. உயர்ந்த உத்தியோகஸ்தர்களும், கண்ணியவான்களும், படித்தவர்களில் பலரும், தேசமக்களில் அநேகரும் தாய் பாஷைப் பத்திரிகைகளை அலட்சியம் செய்வதால், பாஷாபிமானம் குன்றிக்கொண்டு வருகிறது. இதனால் நாட்டு மொழியில் வெளிவரும் பத்திரிகைகள் ஊக்கம் குறைந்து, நோக்கங்கள் சிதைந்து, போக்குகள் மாறி, நாளடைவில் மறைந்துவிடுகின்றன. இவ்விதம் பற்பல இடையூறுகளுக்கெல்லாம் தப்பித் தவறி, நின்று நிலவி வரும் பத்திரிகைகள் சில இருப்பது நமது தேசம் செய்த தவப்பயனேயாகுமென்று கொஞ்சமும் அஞ்சாமல் கூறலாம். அன்றியும் அரசாங்கம் அயல் மொழியை அதிகமாக ஆதரிப்பதால், சுதேச பாஷையின் வளர்ச்சி குன்றிவிட்டது. நமது மாகாணத்திற்கே தலை நகராகிய சென்னையிலிருந்து மூன்று தமிழ் தினசரிப் பத்திரிகைகளே

வெளியிடப்படுகின்றன. அவைகளுக்குங்கூடப் போதிய சந்தாதார்கள் கிடையாது. உயர்தர வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் தமிழ் நாட்டில் மிகச் சிலவேயிருக்கின்றன. பத்திரிகாபிமானம் பலமாயிருந்தால், பல பத்திரிகைகள் அடிக்கடி தோன்றி விருத்தியாகிக் கொண்டேயிருக்கும். இந்தியா விவசாய நாடு. அப்படியிருந்தும் தமிழ் நாட்டில் அற்ப சந்தாக்களில் மூன்று விவசாயப் பத்திரிகைகளே வெளிவருகின்றன. சென்னையில் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படும் கௌரவம் வாய்ந்த பத்திரிகையாகிய "ஹிந்து"வுக்குங்கூட 10,000 சந்தாதார்களுக்குமேல் இல்லையென்றால், மற்ற தமிழ்ப் பத்திரிகையைப் பற்றிப் பேசக் கொஞ்சமும் இடமில்லை.

4½ கோடி ஜனங்களுள்ள இங்கிலாந்தில் வெளியேறும் பத்திரிகைகள் 3,000-க்கு மேலிருக்கும்பொழுது, ஜப்பான் ஒரு சிறு தீவாயிருந்தும் லட்சக்கணக்கான சந்தாதார்களுடைய பல பத்திரிகைகள் பிரசுரமாகும் பொழுது, இன்னும் அங்கு 4,000 பத்திரிகைகளுக்கு மேலாக நடைபெறும் பொழுது, கிரீன்லாண்டில் உறைபனியால் எப்பொழுதும் கஷ்டமடைந்து கொண்டிருக்கும் கேவலம் பாதி நாகரீகமடைந்த மொத்தம் எஸ்கிமோ 15,000 பேர்களுக்கு 2,500 பத்திரிகைகள் வெளிவரும் பொழுது, எத்தனையோ தேசங்கள் பத்திரிகைகளையே பிரதானமாகக் கருதி, அநேக சீர்திருத்தங்களை அடைந்துகொண்டு வரும்பொழுது, நமது இந்தியாவில்மட்டும் பத்திரிகை விருத்தியாகாதது நமது துர் அதிர்ஷ்டமே. இதனால், இங்கு தேசாபிமானம் ஓங்கி வளரவில்லை; பாஷாபிமானம் விருத்தியாகவில்லை. "தேச பக்தி இல்லாதவனுக்கு வேறெதிலும் பக்தி இருக்கமுடியாது" என்று கவி பைரன் கூறுவது இங்குக் கவனிக்கத்தக்கது.

இன்னும் இந்தியர்கள் பலவித கூடாப் பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். ஜப்பானியர்கள் உயர்வுக்கும் அமெரிக்கர்களின் ஐஸ்வர்யத்திற்கும் ஆங்கிலர்களின் உன்னதஸ்தானத்திற்கும் வெள்ளையர் நாடுகள் பலவழிகளில் முன்னேறிக்



கொண்டு போவதற்கும் பத்திரிகைகளே ஆதாரம். அந் நாடுகளில் சுதந்திரம் தாண்டவமாடுவதற்குப் பத்திரிகைகளே முக்கிய முதற் காரணம். நாட்டின் விடுதலைக்காக ஓயாது தீவிரமாய் உழைப்பதற்குப் பத்திரிகையைப்போன்ற சாதனம் வேறில்லை. இது பத்திரிகை யுகம்; பத்திரிகை உலகம். நமது தேசத்தில் தேசாபிமானம் பொங்கித் ததும்பவேண்டுமானால், பாஷாபிமானம் உயர்ந்தோங்க வேண்டுமானால், உண்மையான நமது பண்டைப் பெருமைகளை நாம் மீண்டும் அடையவேண்டுமானால், நமது விவசாயம் கைத்தொழில் கலை முதலியவைகள் நூதன உயிர் பெற்றெழவேண்டுமானால், தேசத்தில் புத்தம் புதிய ஆவேசம் கிளம்ப வேண்டுமானால், நமது நாடு மற்ற நாடுகள்போன்று தலை சிறந்து விளங்கவேண்டுமானால், பலவித இயக்கங்கள் உண்டாகவேண்டுமானால், மக்களிடை சமரசம் உதயமாகவேண்டுமானால் நாட்டிற்கு நலம் செய்யும் பத்திரிகைகளைத் தக்கபடி அபிமானித்துப் போற்றி ஆதரிக்கவேண்டும்.

இவ்வாறெல்லாம் மேன்மைவாய்ந்த பத்திரிகைகளின் பெருமைகளை ஒருவாறு அறிந்து, அடிமைப்பட்டுக் கிடக்கும் எனதருமைத் தாய் நாட்டார்க்குப் பத்திரிகையின் மூலம் என்னாலான தொண்டு செய்யவிரும்பி, மத பேதமற்று ஜாதி பேதமற்றுக் கட்சி பேதமற்று எவ்வித ஏற்றத் தாழ்வின்றி இந்தியரனைவரும் ஒரு தாயாகிய பாரத தேவியின் மக்கள் என்ற மேலான கொள்கையுடன், நாட்டில் இப்பொழுது நிலவிவரும் அருத்தமும் பிடித்தமுமற்ற சில கூடாப் பழக்க வழக்கங்களை நிர்மூலம் செய்யப் பிரச்சாரம் செய்துகொண்டே தேசாபிவிருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக் கருதி, தேசீய மணம் மணக்கும் மாசிகை யொன்றைப் "பாரதி" என்ற திருநாமத்துடன் வெளியிடுகிறேன். பாரதத் தாயிடம் நான் கொண்ட அன்பே என்னை இத்தொண்டில் பிரவேசிக்க நியமித்திருக்கிறது. சமூகப் பத்திரிகை யொன்று சொற்ப காலம் நடத்தி அற்ப அனுபவம் பெற்றிருக்கும் என்னை-இப்பொழுது திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் ஆதரவில் "ஏல விவசாயி" என்னும் பத்திரிகையை நடத்திக்கொண்டு வருகிற என்னை என்னுள் பொங்கித் ததும்பும் தேசபக்தியே இத்தொண்டில் ஈடுபடும்படி செய்திருக்கிறது. எனது தேனொழுகும் தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகளை நம்பியே இப்பெருங் காரியத்தில் பிரவேசித்திருக்கிறேன். எனது கடின உழைப்பும், தமிழ்ச் சகோதர சகோதரிகளின் உயரிய உதவிகளும் சேர்ந்து பத்திரிகை வடிவாக மாறித் தேசத்திற்கு வேண்டியவைகளைச் செய்யட்டும்.

"எனது பாரத நாட்டு வாலிப வீர மக்கள் ஒன்றுபட்டு வீர மணிகளாய்ப் பிரகாசிக்கிறார்கள்; எனது ஜென்ம பூமி, உரித்தான சுதந்திரம் அடைந்து விட்டது; எனது மாதுரு பூமி உலகுக்கு பரத கண்டத்தின் உயர்வை விளக்கிவிட்டது; உலகம் இந்தியாவை மதிக்கிறது; எனது வீரத் தாய்மார்கள் உண்மை நாகரீகத்தைப் பின்பற்றி உரித்தான சுதந்திரம் அடைந்துவிட்டார்கள்; பாரத நாடு தன் அறிவிலும், ஆற்றலிலும், செல்வத்திலும், கல்வியிலும், கலைகளிலும், விளைவிலும், வியாபாரத்திலும் இணையற்று விளங்குகிறது; என்னாடு—என் பொன்னாடு தரித்திரம் இனி என்றென்றும் அடையாது" என்று, என்று ஏற்படுகிறதோ அன்றே என் ஜன்மம் சாபல்யமாகும் காலம் ஆகும். எனது கடமை பூர்த்தியாக வேண்டும். எனது தாயின் ஆசிகளைப் பிரார்த்தித்து நிற்கிறேன்.

அறிஞருடைய உள்ளங்களிலிருந்து அரும்பிய அலர் (மணி) களாகிய கட்டுரைகளால் தொடுக்கப்பெற்ற மாலையை மாதந்தோறும் மாட்சிமை வாய்ந்த மாதா பாரதிக்குச் சூட்டி அலங்கரித்து வணக்கம் செலுத்த அடியேன் தீர்மானித்திருக்கிறேன். இப் பணி எனது சகோதர சகோதரிகளின் உள்ளங்களைக் களிப்பிக்குமென்ற திடமான நம்பிக்கை என்னில் பலமாயிருக்கிறது. எனது புதிய, ஆனால் தேசாபிமானம் மிக்க இச் சிறு மாசிகையைத் தமிழ் நாட்டு வாலிப மணிகளுக்கும் யௌவன வனிதா ரத்னங்களுக்கும் அர்ப்பணம் செய்திருக்கிறேன். இப் பத்திரிகையை வளர்த்துக் காப்பது தமிழ் மக்களது கடமையாகும். பெரியாரின் ஆசிகளும், செல்வர்தம் ஈகையும், அறிவின் மிக்காரின் ஆற்றல் வாய்ந்த கட்டுரைகளும் இப் பத்திரிகைக்குக் கிடைக்குமென்று எதிர் பார்க்கிறேன். பற்பல அரிய கட்டுரைகளுடன் தேச சேவை செய்யத் தூண்டிக்கொண்டு விடுதலையே தனது நோக்கமாக வெளிவரும் இப் பத்திரிகையை எனது தமிழ் நாட்டுப் பிரிய சகோதர சகோதரிகள் அன்புடன் ஆதரிக்குமாறு இன்னும் பின்னும் வேண்டுகிறேன்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

**ரா. நாராயணஸ்வாமி,**
**ஆசிரியர்.**



# "பாரதி"யில் வெளிவரும் விஷயங்கள்.

(1) **தேசாபிமானம்:**—சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இவற்றைச் சாதிப்பதற்கேற்றவழிகள். தற்காலம் நாட்டு நிகழ்ச்சிகளின் மீது செல்லும் விரிவுரைகள்.

(2) **பாஷாபிமானம்:**—தாய்மொழியாகிய தமிழ் தழைக்க வேண்டிய முறைகள். தாய்மொழி பிறமொழிகளின் தன்மை, வளர்ச்சி, வரலாறு, கீதங்கள், செய்யுட்கள் முதலியன.

(3) **சமயம்:**—உலகியல் சமயங்களின் உண்மைகள், பெருமைகள், உபதேசங்கள். ஒழுக்க வளர்ச்சி, சர்வ மத சமரசம், ஏகேசுவர உபாசனை (ஒரு தெய்வ வணக்கம்) முதலியன.

(4) **ஆசார சீர்திருத்தம்:**—நமது நாட்டில் பரவியுள்ள பொருத்தமும், அருத்தமும், அவஸ்யமுமில்லாமல் உண்டாயிருக்கும் அனாவசியமான ஜாதி சமயச் சடங்குகள், கட்டுப்பாடுகள், அவற்றை ஒழிப்பதற்கான வழிகள். சமூக சமத்துவத்தைச் சாதிக்கவும், தீண்டாமையை ஒழிக்கவுமான முயற்சிகள்.

(5) **ஜீவிய சரித்திரங்கள்:**—நமது நாட்டில் மக்கள் நலத்திற்காகப் பாடுபட்ட தேசாபிமானிகள், இன்னும் உலகில் அரிய பெரிய காரியங்களைச் செய்த பெரியார்கள், நூதன விஷயங்களைக் கண்டுபிடித்த அறிஞர்கள் முதலியவர்களின் சரிதங்கள், அவர்களின் மாணிக்கம் போன்ற திருவாசகங்கள்.

(6) **விவசாயம்:**—அயல்நாடுகளில் அனுஷ்டித்து வரும் நூதன விவசாய முறைகளைக் கண்டறிந்து, நமது நாட்டிற்கேற்றவாறு சாஸ்திரீய முறைகள், ஆராய்ச்சி சம்பந்தமான வழிகள்.

(7) **தொழிலும் வியாபாரமும்** :—புராதன தற்கால நூதனக் கைத் தொழில்கள், வர்த்தக முறைகள், அபிவிருத்திக்காக வேண்டிய கூட்டுறவு, பாங்குகள் முதலிய பிறவும்.

(8) **சரித்திரம்** :—நமது நாட்டின் முற்கால தற்கால சரித்திர சம்பவங்கள், ஆராய்ச்சிகள், சரித்திர சின்னங்கள்.

(9) **கலை வளர்ச்சி** :—விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி, நவீன இயந்திர சாதனங்களின் பிறப்பு, வளர்ச்சி, அமைப்பு, பயன் முதலியன. சிலநூல், விண்ணூல், ஐம்பெரும் பொருள் நூல், உடல் நூல் முதலியவைகளைப் பற்றிய உரைகள்.

(10) **பொருளாதாரம்** :—நமது நாட்டின் செல்வ நிலைமையை அயல் நாடுகளுடன் ஒப்பிட்டு வெளிவரும் கணக்குகள், அறிக்கைகள். ஏற்றுமதி இறக்குமதியைப் பற்றிய விவரங்கள்.

(11) **வாலிபர்கள்** :—வாலிப இயக்கத்தைத் தீவிரமாக உண்டாக்குவதற்கான காலத்திற்கேற்ற கட்டுரைகள், சரித்திரங்கள். மகாத்மா காந்தி, கரிபால்டி, மாஜினி, கமால் பாட்சா, லெனின், ஜகுல்பாட்சா, ரவீந்திர நாத் தாகூர், போஸ், வாஸ்வானி முதலிய அநேக அறிஞர்களது அமிர்தமொழிகள்.

(12) **பெண்கள்** :—இப்பொழுது நமது நாட்டில் மாதரசிகளுக்கு ஏற்பட்டிருக்கும் அடிமைத்தனத்தை நிர்மூலம் செய்யும் வழிகள், பெண் விடுதலைக்கு முக்கியமாக வேண்டிய உரைகள், மாதர் இயக்கத்தைப் பரப்புவதற்கு வேண்டிய வழிகள், உதாரணங்கள், கட்டுரைகள் முதலியன.

(13) **அயல்நாடுகளில் நமது சகோதரர்கள்** :—அயல்நாடுகளில் நமது இந்தியர்களின் நிலை, அவர்களுக்கு உதவி செய்யவேண்டிய வழிகள்.

(14) **கிராம நிர்மாணம்** :—கிராமங்களின் நிலைமையை உயர்த்துவதற்கான யோசனைகள், திட்டங்கள்.



(15) **அயல் நாடுகள்** :—இப்பொழுது உலகத்தில் உயர்வு பெற்றுக் கொண்டிருக்கும் தேசங்களின் அமைப்புக்கள்; அந் நாடுகளின் அபிவிருத்திக்குக் காரணங்கள், அங்கே பரவியிருக்கும் பல வகை இயக்கங்கள், பல தேசங்களிலிருந்து நாம் அவசியம் அறிந்து அனுஷ்டிக்க வேண்டியவைகள்.

(16) **கதைகள்** :—ஒன்று அல்லது இரண்டு மணிகளில் முடியக்கூடிய சீர்திருத்தத் துறையைப் பற்றிச் செல்லும் சிறு சிறு நவீனங்கள்.

(17) **விநோதங்கள்** :—அதிசயங்கள், விடுகதை முதலியன.

(18) **ஆசிரியர் குறிப்புகள்** :—நமது நாட்டில் நிகழும் முக்கிய சம்பவங்களைப் பற்றிய விவரங்களும் அவற்றின் மீது ஆசிரியரின் அபிப்பிராயங்களும்.

(19) **ஆசிரியத் திரட்டுகள்** :—பல் வேறு பத்திரிகைகளிலும் நூல்களிலும் காணப்படும் விஷயங்கள்.

(20) **ஆராய்ச்சி மேடை** :—இத் தலைப்பில் அபிப்பிராயத்திற்கு வரும் புஸ்தகங்கள், பத்திரிகைகள், பொருள்கள் முதலியவற்றின் மீது மதிப்புரைகள்.

(21) **வருத்தமானச் சுருக்கம்** :—உலகின் நாலு பக்கங்களில் நடக்கும் சம்பவங்களின் சுருக்கமான வர்த்தமானங்கள், ஆச்சரியமான சம்பவங்கள் முதலியன.

(22) **படங்கள்** :—சமயம்போல் விஷயத்தை அனுசரித்த படங்கள், முக்கியமானவர்களின் படங்கள்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

# தேசாபிமானம்*

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் உலகத்திற்குச் செய்யவேண்டிய கடமை ஒன்றுண்டு. அவனுடைய மனது நிர்மலமாக, பாகுபாடு செய்யாமல் உலகத்திலுள்ள ஜீவராசிகளையெல்லாம் சகோதர வாஞ்சையுடன் நேசிக்கவேண்டும். உலகமெல்லாம் ஒரு பெரிய குடும்பம்; கடவுள் இக் குடும்பத்தின் தந்தை; இக்குடும்பத்தினுடைய ஒற்றுமையை, அன்பு நெறியைத் தழுவி நடந்து பலப்படுத்த வேண்டுமென்பது பரம பிதாவாகிய கடவுளுடைய கட்டளை. எவனொருவன் இக்கட்டளையைத் தழுவி நடக்கத் தவறுகிறானோ, எவன் உலக ஒற்றுமையைப் புறக்கணித்துவிட்டு வேற்றுமையை நாடுகிறானோ, எவன் காலக் கொடுமையால் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் எளியாருக்குச் சகோதர அன்புடன் தன்னாலான உதவியைச் செய்யப் பின்னடைகிறானோ அவன் உயிருள்ள ஜீவாத்மா வல்லன்; அவன் மனிதனல்லன்; அவன் ஈஸ்வரனுடைய பேரன்புக்குப் பாத்திரவானல்லன் என்றே சொல்லுகிறேன்.

* ரோம் ராஜ்யத்தின் பண்டைப் பெருமைகளெல்லாம் அழிந்து, அடிமையாய்க் கிடந்த இத்தாலி தேசம் மறுபடியும் விடுதலை அடையும் பொருட்டு, அரும் பெரும் சேவை புரிந்து, அதன் பயனாக அநேக வருஷ காலம் சிறையில் அடைபட்டுக் கிடந்த ஜோஸப் மாஜினி என்னும் பெரியாரது ஒரு வியாசத்தை சில இடங்களில் மொழிபெயர்த்தும் காலத்துக்கும் தேசத்துக்கும் தக்கவாறு சில இடங்களில் தழுவி எழுதியும் தேசாபிமானம் என்னும் தலைப்பின் கீழ் இங்கு எழுதப்பட்டிருக்கிறது. இவ் விடுதலை வீரரின் தேச பக்தி தகதக வென்று கொதிக்கும் ஆவேச வாக்குகளை ஆழ்ந்து படித்து நவ எழுச்சியைப் பெறுங்கள்.



உலகம் க்ஷேமமாக முன்னேறுவதற்கு, கேவலம் ஒரு தனித்த சிறு மனிதனாகிய நான் என்ன செய்ய முடியும்? என்று ஒவ்வொருவரும் கேட்கக்கூடும். மனிதர்களே! சகோதரர்களே! உங்களுடைய உள்ளத்திலடங்கிக் கிடக்கும் உன்னதமான லக்ஷியங்களை உலகத்தாருக்குத் தெளிவாக நீங்கள் புகட்டலாம். உலகத்தில் தரித்திரப் பிணியால் பீடிக்கப்பட்டுழலும் ஏழைக்கு நீங்கள் பேருதவியாயிருக்கலாம். கஷ்டப்படும் ஏழை உங்கள் தேசத்தவனாயிருந்தால் மட்டுமே நீங்கள் அவனுக்கு உதவி செய்யக் கடமைப் பட்டவர்களென்று நினைத்துவிடாதேயுங்கள். அது ஒரு குறுகியநோக்கம். எத்தேசத்தவனானாலும் சரி; உங்களுடைய உதவியால் அவனுக்கு நன்மை யேற்படுமானால், உடனே அவ் வுதவியை நீங்கள் செய்து முடிக்கவேண்டும். இப்போது நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாம். எவ்வாறு உலகத்தாருக்கெல்லாம் உதவியாயிருந்து என்னால் உழைக்கமுடியும்? மதங்களாலும், இயற்கையமைப்பினாலும், நடையுடை பாவனைகளாலும் பல்லாயிரக் கணக்காகப் பிரிவுற்றிருக்கும் இவ்வுலகம் ஒற்றுமைப்பட்ட ஒரு குடும்பமென எவ்வாறு கொள்ள முடியும்? அதன் பொது நன்மைக்கு எம்மால் ஒரு சிறு மனிதனால் என்ன செய்யமுடியும்? ஆகிய இத்தகைய கேள்விகள் உங்களுடைய மனத்திலெழக்கூடும். அன்புள்ள சகோதரர்களே! தயங்காதீர்கள்!! மயங்காதீர்கள்!!! உலகம் பெரிதுதான். நீங்கள் சிறியவர்களே. ஆண்டவனைப் பார்த்து மாலுமி என்ன வேண்டிக்கொள்கிறானென்பதைக் கவனியுங்கள். நடுக் கடலிலிருக்கும் மாலுமி முழந்தாளிட்டுக் கடவுளை விளித்து, "பரம பிதாவே! என்னுடைய மரக்கலமோ மிகச் சிறிது; உமது கடலோ எல்லையற்றது. ஆயினும் என்னைக் காப்பாற்றும்" என வேண்டுகிறான். இப் பெரிய உலகத்தில் நீங்கள் உங்கள் கடமைகளைச் சர்வரச் செய்து முடிப்பீர்களேயானால், உலகம் தானாகவே சீரும் சிறப்பும் பெறுவதாகும்.

உலக முன்னேற்றத்தை எவ்வாறு பெருக்குவது என்ற கேள்வி பிறக்கிறது. கடவுள் உங்களுக்கென்றொரு தாய்நாட்டை யளித்திருக்கின்றாரல்லவா? அதன் மூலமாக—அத் தாய்நாட்டுக்குப் பணி

செய்வதன் மூலமாக நீங்கள் உலகத்திற்கு அரிய தொண்டுகள் பல செய்யலாமென்பதை நன்றாக ஞாபகத்தில்வைத்துக் கொள்ளுங்கள். ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன்; கேளுங்கள். ஒரு பெரிய தொழிற்சாலை நிர்வாகம் செய்கின்ற தலைவன், தொழிலாளிகளுடைய சக்திக்குத் தக்கபடி வேலைகளைப் பகிர்ந்து கொடுக்கிறான். தத்தம் வேலையை அத் தொழிலாளிகள் செவ்வனே செய்து முடிப்பதால், அவ் வேலை சீரும் சிறப்பும் பெறுகிறது. அதேபோல் இப் பூவுலகு ஓர் தொழிற்சாலை; ஆண்டவன் இதை நிர்வகிக்கும் அதிகாரி; பல தேசங்கள் தொழிலாளிகள். ஒவ்வொரு தேசமும், அதாவது ஒவ்வொரு தேசத்தாரும், அவரவருடைய நிலைமைக்கும் சக்திக்கும் தக்கவாறு தமது கடனாற்றினால் உலகத்தின் பொது நலம் தானே பெருகுவதாகும். கடவுளின் இத்தகைய சிறந்த அமைப்பை, உலகப் பிரிவினையை, தன்னலம் கருதிய மனிதர்கள், இராணுவ பலங்கொண்டு மதமதத்துத் திரியும் கவர்ன்மெண்டுகள் சீர்குலைத்துவிட்டன. ஒவ்வொரு தேசத்திற்கும் தனித்தனியான அழகையும் அமைப்பையும் கடவுள் அளித்திருக்கிறார். ஒரு தேசம் இன்னொரு தேசத்தை வசப்படுத்திக் கெடுப்பதற்கு உரிமையே கிடையாது. தன்னலமும், பேராசையும், பெருமையும் எழுந்து உலகத்தைப் பாழாக்கி விடுகின்றன. சீதோஷ்ணத்தையும், பூமியின் அமைப்பையும் தழுவியே உலகம் பல தேசங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக சுயேச்சையுடனிருந்து தமது கடமைகளைச் செய்யாவிடின், உலகப் பொது நலம் பெருகுவதெப்படி? ஆகவே ஒவ்வொருவரும் தங்களுடைய தேசத்தைச் சுயேச்சையுடனும், தக்க பலத்துடனும் காத்துக் கொள்ளக் கடமைப்பட்டவராயிருக்கிறார்.

எனது பிரியமுள்ள சகோதரர்களே! உங்களுடைய தாய் நாட்டை முழு மனதுடன் நேசியுங்கள்!! அது உங்கள் வீடு; ஆண்டவனுடைய பெருங் கருணையால் உங்களுக்களிக்கப்பட்ட இடம்; அதில் ஒரு பெரிய குடும்பம் வாழுகின்றது; அக் குடும்பம் உங்களை அன்புடன் நேசிக்கின்றது; நீங்களும் அக் குடும்பத்தை அன்



பாக ஆதரியுங்கள். நமது தேசம் நமக்குப் பொதுவான ஒரு பெரிய தொழிற்சாலை. இச் சாலையில் நாம் செய்பவைகள் உலகத்திலுள்ள யாவருக்கும் பிரயோசனப்படத் தக்கவைகளா யிருக்கவேண்டும். நமது தேச நலத்திற்காக உழைத்து, நமது தாய்நாடு முன்னேற்றமடையுமானால், உலகம் நிச்சயமாக முன்னேறவே செய்யுமென்பதை நம்புங்கள். எந்த தேசம் தன்னுடைய குழந்தைகளால் அவமதிக்கப்பட்டுத் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றதோ, அத் தேசம் பாழென்றே கொள்ளவேண்டும். அதனால் உலகத்துக்குத் தீமையேயன்றி நலமோ யில்லை. உலகம் பூராவும் ஒரு முகமாக நின்று மறத்தை வீழ்த்தி, அறத்தை நாடிப் பெருஞ் சமர் செய்து கொண்டே போகின்றது. இப் பெருஞ் சமரில் அணிவகுத்து நிற்கும் சைனியங்களே பல தேசங்களாயிருக்கின்றன. ஒரு தேசம் பலஹீனமாயிருக்குமானால், இச்சமரில் வெற்றி எங்ஙனம் கிடைக்கும்? மறம் எவ்வாறு வீழும்? அறம் எங்ஙனம் தழைக்கும்? சகோதரர்களே! உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். கடவுள் இட்ட கட்டளையான இக் கடும் போரில் இளைத்துப் பின்னடையாதீர்கள்! கடவுள் கொடுத்த தர்மக் கொடியைத் தளர்வுடன் தாழ்த்திவிடாதீர்கள்!! உமது தாய்நாட்டின் சுதந்திரத்திற்காகக் கடமையைச் செய்ய உடனெழுவீர்களா? சமரில் நீங்களொவ்வொருவரும் செய்யும் செய்கைகள் உங்கள் நாட்டிற்கு நன்மை பயப்பதாயிருக்க வேண்டும்.

எதைச் செய்வதனாலும், எதைப்பற்றி யோசிப்பதானாலும் "நான்" என்ற உணர்ச்சியை ஒழியுங்கள். "நாம், நாங்கள், நமக்கு" என்ற பொது நலம் தழுவிய சிறந்த உணர்ச்சியோடு உங்கள் கடனாற்றுங்கள். சகோதரர்களே! நீங்கள் யார்? நீங்களே உங்களது தாய் நாடு. உங்கள் தாயின் மானம் உங்கள் கையிலிருக்கிறது. உங்களுடன் உங்கள் நாட்டில் பிறந்தவர்களுடைய க்ஷேம லாபங்களுக்கும் நீங்களே ஜவாப்தாரியா யிருக்கிறீர்கள். உங்கள் தாய் நாட்டைச் சந்தோஷமாகவும், சுயேச்சையுடனும், உற்சாகத்துடனும் இருக்கும்படி செய்வதையே உங்கள் வாழ்க்கைக் கடனெனக் கடவுள் கட்டளை பிறப்பித்துள்ளார். உங்களுடைய சகோதரர்களை யெல்லாம் ஒற்றுமைப் படுத்துங்கள். கடவுளுடைய கட்டளையை நிறைவேற்

றுங்கள். உங்களுடன் உங்கள் சகோதரர்களும் ஒருவருக் கொரு
வர் ஏற்றத் தாழ்வில்லாமல், சம அந்தஸ்த் துள்ளவர்களாகவும், சுத
ந்திரமுள்ளவர்க ளாகவு மிருக்கவேண்டும்.

உங்களது தாய் நாடு ஒரு ஆட்டு மந்தையல்ல, செங்கற் குவிய
லல்ல, அஃதொரு கூட்டுறவுச் சங்கம். எந்த நாட்டில் சாதி என்றும்,
மேலானவர் கீழானவர் என்றும், பாகுபாடுகளும் வித்யாசங்களும்
மலிந்துவிட்டதோ, எந்த தேசத்தில் சம வுரிமையும் அந்தஸ்தும்
எல்லாருக்கு மளிக்கப்படவில்லையோ அத் தேசம், தேசமல்ல;
அஃதொரு வீண் சந்தைக் கூட்டம். "அன்பு" என்ற சிறந்த ஒப்ப
ற்ற கயிற்றால் ஒவ்வொருவரையும் கட்டிவிடுங்கள். தேசப் பற்று
என்ற கயிற்றால் தாயைப் பிணைத்துக்கொள்ளுங்கள்.

அருமைச் சகோதரர்களே! உங்கள் தாய் நாடு உங்களுக்குத்
திருக்கோயில். அக் கோயிலில் சர்வ வல்லமையுள்ள கடவுள் எழு
ந்தருளி விளங்குகிறார். தாய்நாட்டிலுள்ள உங்களுடைய சகோதர
சகோதரிகள் பணிந்து நின்று அக் கடவுளைத் தொழுதேத்துகிறார்
கள். உங்களுக்கும் உங்களுடைய தாய் நாட்டிற்கும் இழுக்கையு
ண்டாக்காத கருமங்களையே நீங்கள் எப்போதும் செய்துவருவீர்
களேயானால், நீங்கள் ஆண்டவனுடைய முன்னிலையில் தலை நிமிர்
ந்து நிற்கலாம்; கடவுள் உங்களைக் கட்டியணைத்துக் களிப் பெய்தி
ஆசீர்வதிப்பாரென்பதற் கையமேயில்லை. ஒரு வகுப்பாரால் நிர்
மாணிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு நீங்களும் உங்கள் சகோ
தரர்களும் அடங்கி நடக்கவேண்டிய அவசியமில்லை. பொது ஜன
ங்கள் எல்லோராலும் பொது நன்மையைக் கருதி நிறுவப்படும்
சட்ட திட்டங்கள் ஆண்டவனுடைய கட்டளையென வுன்னி அவ
ற்றைச் சிரமேற்றாங்கி ஒழுங்காக நடக்கத் தவறாமலிருங்கள்.

உங்களுடைய தாயகம் கேவலம் கல்லாலும் மண்ணாலு மாக்
கப்பட்ட பூமிப் பரப்பென்று நினைக்காதேயுங்கள். உங்கள் தாய்நாடு
உலகத்தாருக்கு ஒரு வழி காட்டியாயிருந்து உயர்ந்த லக்ஷியத்தை
வெளிப்படுத்துமானால், அதுவே தாய் நாடு என நினைத்துக் கொள்



ளுங்கள். அவ்விலக்ஷியம் அன்பாக இருக்கவேண்டும். அன்பி
னாலேயே ஒற்றுமையும், ஒத்துழைப்பும் பலமுண்டாகும். உங்க
ளுடைய சகோதரர்களில் ஒருவருக்காவது ஓட்டுரிமையும், நிர்வாக
த்தில் பொறுப்புமில்லையானாலும், ஒருவராவது கல்வியில்லாமல்
திண்டாடினாலும், ஒருவராவது தரித்திரத்திலாழ்ந்து திண்டா
டினாலும், உங்கள் தாய் நாடு நல்ல நிலைமையிலில்லை என்பதைத் திட்
டமாக அறிந்து கொள்ளுங்கள். கல்வி, தொழிலபிவிர்த்தி, ஓட்டு
ரிமை ஆகிய இம் மூன்றும் தான் ஒரு நாட்டிற்கு அடிப்படையா
யிருப்பன. இம் மூன்றும் நன்றாக விர்த்தியாகும்வரை ஓய்வே
உங்களுக்குக் கிடையாது. சகோதரர்களே! உங்களுடைய தாயை
அழகுபடுத்துவதையும், அவளுக்குப் பலத்தைக்கொடுப்பதையும் உங்
களின் முதற் கடமையாக நீங்கள் கொள்வீர்களா? அஞ்சாதீர்கள்,
யாருக்கென்ன பயம்? தாய்த் தொண்டிற்கும், கடவுள் வழிபாட்
டிற்கும் எவ்வித வித்யாசமுமில்லை. கடவுளைத் தொழுவதை எவ
ரால் தடுக்க முடியும்? பொது நன்மையே உங்களது உள்ளக்கிடக்
கையாயிருக்கட்டும். அதுவே உங்கள் மதக் கோட்பாடா யிருக்கட்
டும். நீங்களும் உங்களுடைய சகோதரர்களும் தேச க்ஷேமத்திற்
காக முகமலர்ச்சியுடன் உங்களுடைய உயிரைக்கூடக் கொடுக்கச்
சித்தமாயிருப்பீர்களாயின், உங்களை ஈன்ற தாய் (நாடு) என்றும்
அழியாத புகழைப் பெறுவாள்.

இந்திய வாலிப வீரர்களே, ஜாதி பேதத்தால் இந்தியா பல
வீனமடைந்து இன்று நைந்து அடிமையாய்க் கிடக்கிறது. ஜாதி
பேதமற்ற இந்தியா-மத பேதமற்ற இந்தியா-சமத்துவ இந்தியா-
சுதந்திர இந்தியா உங்கள் தியாகத்தின் மீது கட்டப்படட்டும்.

ரா. நா.

# பாஷாபிமானம்

எழுதியது
பண்டிதை-திரு. பத்மாசனி அம்மாள்.

உலகின்கண்ணே ஆதியில் மனிதன் தோன்றிய காலத்து மிருகங்கள் போலவே யிருந்தான். பின்னர் தனது அறிவைப் பல்லாற்றானும் விருத்திசெய்து, பற்பல விதமான நாகரீக வாழ்க்கையுடையனானான். அவனுடைய அறிவால் விருத்தி செய்யப்பட்டவற்றில் பாஷை யென்பதும் ஒன்றாகும். உலகின் பற்பல பாகங்களிலுமுள்ள பல்வேறு வகையான கூட்டத்தாரும், பல்வேறு விதமான பாஷைகளை யுண்டாக்கினர். இதனாலேயே தமிழ் ஆரியம் தெலுங்கு கன்னடம் ஆங்கிலம் முதலான பல்வேறு வகையான பாஷைகள் உலகில் வழங்கப்பட்டு வரலாயின.

இப்பாஷைகள் ஒவ்வொன்றும் நாளடைவில் விருத்தியடைந்து இலக்கண வரம்பு பட்டுத் திகழலாயின. பின்னர், ஒலிவடிவில் மாத்திரமிருந்த பாஷைகளெல்லாம் எழுத்து வடிவு பெற்றன. இப்பாஷாபி விருத்தியால் உலகிற்குப் பெரும் பயனுண்டாகியிருக்கின்றது. ஒருவருள்ளக் கருத்தை மற்றவர்க்குச் சுலபமாய்த் தெரிவித்துக் கொள்வதற்கும், நம் முன்னோர்தம் நிலைமையை நாம் உணர்ந்து கொள்வதற்கும், நமது நிலைமையை நம் பின்னுள்ளோர் உணர்ந்து கொள்வதற்கும், பல்வேறு வகையான சாஸ்திர ஆராய்ச்சி புரிவதற்கும் பாஷைகள் இன்றியமையாத சாதனமாய் அமைந்திருக்கின்றன இவ்விதமாகப் பலப்பல நன்மைகளையும் பெற்றுக்கொள்வதினாலே மனிதர் ஒவ்வொருவரும் தாந்தாம் பயி



லும் மொழிகளில் அன்புடையோரா யிருக்கின்றனர். சாதாரணமாக ஒருவன் ஓர் பொருளில் அன்பு வைத்தால், அவ்வன்பினின்றும் அபிமானமுண்டாவது உலக இயற்கையாகும். தேசத்தில் அன்பு வைக்கும் ஒருவனுக்குத் தேசாபிமான முண்டாகும். பாஷையில் அன்பு வைக்குமொருவனுக்குப் பாஷாபிமான முண்டாகும். ஏனைய விஷயங்களு மிப்படியே.

இவ்வபிமானம் என்பதைத் தேசாபிமானம் பாஷாபிமானம் சமயாபிமானம் குலாபிமானம் முதற் பலவாகப்பிரிக்கலாம். இவைகள் எல்லாவற்றினும் முதன்மையாயுள்ளது பாஷாபிமானமே. இதுவே மற்றய தேசம் சமயம் குலம் முதலான எல்லாவற்றிலும் அபிமானமுண்டாகச் செய்வது. ஒருவன் ஒரு பாஷையைக் கற்கிறான் என்று வைத்துக் கொள்வோம். உடனே அவனுக்கு அப்பாஷையி லன்புண்டாகிறது. அவ்வன்பினின்றும் அபிமானம் உண்டாகிறது. பாஷையில் அபிமான முண்டாகவே அவனுக்கு அப்பாஷை பேசுபவர் பேசப்படும் தேசம் அன்னோர் வழிபடு கடவுள் முதலான பிறவற்றிலும் அன்புண்டாக, அதினின்றும் அபிமான முண்டாகின்றது. ஒரு பாஷையைப் பேசுங் கூட்டத்தார் அந்தப் பாஷையின் பெயரா லழைக்கப்படுகின்றனர். தமிழ்ப் பாஷை பேசுமவர் "தமிழர்" என்று அழைக்கப்படுகின்றனர். ஆங்கிலம் பேசுமவர் "ஆங்கிலேயர்" என்று அழைக்கப்படுகின்றனர். தெலுங்கு பேசுமவர் "தெலுங்கர்" என்று அழைக்கப்படுகின்றனர். இங்ஙனமே பிறரும். ஒருவன் உலகில் வழங்கும் பல்வேறு வகையான பாஷைகளும் பயின்றிருக்கலாம். ஆனால் அவன் முன்னோர்களாற் பயிலப்பட்டதும் சிறுவயது முதலாகப் பயின்று வந்ததுமான பாஷைக்குரிய பெயராலேயே அவனை அழைத்தல் மரபாகும்.

இவ்விதமாக வழங்கப்பட்டு வரும் நாமங்களையுடைய உலகின் பல்வேறு வகையான கூட்டத்தார்களுள் நாம் "தமிழர்" என்னும் பெயர்க்குரியோராக இருக்கின்றோம். வடக்கின்கண் வேங்கடமும் தெற்கின்கட் குமரியும் மேற்கும் கிழக்கும் சமுத்திர

மும் எல்லையாக வுள்ளதெனத் தொல்காப்பியனார் முதலான தொல்லாசிரியரால் சுட்டப்பட்டதும், பல்லாயிரம் நூற்றாண்டுகளுக்கு முன் தொடங்கிச் சீர் சிறந்து நாகரீகத் துறையில் மேம்பட்டு விளங்கியதுமான நாடே தமிழாகிய நமக்குரிய நாடாகும். இந்நாட்டு மாந்தராகிய நாம் தொன்மையும் பெருமையும் வாய்ந்த தமிழ்ப் பாஷைக்குரியோர் என்னுஞ் சிறப்பினை உடையோராய் இருக்கின்றோம். ஆகவே நாம் நம்மைச் சிறு வயது முதலாகச் சீராட்டி வளர்த்த தாய்ப் பாஷையாம் தமிழின்கண் அபிமானமுடையராயிருந்து வர வேண்டியது கடமையாகும். ஆனால் இக்காலத்திய நம்மவரிற் பெரும்பாலானோர் தமிழ்ப் பாஷாபிமானம் சற்றுமில்லாதவரா யிருக்கின்றனரென்பது யாவருமறிந்த உண்மையாகும். இதற்குக் காரணம், காலத்தின் கோலத்தால் நம்மவர்பாலெழுந்த மூடத் தன்மையேயாகும். அன்னிய மொழியாளர் தம் சேர்க்கையால் தம் பெருமையைத் தாமுணராது பரதேசி மயமாய் விளங்குகின்றனர். தமிழின் பண்டைப் பெருமையையும் தமிழர்தம் பண்டைப் பெருமையையும் விளக்கப் பல்வேறு வகையான சாக்ஷியங்கள் வேண்டுவதில்லை. சிந்தாமணி யென்னும் சீரியன் மணியும் சிலப்பதிகார மெனுந் திருத்தகு நூலும் ராமாயணமெனுந் தனிப் பெரு நூலுமே போதுமானவை.

"செந்தமிழ் நாடெனுங் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

எனக் கவிஞர் சிகாமணியாம் சுப்பிரமண்ய பாரதியார் அன்பெனும் ஊற்றிலிருந்து இன்பெனுந் தேனொழுகக் கவியமிழ்தஞ் சொரிந்திருக்கின்றனர். இனிமையாம் பண்புமிக்க தமிழ் மொழியானது உண்ண உண்ணத் தெவிட்டாது, தித்திக்கும் தேனை நிகர்த்தது; கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந் தளித்ததும், தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலையுண்ட பாலனை மீட்டதும், பிற பல செயற்கருஞ் செயல்களைச் செய்ததும் நம் தமிழ் மொழியாகுமன்றோ.



இவ்விதமான பல்வகைச் சிறப்புக்களாலும் பொலிந்து விளங்கிய நம் தமிழ் மொழி யிதுகாலைத் தமிழரிற் பெரும்பான்மையோரால் வெறுத்தொதுக்கப் பட்டிருத்தல் தமிழபிமானமுடையார் பலர்க்கும் துயரத்தை விழைக்கக் கூடியதொன்றேயாகும். இதற்கும் தமிழரே காரணராவார். தமிழபிமான முடையோரெனச் சொல்லுபவரும், தமிழின் பண்டைப் பெருமையை முன்னிட்டுத் தம்மைத் தாம் வியந்து கொள்கின்றனரன்றி, இதுகாலைத் தமிழில் உள்ள குறைவு யாதென்பதைக் குறித்து ஆராய்வாரெவருமில்லையென்றே கூறலாம். ஆகவே தமிழின் பண்டைப் பெருமையை நிலை நிறுத்துவதற்குத் தமிழிற்காக நாம் செய்ய வேண்டியவை இவையென்பதைக் குறித்து ஈண்டு ஆராய்வாம்.

சாதாரணமாகத் "தமிழ்ப் புலவர்" என்னும் பேருடையவர் இலக்கண இலக்கியப் புலமையுடையாரன்றி, வேறொன்றும் அறிந்தவராகக் காணப்படவில்லை. பள்ளிக்கூடங்களில் ஏழாம் எட்டாம் வகுப்பு வரையில் படித்துள்ள ஓர் மாணவனுக்குள்ள பொது அறிவு, சில தமிழ்ப் புலவருக்கு இருக்குமென்று கூற முடியாது. ஒரு தமிழ்ப் புலவர் கொழும்பிலிருந்து இராமேஸ்வரம் போதல் வேண்டுமெனில், கடற்கரைத் துறைமுகத்தில் நின்று "இங்கிருந்து ராமேஸ்வரத்துக்குக் கப்பல் எந்த முகமாகப் போகும்" என்று விசாரிக்க வேண்டியதே. பூமி சாஸ்திரம், கணித சாஸ்திரம் முதலான பல்வகைப்பட்ட சாஸ்திரங்களில் ஒன்றேனும் இக்காலத்திய இலக்கண இலக்கியத் தமிழ்ப் புலவர்களுக்குத் தெரிந்திருக்குமென்று சொல்லுதற்கில்லை. பண்டைக் காலத்தில் தமிழ்ப் புலவர்கள் சகல சாஸ்திரங்களிலும் வல்லுநர்களாக விருந்தார்களென்பதற்குத் தடையே கிடையாது. உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணியுரையில் வரைந்திருப்பனவற்றைத் துருவி யாராய்ந்தால், அவருடைய கணித சாஸ்திர ஞானம் நன்கு புலனாகும். இங்ஙனமே பிறவும். சில நாட்களுக்கு முன் யான் தமிழ், சமஸ்கிருத மென்னும் இருபாஷையுங் கற்ற ஓர் புலவரைச் சந்திக்க நேர்ந்தது. அவருடன் யான் சம்பாஷித்த காலையில், அவருடைய பொது அறிவின் நிலைமையிலிருந்து யான்

தமிழ்ப் புலவர்தம் குறைபாட்டை நன்கறிந்துகொண்டேன். ஆகவே, தமிழபிமான முடையோராகிய எவரும் தமிழின் குறைபாட்டை நீக்கவேண்டும். பண்டைத் தமிழறிஞர்தம் பெருமையையும் தமிழ்ப் பாஷையின் பெருமையையும்பற்றி நாம் பெருமை பாராட்டிக்கொண்டிருப்பதாற் பயனில்லை. பற்பல துறைகளினும் தமிழ்ப் பாஷையை அபிவிருத்தி செய்துகொள்ளல் வேண்டுமென்னும் எண்ணம் எனது உள்ளத்தில் உண்டாகியது.

பூர்வ காலத்தில் தமிழ்ப் பாஷையிலிருந்த "முதகுப்பை", "ஐங்குப்பை", "அக்ஷர கணிதம்" முதலான கணித நூல்களும், பல்வேறு வகையான சாஸ்திரங்களும் பிறவும் கால வேறுபாட்டால் அழிந்து போயின. அழியாது எஞ்சியிருந்த சிலவே இக்காலத் தமிழ் நூல்களெனத் திகழ்கின்றன. இவற்றுள்ளும் கணிதம் முதலிய சில நூல்கள் பயில்வாரின்மையி னருகிப்போயின, ஆதலால் தமிழ்ப் பாஷை தன் வளங்குன்றி, வளர்வுறாது ஒரு நிலையில் நிற்கின்றது. 'தமிழ்ப் புலவர்", "தமிழ்ப் பண்டிதர்", "தமிழ் வித்வான்" என்னும் பெயருக்குரியோ ரனேகர் இலக்கண இலக்கியப் பயிற்சியுடையாரன்றி வேறொன்று மறிந்தவரல்லர். தமிழிலக்கண இலக்கியப் புலமையோடு ஆங்கில மொழியும் வல்லுனராயிருப்பவரே இக்காலத்தில் சகல விதமான அறிவும் உடையோராக மதிக்கப்படுகின்றனர். ஆகவே இக் காலத்தில் தமிழ்ப் பாஷையின் துணையையும் நாடியே நிற்கின்றது என்பது நன்கு விளங்குகின்றது.

தமிழபிமானமுடைய எவரும் இக்குறையினைக் களைய முற்படுதல் மிக மிக அவசியமான ஓர் கருமமாகும். கணிதம் இரசாயனம் பௌதிகம் முதலான பல்வகைச் சாஸ்திரங்களும், இக்காலத்தில் ஆங்கில பாஷையிலேயே யிருக்கின்றன. ஆகவே ஆங்கிலம் பயின்ற தமிழ் மக்கள், தாய் மொழியாம் தமிழுக்குத் தாம் செய்யவேண்டிய தொண்டு பல்வகைச் சாஸ்திரங்களையும் தமிழ்ப் பாஷையில் கொண்டுவருதலே.

மேல்நாட்டவர்கள் எம்மொழியில் எது இருப்பினும் அதனைத் தம் மொழியிலாக்கிப் பயனைப் பெற முயல்வர். ஆனால் நம்மனோர் பிறமொழியில் ஏதாவது விசேஷமாக இருந்தால், உடனே தம்மொழியை இகழ்ந்து பிறமொழிக்கண் ஆர்வமுடையோராயுறைவர். இதற்கு இக்காலத்தில் தமிழ்ப் பயிலாது ஆங்கிலம் பயின்ற தமிழ் மக்களே சிறந்த உதாரணமாக விளங்குகின்றனர். தெய்வ மணங் கமழும் சீரிய தமிழ் நாட்டிற் பிறந்தோர்க்கு, இத்தகைய குணம் ஏற்பட்டமைக்குக் காலவிபரீதமே காரணமென்று கூறலாமன்றி வேறெதுதான் கூறலாம்.



ஆயினும் இக்காலத்தில் ஆங்காங்கே பல்வேறு சங்கங்கள் தோன்றித் தமிழை வளர்க்கின்றன. ஆனால் எந்தச் சங்கமும் இலக்கண இலக்கியப்புலமையை வளர்க்கின்றனவன்றிச் சாஸ்திரீய ஞானத்தை வளர்க்கின்றனவாக மிகுதியும் காணப்படவில்லை. தமிழுடன் ஆங்கிலம் பயின்ற ஒரு சிலர் மாத்திரம் மிகச்சில தொண்டு தமிழுக்குச் செய்து வருகின்றனர்.

இக்காலத்தில் ஆந்திரபாஷை அபிவிருத்தியடைந்து வருதல் யாருமறிந்த உண்மையே. அதுபோலவே தமிழ்ப் பாஷையும் சிறப்புறுமாறு இயன்றவரை முயற்சித்தல் தமிழர்க்குரிய கடமையாகும்.

"பாஷாபிமானம் என்பதற்கு நமது பாஷைக்குப் பிற பாஷை இணையானவையல்ல, நமது பாஷையுடன் பிற பாஷைச் சொற்களைக் கலத்தலாகாது, நமது பாஷையே மேலான பாஷை" என்பன முதலிய வாக்குக்களால் தற்பெருமை பேசிக்கொண்டிருத்தல் பொருளாகாது. பாஷாபிமான முடையவரெனில் தமது பாஷையைச் சிறப்புறச் செய்தலே கடமையாகும். அபிமானத்தைப் பேச்சளவிற்காட்டாது செயலிற்கொண்டு வருதல்வேண்டும்.

ஆகவே தமிழர்களாகிய நாம் நம் தமிழ்ப் பாஷையாம் தமிழ்மொழியில் பற்றுடையராய் அது தன் பண்டைப் பெருமையையும் சீரையும் பெற்றுத் திகழும் வண்ணம் அதனை விருத்தி செய்வோமாக.

---

# பாரதி உதயம்.

எழுதியது

## சுவாமி சுந்தானந்த பாரதியார்.

## (ஸ்ரீ அரவிந்தருடன் இருக்கிறார்)

1. சாதிச் சண்டைகள் ஒழிந் திடவே
ஸமரஸ வொற்றுமை சீர் பெறவே
வாது வழக்குகள் மங்குகவே
வறுமை யிருளெல்லாம் நீங்குகவே!

2. தமிழொலி யெங்குந் தழங்குகவே—தெய்வத்
தாயன்புச் செய்கை விளங்குகவே!
அமரவாழ் விங்குச் செயம் பெறவே—தூய
வானந்தத் திற்புவி யின்புறவே!

3. பெண்கள் விடுதலை பெற்றிடவே—நெஞ்சிற்
பேதமை வேற்றுமை யற்றிடவே
உண்மைச் சுயேச்சை யுதித்திடவே
உதிக்குக "பாரதி" பூரதி யாய்!

பாரதிக்குப் பிறகு ஒரு "பாரதி" தோன்ற வேண்டியதே. பா ரதி மிகுந்த எம்மனோர்க்கு இத் தமிழ் நாட்டில் சிறந்த பத்திரிகை யில்லாதது பெருங் குறையாகவே தோன்றுகிறது. பாரத நாட்டின் தெய்வீகக் காட்சியை மாட்சியுடன் அன்னை பாரத தேவி பார்த்துக்கொண்டே யிருக்கிறாள். தற்போது உலகம் நள்ளிரவில் இருக்கிறது. அதன் சிறு போர்களும், பெரும் போர்களும், பேர் நகைப் பூசல்களும் இந்நள்ளிரவோடு கழியும். பின் ஆயிரம் கதிருடன் உலகம் முழுதையும் விலங்கு நீர்மையினின்று கடவுட் டன்மைக்குயர்த்தும் அத்யாத்ம வீரக் கதிரவன் உதிக்கப் போகிறான். அவன் முன் இருளும், அரக்கர் மாயங்களும், பகை வன்மைகளும் நில்லா. பாரத தேசத்திலேயே அக் கதிர் உதிக்கப் போகிறது. பொதுவாக உலகிலேயே கடவுட் டன்மை குறைந்து, வீரமும் அருகி, விலங்குத் தன்மை பெருகி, எளியவர் நாட்டை வலியவர் கவர்வதும், இயந்திரங்கொண்டு இயற்கையை யெதிர்ப்பதும், உயிர்த் தன்மை யருகிப் பொறித்தன்மை மிக்கதும், ஆத்திரங் குறுகி நாத்திகமடர்வதும், தாமெனத் தருக்கி தெய்வ மறப்பதும் மிகுந்து விட்டது. இவ் விருள் நிலை எத்தனை மனித முயற்சி யென்னும் விளக்கினாலும் நீங்காது. தெய்வீகமாக, உறுதியாகவே பாரத நாட்டின் மூலம், உலகிற்கே விடுதலை வரப்போகிறது. எவ்வெப்போது ஆண்டவன் உலகிற்குச் சிறந்த தர்மத்தை விடுக்கத் திருவுளங் கொள்ளுகிறானோ, அவ்வப்போது பாரத நாட்டில் ஒரு பெரும் மாறுதல் ஏற்படும். உலகிற்கு ஞான சூரியன் உதிக்கும் இடம் பாரதத் தாயின் திருமார்பகமே; ஆதலின் அப் பாரதத் தாயை நாம் உருக்கமுடன் எண்ணவேண்டியதே தற்போது நமது கடமை.



நமக்கு வேண்டுவது சக்தி, சக்தியே. அந்தச் சக்தியை வளர்க்க அனைவரும் பரா சக்தியை வழிப்படல் வேண்டும். சுயராஜ்ய சங்கல்பத்துடன் எப்போதும் பாரத நாட்டார் பரா சக்தியை எண்ணுக! பரா சக்தியே உலகை இயக்குகிறாள். அவளே காளியாய் உலகின் பகை வன்மைகளையும் அசுர மாயையும் நெற்றிப் போடாகப் போட்டு வீழ்த்துகிறாள். அவளே இலக்குமி தேவியாக நாட்டை செல்வத்தாலும் அழகாலும் நிறைக்கிறாள். அவளே மஹா சரஸ்பதியாகிக் கலையொளி பரப்பி வாழ்வைப் பூரணப் படுத்துகிறாள். அவளே மஹேஸ்வரியாகி மனிதனின் அத்யாத்ம வளர்ச்சியை முற்று வித்து மனிதனைத் தேவனாக்குகிறாள். அவளே பரா சக்தி; அவளே ஆத்ம சக்தி. அனைவரும் பரா சக்தியை வழிபடுக!

பாரத நாட்டின் தற்போதைய நிலைமை எளிதில் நன் நிலைமையாக மாறும். அம் மாறுதலுக்குப் பலர் பல்லாற்றாலும் உழைக்கின்றனர். அனைவரிடத்துமுள்ள நலனை நாம் வணங்குகிறோம். ஒவ்வொருவரும் பாரத சக்தியே நோக்கமாக ஒவ்வொரு துறையில் அருட்பணி புரிய நாட்டில் ஒரு புத்துணர்ச்சி பிறந்திருப்பது நற்குறியே.

நம் நாட்டின் புத்துணர்ச்சிக்கு வலக்கையாயிருப்பது பத்திரிகைகளே. அவைகளே புத்துணர்ச்சியின் தூதன். அவைகளே கவிகள் உள்ளத்தில் உதிக்கும் அழகிய உண்மைகளால் மாந்தர் மனத்தை ஒளிரச் செய்யும் கதிர். வங்காளத்தில் அழகிய வர்ணப் படங்களுடனும், தேனும் பாலுஞ் சிந்தும் திரண்மொழிகளுடனும் பல நல்ல மாத, வார, தினப் பத்திரிகைகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் சராசரி 5,000 சந்தாதாராவது உள்ளது. 'பிரதாப்' என்ற ஹிந்திப் பத்திரிகைக்கு 10,000 சந்தாதார்கள் உள்ளன. தெலுங்கு நாட்டில் 'சாரதா', 'பாரதி' என்ற இரண்டு சித்திரப் படங்கள் விளங்கும் உயர்தர மாஸிகைகள் பெருமையாய் விளங்குகின்றன. அதன் மூலம் தெலுங்குக் கவிதை மிகவும் பரந்து விரிந்து நிவர்ந்துள்ளது.

தமிழ் நாட்டில் தமிழுணர்வும், கவி-கலைவளமும், வீரப் பெருக்கும் உயருவதற்குப் பல சிறந்த பத்திரிகைகள் தேவை. ஆனால், "தமிழர் முயற்சி நீடித்திருப்பதில்லை. அது வெந்நீர் போன்று குளிர்ந்து விடுகின்றது" என்று உலகம் இகழ்கிறது. இக் குறைக்குத் தக்கபடிதான் பத்திரிகைக்குப் பணவுதவி செய்வோரும் வாய்க்கின்றனர். பத்திரிகாசிரியர் எவ்வளவு திறமையுள்ளவராயிருப்பினும் அதன் காரியஸ்தரும் நிர்வாகிகளும் உண்மையான தமிழன்புடைய வராகாவிடிற் காரியமில்லை. பால பாரதி, சமரச போதினி, சுயராஜ்யா முதலியவற்றினின்று பத்திரிகைக்குப் பணவுதவி செய்வோரே முதலில் தேவை யென்பது தெளிவாகிறது. சரியான உதவி கிடைத்திருந்தால் தமிழ் நாட்டில் மற்றொரு மாடேர்ன் ரிவ்யூ, மற்றொரு பிரதாப், மற்றொரு சுதேச மித்திரன் நிச்சயமாக நிலையாக இருந்திருக்கும் என்று எனது எழுதுகோல் துணிவாகக் கூறுகிறது. நமது தமிழுலகப் பத்திரிகை ஊழல்கள் சொல்லி முடியாது. நிர்வாகிகள், ஆசிரியர்களுக்குச் சம்பளங்கூடச் சரியாகத் தருவதில்லை. காலங் கடத்தி, நுனிப் புல் மேய்ந்து ஏனோதானோ வென்றிருக்கின்றனர். தமிழ் நாட்டில் ஒழுங்காக நிர்வகிக்கப்பட்டு வரும் பத்திரிகைகள் சிலவே. அவைகளில் சுதேச மித்திரனும், தமிழ் நாடுவும்; நவசக்தி, லோகோபகாரி இவை ஆசிரியர்களின் உழைப்பாலும் நடந்து வருகின்றன. தொடங்கித் தொடங்கி ஒடுங்கும் ஏமாற்றம் தமிழ்ப் பத்திரிகை யுலகில் மிகுந்து விட்டது. "பாரதி" அந் நிலைமையினின்றும் விலகி நன்னிலையுற்று உயர முயலுக.



# தமிழ் வேதம்.

எழுதியது
திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.

பழந் தமிழ் நாட்டில் ஆரிய மொழியும் தமிழ் மொழியுமே சிறந்த மொழிகளாகப் பயின்று வந்தன. ஆரிய மொழியில் தலைசிறந்த நூல் வேதமெனக் கருதப்பட்டது. எக்காலத்தும் உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைகள் அடங்கி இருத்தலாலேயே வேதம் ஆரிய மொழியில் ஒப்புயர்வற்று விளங்குகின்றது. அவ்வாறே தமிழ் மொழியில் உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைகளைத் திருவள்ளுவரது நூல்

தெளிவாகக் கூறுதலால், இந்நூல் தமிழ் வேதம் என்று பெயர் பெற்று வழங்குகின்றது. ஆயினும் ஆரிய வேதத்திற்கும், தமிழ் வேதமாகிய திருக்குறளுக்கும் ஒரு வேற்றுமையுண்டென்று வெள்ளி வீதியார் என்னும் புலவர் கூறுகின்றார். ஆரிய வேதத்தை அந்தணர் என்னும் ஒரு வகுப்பினரே ஓதியுணர்தற்குரியவர், மற்றைய வகுப்பார்க்கு அவ்வுரிமை இல்லை. ஆனால் தமிழ் வேதத்தை இன்னார் ஓதுதற்குரியவர், இன்னார் உரியரல்லர் என்னும் வரையறை இல்லை. எக்குடியில் பிறந்தவராயினும், எவ்வகுப்பில் சேர்ந்தவராயினும் அறிவுடையாரெல்லாம் இந்நூலை ஆராய்தற் குரியராவர்.

"செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
இதற்குரிய ரல்லாதா ரில்"

என்பது வெள்ளி வீதியார் அருளிய வெண்பாவாகும்.

ஒரு பொருளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே சிறந்த அறிஞரது செயலாகும். ஒரு நூல் செய்யும் அறிஞன், தனது கருத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் வேண்டுமென்று தமிழ் இலக்கணமாகிய நன்னூல் கூறுகின்றது. இவ்விலகணத்திற்குச் சிறந்த சான்று தமிழ் மொழியில் திருக்குறளே யாகும். இரண்டு சிறிய அடிகளால் அரிய பெரிய உண்மைகளை எல்லாம் உணர்த்திய புலவர் திருவள்ளுவரே யாவர். உலகில் வாழும் உயிர்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற உண்மைகளை எல்லாம் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளில் அடக்கித் தந்த புலவரைப் போல் வேறு எப்புலவரும் உலகில் இல்லையென்றே சொல்லலாம். இப் பெருமையை அறிந்த ஔவையார் என்னும் தமிழ்ப் புல்வர் "அணுவைத் துளைத்து அதில் எழு கடலைப் புகுத்துக் குறுகத் தரித்த குறள்" என்று திருக்குறளை வியந்து கூறினார். முற்காலத்தில் திருமால் தன் இரண்டடியால் விண்ணையும் மண்ணையும் அளந்தாரென்று கதை கூறுகின்றது. அவ்வாறே திருவள்ளுவரும் தன் இரண்டடியால் கருத்துலகத்தை எல்லாம் (the world of thought)



அளந்து விட்டார். இன்னும் சற்று உற்று நோக்கினால் நாயனார் ஒன்றே முக்காலடியால் அவ்வுலகத்தை அளந்தாரென்று கூறவேண்டும். இக்கருத்தை அமைத்து ஓர் தமிழ்ப் புலவர்,

"மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும்நயந் தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல்லாம் அளந்தார் ஓர்ந்து"

என்று திருவள்ளுவ மாலையில் நயமாகக் கூறுகின்றார். திருமால், வடிவத்தில் குறுகித் தோன்றினான், அதுபோலவே திருக்குறளும் இரண்டடிகளில் குறுகித் தோன்றுகிறது. குறுகிய வடிவத்தில் அடங்கிநின்ற பொருளே நிமிர்ந்து உலகை அளந்தாற்போல, நாயனார் குறளில் அடங்கிநின்ற பொருளே கருத்துலகை எல்லாம் அளந்தது. இவ்வுண்மையை நன்கறிந்த மதுரைத் தமிழ் நாயகனார் என்னும் நற்றமிழ்ப் புலவர் "எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்று நாயனார் குறளைப் போற்றிப் புகழ்ந்தார்.

இரண்டடிகளில் நாயனார் குறள் அமைந்திருப்பதால் அதனை ஓதுவது யார்க்கும் எளிதாம்; ஆனால் அதன் பொருளை உணர்வது அரிதாகும். ஆற்றங்கரையில் அமைந்துள்ள மணல் நிலத்தைத் தோண்டும் போது, தோண்டும் அளவாக நன்னீர் சுரக்கும். அது போன்று, நாயனார் நூலை ஆராயும் தோறும் அறிவு பெருகும். மணற்கேணி தோண்டத் தோண்டப் பின்னும் ஆழமாய்ச் செல்லுதல் போல திருக்குறளின் கருத்தை அறிய அறியப் பின்னும் ஆழமாகச் செல்லும். இதுவே சிறந்த நூலின் தன்மை என்று நாயனாரே கூறுகின்றார்.

"நவில் தொறும் நூல் நயம் போலும்" என்று அப்பெருமான் கூறிய உண்மைக்கு அவரது நூலே தலை சிறந்த சான்றாகும். அவரது நூலை ஐந்து வயதமைந்த பள்ளிச் சிறுவனும் படிக்கலாம். ஐம்பது வயதமைந்த அறிஞரும் கற்கலாம். படிக்கப் படிக்கப் படிப் போரது அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஏற்றவாறு பொருள் தரும் தன்மையை திருக்குறளில் இனிது காணலாம்.

இந் நூலின் பெருமையை அக்காலத்துப் புலவர் அறிந்து போற்றியது போலவே இக்காலத்துப் புலவரும் போற்றுகின்றார்கள். எக்காலத்திற்கும் பொதுவாய உண்மைகள் அந்நூலில் அடங்கியிருப்பதே அதற்குக் காரணமாகும். எம்மொழியிலும் போலிப் புலவர்களால் எழுதப்படுகின்ற நூல்கள் ஒரு காலத்தில் தலை எடுப்பனபோல் தோன்றினும், பின் கால கதியில் தளர்ந்து ஒழிவது திண்ணம். ஆனால் நல்லியற் புலமை வாய்ந்த அறிஞர் எழுதும் நூல்கள் எக்காலத்தும் அழியாதிருப்பனவாம். திருக் குறளில் அடங்கிய உண்மைகள் இவ்வுலகம் உள்ளளவும் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படு மென்பதில் இறையளவும் ஐயமில்லை.

சென்ற காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்னும் மூக்காலத்திற்கும் திருக் குறள் பொது நூலாயிருப்பது போலவே இவ்வுலகில் வழங்கி வருகின்ற எல்லாச் சமயத்தார்க்கும், எல்லாத் தேசத்தார்க்கும் பொது நூலாக விளங்குகின்றது. இத் தமிழ் நாட்டில் அக்காலத்தில் அறுவகைச் சமயங்கள் பரவியிருந்ததாக அறிவுடையோர் கூறுவர். இவ்வாறு வேறுபட்ட சமயங்களெல்லாம் திருக் குறளைத் தத்தம் சமய நூலென்று போற்றுகின்ற வொன்றே திருக் குறள் பொது நூல் என்னும் உண்மையை நன்கு விளக்குகின்றது. இவ்வாறு எம்மதத்தினரும் சம்மதமென்று ஒப்புக்கொள்ளும் நூல் தமிழ் மொழியில் திருக் குறள் ஒன்றேயாகும். இவ்வுண்மையைக் கல்லாட ரென்னும் தமிழ்ப் புலவர்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரு மிசைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"

என்று நாயனார் நூலின் பொதுத் தன்மையை நயம்படக் கூறினார்.

இன்னும் இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் திருக் குறள் பொது நூலாகும். தமிழ்மொழியில் எழுந்த நாயனார் நூலை ஆங்கிலேயர் முதலிய பன்னிரு நாட்டினர் தம் தாய் மொழியில் மொழி பெயர்த்துப் போற்றி வருவது இவ்வுண்மையை நன்குணர்த்துகின்றது. ஆங்கில மொழியில் இந்நூலை முதன் முதல் மொழி பெயர்த்த பெருமை டாக்டர் போப் என்பவர்க்கே உரியதாகும். அதனைப் பின்பற்றி ஐரோப்பிய நாட்டினர் பலர் தம் மொழிகளில் திருக்குறளை மொழி பெயர்த்துப் பயனடைந்து வருகின்றார்கள். இவ்வாறு காலதேச வரையறையின்றி உலகினர்க்கெல்லாம் ஒரு தனி நூலாய் நாயனார் நூல் விளங்குவதை நன்கறிந்த பாரதியார்,



"வள்ளுவன் தன்னை யுலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்று மனம் மகிழ்ந்து வாழ்த்தினார்.

திருவள்ளுவர் தமிழ் நாட்டிற் பிறந்தவரே யாயினும் உலகிலுள்ள பெரும் புலவர்களில் தலை சிறந்தவராவர். அவர் எழுதிய உண்மைகள் தமிழ் மொழியி லமைந்திருப்பினும், அந்நூல் எம்மொழியாளர்க்கும் பொது நூலாகும்.

இவ்வுலகில் பெருங் கவிஞராய் விளங்கிய பெரியாரது வரலாறுகளை நோக்கும்போது அவற்றிற்கும், திருவள்ளுவர் வரலாற்றிற்கும், ஓர் சிறந்த வேற்றுமை காணப்படுகின்றது. பெரும்பாலும் கவிஞரது பெருமையை அவர் வாழும் காலத்தில் உலகம் அறியமாட்டாது. அவர் வாழும் தேசத்தாரும் மதிக்க மாட்டார்கள். அவரது பூதவுடம்பு அழிந்த பின்னரே புகழுடம்பு தோன்றுவதாகும். தம் வாழ் நாளில் வறுமையால் நலிந்து உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி உயிர் துறந்த புலவரது பெருமையைப் பிற்காலத்தினர் அறிந்து அளவற்ற பொருள் செலவு செய்து உருவச் சிலைகள் அமைப்பதை இவ்வுலகில் காண்கின்றோம். இவ்வாறன்றி, நாயனாரது பெருமை அவர் காலத்திலேயே தமிழ் நாட்டில் நன்கு மதிக்கப் பெற்றது. அவர் காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் திருக் குறளின் சொல்லும் பொருளும் இனிது எடுத்தாளப்பட்டுள்ளன. நாயனார் காலத்தில் வாழ்ந்த 'மணிமேகலை' என்னும் சிறந்த காவியம் செய்த சீத்தலைச் சாத்தனார் தமது நூலில்

திருக்குறளின் சொற்களையும், திருவள்ளுவரது பெருமையையும் அமைத்துப் போற்றியிருப்பது அறிந்து இன்புறுதற்குரியதாகும்.

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற, அப்
> பொய்யில் புலவன் பொருள்உரை தேராய்"

என்று மணிமேகலை கூறுகின்றது. நாயனார் குறளை, சாத்தனார் முதல் இரண்டடிகளில் அழகாக எடுத்துரைத்தார். திருக்குறள் எழுதிய புலவரை 'பொய்யில் புலவன்' என்று போற்றினார். அவரது சொற்களை 'பொருளுரை' என்று புகழ்ந்தார். இவ்வாறு நாயனார் உடனிருந்து தமிழாராய்ந்த புலவர் ஒருவர் அவரைப் போற்றியிருப்பது வள்ளுவரது பெருமையை உள்ளங்கையின் நெல்லிக்கனிபோல் உணர்த்துகின்றது. இன்னும் அக்காலத்தில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காவியத்திலும் நாயனாரது சொல்லும் பொருளும் பல இடங்களில் பயின்றிருக்கக் காணலாம். இன்னும் பிற்காலத்தில் எழுந்த பெருங் காவியங்களான சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நூல்களிலும் திருக் குறளின் மணம் திகழ்கின்றது. சுருங்கச் சொல்லின் நாயனாரது நூல் தமிழ் நாட்டில் தோன்றிய பின்னர் எழுந்த நூல்களிலெல்லாம் திருவள்ளுவரது திருந்திய சொல்லும் பொருளும் இலங்கக் காண்கின்றோம். சைவ சமய நூல்களிலும், சமண சமய நூல்களிலும், வைணவ நூல்களிலும், பௌத்த நூல்களிலும் திருக் குறள் மேலாக எடுத்தாளப்படுகின்றது. இவ்வாறு மாறுபட்ட கொள்கைகளையுடைய சமய நூல்கள் நாயனாரைத் தமது ஆசிரியராக ஏற்றுக் கொள்வது தமிழ் மொழியில் வேறெப்புலவர்க்கும் இல்லாத ஒப்பற்ற பெருமையாகும்.



# பண்டை இந்திய மாதர்கள்.

எழுதியது

பண்டிதை திரு. அசலாம்பிகை அம்மாள்.

பாரத நாட்டில் பண்டைக் காலத்தில் தோற்றியிருந்த மாதரசிகளின் பண்பே பெரும் புகழ் வாய்ந்த சீலர்களையும், பற்பல தீரர்களையும், வீரர்களையும், ஞானிகளையும், பொய்யா மொழிப் புனிதர்களையும் வெளிவரச் செய்ததென்ப துண்மை. அவர்கட்கு மனை மாட்சியிற் சிறந்த பேறில்லை யென்பதே கொள்கையாக விருந்தது. தத்தம் தாயகத்தில் ஒழுக்கப் பயிற்சியும், ஸ்வதர்மங்களை யுணர்த்தும் அற நூலாராய்ச்சியும், தெய்வ வணக்கமும், சுயமொழிப் பற்றும், பெரியோர்க்குப் பணிவிடை செய்யும் உரிமையும், சோம்பலற்ற உழைப்பும், இன்சொல்லும், விருந்தோம்பு முயர் குணமும் அணிகலன்களாகத் திகழ்ந்தன. கணவனை யடைந்த பின்னர் அவர்கள் இயற்கைக்கும் விருப்பத்திற்கும் இயைந்த வழி ஒத்து வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக்கி வந்தனர்.

தேவஹூதி என்னும் அரசிளங்குமரி தனது கணவரின் அரிய தவத்திற்கு உற்ற பணிவிடைகளை அருகிலிருந்து சலியாது பலகாலம் அன்புடனாற்றி வந்ததாகச் சொல்லும் சான்று ஒன்றே பண்டைய மாதரசிகளின் நேர்மையான ஒழுக்கத்திற்கு உதாரணமாகும். தாம் பத்தியமென்பது சிற்றின்பமென்னும் சுரங்கத்தின் மேல் அமைக்கப் பெறுது தோழமையென்னும் அஸ்திவாரத்தின் பேரில் எழுப்பப்படுதல் வேண்டும். அரிச்சந்திரனையும், இராமனையும், தருமனை

யும், முக்காலமுணரு முனிவர்களையும், தற்கால லோகமானிய பால கங்காதர திலகரையும், மகாத்மா காந்தியடிகளையும், தேச பந்து தாசரையும், அறிஞர் லாலாஜியையும் பாரத தேசத்திற் களித்த ஸ்திரீ ரத்தினங்களின் மாண்பைப்பற்றி விரித்துக் கூறவும் வேண்டுமோ?

அக்காலத் தாய்மார்கள் மக்களை வளர்ப்பதில் சிறந்த வைத்தியர்களாகவும், உணவுப் பொருள்களைச் சேகரிப்பதில் ஊக்கமுடையவர்களாகவும், நோயுற்றவர்களை யுபசரிப்பதில் நிகரற்ற பொறுமைசாலிகளாகவும், மனையை ஒழுங்குபெற அமைப்பதில் அளவற்ற திறமைசாலிகளாகவும், விருந்தோம்பி முதியோரைப் பூசிப்பதில் வாடா நறுமலர் போன்றவர்களாகவும், குடும்பமாகிய சிற்றரசினை எதிர்ப்பின்றி யாளும் ஸர்வாதிகாரிகளாகவும், திருவருட்பிரகாச வள்ளலார் திருவாய் மலர்ந்த "நிலையுறு நிராசையா முயர்குலப் பெண்டிரொடு" என்ற தெய்வ வாக்கிற்கிலக்கியமாக ஆடம்பரமும் அநாவசியமுமான அணிகலன் ஆடை முதலியவைகளில் மனதை மிதமிஞ்சி இழக்காதவர்களாகவும் இருந்ததாக உணரத் தக்க சான்றுகள் பலவுள. மிகப்பழைய ஓவியக்காரர் தீட்டிய உருவங்களில் பெண் வடிவங்களுக்குப் புஷ்பாலங்காரமும், தழைந்த அழகபாரத்தின் இயற்கையழகும், தூய்மையையும், வாய்மையையும் உணர்த்தும் ஒளிநுதலின் வனப்பும், அன்பையும், கருணையையும், களங்கமற்ற இயற்கையையும் உணர்த்தும் கரிய விழிகளின் பந்த நோக்கமுமே பொலிவுறத் தீட்டப்பட்டிருந்தன. பிற்கால ஓவியக்காரர் தீட்டிய சித்திரங்களில்தான் அவ்வக்கால நாகரிகச் சின்னங்களாகப் போற்றப்படும் முறையில் செயற்கை வனப்புகள் புகுத்தப்படலாயின.

உண்மையில் சுய தேசம், சுய பாஷை, சுய நடை, சுயமுறை இவைகளைக் கைவிட்டு, பரதேச நடை, உடை, மொழி, கோல முதலியவைகளைத் தாங்கித் தற்கால ஆடவர், மகளிர் இரு பாலாரும் நாகரிகப்பெயர் புனைந்து வருவதை யுற்று நோக்குங்கால் சென்னையில் உயிர் நீத்த பசுவின் கன்றினுடலில் வைக்கோலைத் திணித்து,



தாய்ப் பசுவை ஏமாற்றும் கருத்துடன் சில சுயநலமுடைய பால் வியாபாரிகள் தோள்களிற் சுமந்து செல்லும் காட்சி நினைவிற்கு வருகிறது. அதிக யுக்தியின் பயனே இச்செயல். இதனால் விளையும் கொடிய பாவமும் உண்மையன்பினால் சுரந்து பெருகாமல் ஏதோ பழக்கம் காரணமாக அளிக்கப்படும் பாலின் தன்மையில் எப்படி மாறான பல தீமைகளும் விளையுமோ, அதுபோல் இவ்வந்நியப் போலி நாகரிகத்தினாலும் பெருகும் தீமைகள் பல நாள்தோறும் பெருகுகின்றன. முற்காலம் நம் நாட்டில் மறபிற் கொத்தபடி அரசிளங் குமரிகளிலும் பலர் யானையேற்றம் குதிரையேற்றம் அஸ்திரப் பிரயோகம் ஆயுதப் பயிற்சி முதலிய பலவும் பயிற்றப் பெற்றிருந்தார்களென்பதற்குக் கைகேசியும் சத்தியபாமையும் தடாதகைப்பிராட்டியுமே சான்றாக விளங்கினர்.

வனிதையரிற் வேதமோதி உபநிஷத்துக்களை ஆய்ந்து அக்கினி காரியங்களைத் தமது கணவர்களுக்குப் பிரதியாக நின்றாற்றியும், தர்க்க பண்டிதைகளாகவும், கவி சிரேஷ்டர்களாகவும், ஞானிகளாகவும் பலர் விளங்கினர் என்பதற்கு மைத்திரை, கார்க்கியை, காத்தியாயனி முதலிய ஸ்திரீ ரத்தினங்கள் பலர் இருந்தனர். ஆயினும் அவர்களனைவரும் தாய் நாட்டினது நடையில் நின்று, தாய்மொழிக் கலைகளை யாராய்ந்து, தாய் நாட்டினர் புகழ தாய் மதப் பற்றும், தாயொழுக்கமும் பூண்டு வாழ்ந்தனர்; கடனாற்றினர்; கலையோதினர் என்பது ஈண்டுக் கவனிக்கற்பாலதாகும்.

பெண் பாலாரின் திண்மைக் கற்பும், உண்மை யொழுக்கமும், வன்மைக் குணமும், எண்மை வாழ்க்கையும் பொறைக் கலன்களுமே உலக மக்களை உயரிய நேர்மை நெறியில் நடத்தி வந்தன. அத்தகைய ஆற்றலுடைய சுதந்தர தெய்வங்கள் தற்காலம் தாய் நாட்டிற்குச் சிறிதும் கடனாற்ற முடியாதபடி அன்னியப் போலி நாகரிகமென்னும் சேற்றிற் புரண்டு வருகின்றனர். இதனை முன்னேற்றமென்று முழங்குகின்றனர். ஆத்ம ஞானம் பெறும் கல்விக்கும் இவர்கட்கும் வெகு தூரம். துறவிகளின் தொடர்பும் அத் தன்மையதே.

அயல் நாட்டு நாகரிகத்தி லமிழும் இன்னார் தேச நலத்திற்கு யாது செயமுடியும், ஏழைகள் வருத்த நிலையுணர்வரோ, சுய நல தியாகம் செய்வரோ, வருத்தமேற்பரோ, கூசாதுழைப்பரோ, இல்லறக் கடமைகளை அழகுபெற வாற்றுவரோ? 'இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்றார் முன்னோர். தற்காலம் இல்லாளகத்திருக்கு நன்னாளுமொன்றில்லை, என குடும்பப் பணிகட்கே பலரை விடுத்து இல்லுறை மகளிர் எக்காரணம் பற்றியோ வெளியேறவேண்டியதான நாகரிகம் தலைதூக்கி நிற்கின்ற இஞ்ஞான்று பெண்களின் நிலையைப் பற்றி யாதுவரையலாம். தாய் மொழியில் உரிய அன்பும் தேறிய ஆராய்ச்சியும் பெறமுடியாத மக்கள் பிற மொழிகளில் வித்தியா விநோத பட்டங்கள் பெறுவது, வனமல்லிகை மலர்வது போன்றதேயன்றி வேறில்லை. சுய நாகரிகத்தினை யிகழ்ந்து பிறர் நாகரிகத்தினை மேற்கொள்ளல் அடிமைப் புத்தியினாலன்றி வேறில்லை.

முடிவாகக் கூறுமிடத்து நமது நாட்டில் பெரும் பான்மையும் நகர வாசங்களில் பர நாகரீகக்காற்று மிக மிக வேகமாக மோதியலைக்கின்றது. வேற்றுணர்ச்சி யென்னும் பெரும் புயல் இல்லறக் கப்பலை நடத்தும் மாலுமிகளாகிற பெண்பாலாரைத் திகைப்புக்குள்ளாக்கி யிருக்கிறது. ஆடம்பரமும் அனாவசியமுமான உண்டியுடையாதிய பல செலவுகள் செல்வர்களையும் உயிரற்ற ஓவியங்களாக மாற்றுகின்றன. துஷ்கால மேகம் வெகு வேகமாக நெருங்கிச் சூழ்ந்து கவிந்து இருண்டு கண்களை மறைக்கின்றது.

என்னே தற்கால நிலை, என்னே மாந்தர் நாகரீக முறை; தாய்மார்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!! உறக்கம்விட்டு உதறி யெழுங்கள். பாரத தேசத்தைப் பாரத தேசமாக்குங்கள்; பரதேசமாக்காதீர்கள். எளிய வாழ்விற் கடிக்கோலுங்கள். பழமை பாராட்டுங்கள். தேச மொழியைப் பயிலுங்கள். நோயணுகாவண்ணம் உடற்பயிற்சி பெறுங்கள். குடும்ப அரசாட்சியைப் புகழ்பட ஆளுங்கள். எவர்க்கும் அடிமையாகாதீர்கள். இயற்கை வாழ்விற் இச்சையுறுங்கள்.

---



# சுப்பிரமண்ய பாரதியார்.

எழுதியது

திரு. சோமசுந்தர பாரதியார், M. A., B. L.

தமிழுலகில் சுப்பிரமண்ய பாரதியாரை அறியாதார் இருப்பது அருமை. அவர் தேசப் பாட்டுக்கள் உயிர் உணர்ச்சி அற்று உறங்கும் தமிழ் மக்களைக்கூடப் புத்துயிர் பெற்று மனித வாழ்வை விரும்பும்படி ஊக்கவல்லது என்று ஆங்கில அந்நிய அரசியலார் அறிந்து அஞ்சுகின்றனர். பாரதியாரைப் பட்டினி நோன்பியற்றிப் பரலோகமடைய விட்ட தமிழ் மக்களும், தற்காலம் அவர் பாட்டுக்களில் சிறிது ஈடுபட்டு அவற்றின் இயலமுதைப் பருகி இறவாத புது வாழ்வின் உணர்வு பெற்று வருகின்றனர்.

பாரதியார் கற்றுக் கவிபுனையும் பண்டிதர் கூட்டத்தில் சேர்ந்தவர் அல்லர். அவர் பிறவிக் கவி. "காரிகை கற்றுக் கவி சொல்லுமுன்னர்ப் பேரிகைகொட்டிப் பிழைப்பது நன்று" என்று அனுத்துரைத்த புலவர், காரிகை இலக்கணம் கற்பவரெல்லாம் கவிகளாக முடியாது என்பதும், பண்டிதர் வனையும் செய்யுள்களெல்லாம் கவிகளாகா என்பதும் அறிந்தாரில்லைப் போலும். சொற்களாம் பலநிற நூலை வருந்திக் கோத்துத் தமிழ்ப் பாட்டெனும் பெட்டுத் துணிகளை நெய்து விற்க முயன்று அலுக்கும் புலவர்களும், அவர் கவிதைத் துப்பட்டிகளையே கண்டு மெச்சும் தமிழவரும், பாரதியாரின் இயல் மண அமுதப் பா மலர்களின் அருமையை முழுதும் உணர்ந்து அனுபவிக்கக் கூடியதில்லை.

தமிழகத்தில் தற்காலப் புலவர் பலரும் நிகண்டுகளாகிய உலகங்களைப் புலமையாசை உலையிலிட்டுப் பழுக்கச் சுட்டு யாப்பிலக்கணச் சம்மட்டி கொண்டடித்துப் பொருளழகு வறந்த பலவகைச் செய்யுட் சாமான்களைச் செய்து கைவந்த சொற்கம்மியர் ஆவதைக் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். இப்பண்டிதர் பருட் பொருட் சரக்குகள் மலியும் அங்காடிகளில், பாரதியாரின் உளப்புலத்து அவர் வரம்பற்ற வற்றாத அன்பூற்று நீர் வளர்க்க முதிர்ந்து மணத்தொடு கவினிறைந் தொளிரும் ஒள்ளிய இனிய பாமலர் வாகை மாலைகளை வேண்டுபவருண்டோ?

பாரதியார் வேண்டுமென்று வருந்திப் பாட்டுக்களை வலியப் பாடுபடுவதில்லை. கூவங்கள் குளங்களைப் போன்ற பிற புலவர் மனம் போலன்றிப் பாரதியாரின் உளம் தோட்டப் படா இயல்பில் அமைந்த புலமைநீர் நிலையமான கவிதைப்பொய்கை. தாமரை வகைகளன்றி, அல்லி முதலிய பிற ஜாதி மலர்களங்கே வளர மாட்டா. மெய்யறிவு ஞாயிற்றின் ஒளியால் அவர் உளப் பொய்கை மரைமலர்கள் பொன்மையொடு செம்மைவளம் புனிதவெண்மை எனும் நிறங்கள் புனைந்து மணம் பெருக்கி மிகப் பொலியக் காண்பாம். மழை பயிரை வளர்ப்பதும், மல்லிகை மலர்ந்து மணப்பதும் போலவே, பாரதியார் தமிழினிக்க உளம் தளிர்க்கப் பாடுவதும் அவருக்கு இயல்பே யாகும். இடையறாது எல்லைபறியாது அவர் உளத்தெழுந்து நிறையுங் கவி யுணர்ச்சி, கவிதை உறுப்பெற்று வெளிப்படத் தாழ்ப்பின், அவர் இதயத்தைப் பிளந்திறுக்கும். சூல் முதிரும் பொழுதெல்லாம் மழைத்துவிடும் மேகம் போல, நெஞ்சில் நிறையுணர்வு மிகுந்தோறும் கவிதை சொல்லுவது பாரதியார் வாழ்க்கையினில் இயல்பறமாம் அவசியமாய் நின்றதென்பதை அவர் பாட்டுக்களே கரி பகர்ந்து விசதமாக்கும்.

பாரதியார் கவியுலகம், பிரபஞ்சம் போலவே பலபட விரிந்து பொலிந்துலவு கவியண்டங்கள் என்ன நிற்கும். அவ்வுலகில் வானளக்கும் மலைக் குலமும் அளந்தறியா ஆழிகளும் ஒருங்கே நின்றுவப்பிக்கும்; பாலையற்ற நானிலமும் சோலையொடு பூவனமும் போறும் அருவிகளும் பொய்கையொடு பழ மரங்கள் புனித



மண மலர்ச் செடிகள் மலிந்து அழகு செய்து நிற்கும். இயற்கை வளம் அனைத்தினையும் இவர் கவிதையுலகினிலே பாக்கக் காண்பாம். உயிரற்ற ஓவியமும், பயனற்ற பாழ்த்த கவி மண்டபமும் பாரதியார் படைப்பினிலே பார்க்கவொண்ணு

அறிவினை நிதங்கொல்லும் வறுமை நோய் இவரை அகலாது நட்டிருக்கவிட்டு மிகப் பாராமுகமாய் நொதுமலுடன் வாழ்ந்திருந்த தமிழருக்கு இவர் செய்த கொடுமையெல்லாம், நீடிய புல்லடிமை நிலை வெறுத்து உரிமை விருப்பத்தை அவர் மனத்தே புகுத்தியதும், இறவாத தமிழ்ப்பாவால் அவர் செவியை-உளத்தை நிதமினிக்கச் செய்து அவர் நாண ஒறுத்ததுமே யாகுமன்றோ? பழமையிலே தமிழருக்கு மாறாக பத்தியுண்டு. சமயத்தில் மாறுபட்ட சமணர்களைக் கழுவேற்றி மகிழ்ந்த பழம் பெருமையினை மறவாது கோயில்தொறும் அச் செயலை விழவெடுத்து வருகின்ற நம்மவரைப் பழமைபேணார் என்றெவரே இகழ வல்லார்? பாரதியார் வாழ்ந்த பொழுது அவர் கவிதை வெறுத்து அவரைப் புறக்கணித்த நாமேயோ, நாம் வேண்டாது அவர் நமக்கு விட்டகன்ற கவிதைகளை நமது தமிழுணர்வு தளிர்க்க நம்மை ஊக்கி உளவளம் வளர்க்க விட்டு வைப்போம். தற்கால அரசியலில் கல்வியினைப் பேணுபவர் நமது தமிழ் அமைச்சரன்றோ? "இராமனாளிலென், இராவணனாளிலென் வையம்" என்பது நம் தமிழில் முதுமொழியன்றோ? தமிழகத்தே பிறந்தும் இந்தப் பழமையினைப் போற்றாத பாரதியார் பார்ப்பனரே யாவரன்றோ? இவர் கவிதை தமிழுலகில் நிலவாமல் நிறுத்துவதற்கு உதவாத தமிழ் அமைச்சர் இருக்கலாமோ? அதனாலே பாரதியார் இறந்த பின்னும் இன்று அவர் தம் கவிதைகளைக் கைப்பற்றி ஒதுக்கி நமது உளத்து வளர் நெட்டடிமைப் பழவுணர்ச்சித் தளராமற் போற்றுவது நமது கலைபேணு தமிழமைச்சர் கடனாவதன்றோ? சட்டசபை நந் தமிழச் சோதரரு மிதை மறந்து பாரதியார் பாவினத்தை ஆதரித்த செய்தி ஒரு புதுமையன்றோ? பாரதியார் பாடிய பாழ்ந் தமிழ் இனிமேல் தழைவதற்கு மேனாட்டில் இடம் பெறுமேல் வாழ்தல் கூடும். தமிழகத்தே யினித்தரிக்க யிடமுண்டோ, நீதமுண்டோ.

# இராஜா இராம் மோகன் ராய்.

எழுதியது

திரு. என். வேங்கட ரமணன்

(உரிமை ஆசிரியருடையது.)

நமது ஞானபூமியாம் இந்தியாவில் எண்ணிறந்த மகான்கள் அவதரித்திருக்கின்றனர். அவர்களில் சமயத்துறையில் உழைத்தார் பலர்; ஆசார சீர்திருத்தத் துறையில் உழைத்தார் மற்றும் பலர்; அரசியல் துறையில் உழைத்தார் வேறு பலர். அம்மூன்று துறைகளிலும் ஒருங்கே யுழைத்தவர் மிக மிகச் சிலரே. அச்சிலருள் நமது இராஜா இராம் மோகன் ராயர் ஒருவராம். இந்தியாவில் அந்நிய அரசாங்கத்தின் கீழ் ஒருபுறம் முறை தவறி கிறிஸ்து முதலிய பிறமதங்களும், பிறநாட்டாசாரங்களும், ஒருவகை நாத்திக சமயமும் பரவி வர, மற்றொருபுறம் நம்மவரின் அறியாமையால் மூடக் கொள்கைகளும், சமூகச் சண்டைகளும், சமயப் பூசல்களும் மலிந்துவர நாட்டிடை உண்மையறிவும், ஒற்றுமையும், சுயவுணர்ச்சியும், வீரமும் அருகிவருங் காலையில், நந்நாட்டில் தோன்றி தேசாபிமானத்தை யூட்டி, நாட்டைக் கவர்ந்திருந்த அறியாமையை யோட்டி, சர்வ சமரசமான ஆத்திக சமயத்தை நிலை நாட்டி, நம்மவருக்கு ஆசார சீர்திருத்தங்களில் வழிகாட்டி, அரசியலில் ஊக்கத்தை யூட்டி இந்தியாவை விழிக்கச் செய்த பெரும் பேறு இராம மோகனருக்கே முதற்கண் உரிமையாகும்.



இராஜா இராம் மோகன் ராய்

## பிறப்பு

இற்றைக்குச் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் வங்காள நாட்டில் **இராதா** நகரத்தில் வதிந்து வந்த ஒரு சிறு * ஜமீன்தாராகிய **இராம காந்த ராய**ருக்கும், அவரது அருமை மனைவியாராகிய **தாருணி** தேவியாருக்கும் அரும் பெறல் மகவாய் இராம மோகனர் தோன்றினார். அதுகாலை அவரது தந்தையார் பர்ட்வான் மன்னரிடத்தில் ஓர் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். இராம மோகனர் சிறு வயதினின்றே சுறு சுறுப்பும், தீவிர புத்தியும், எதனையும் ஆழ்ந்து சிந்திக்கும் பழக்கமும் உடையவராக விளங்கினார். தமது எட்டாவது வயதில் தம் தந்தையாரிடத்திலேயே கற்றுத் தெளிந்து, தந் தாய் மொழியாகிய வங்காளியில் நல்ல அனுபவ மெய்தினார்.

## கல்வியும் சமயமும்

அக்காலத்தில் அங்கு பார்சி பாஷை அரசியல் மொழியாயிருந்தமையால், அதனைக் கற்கவேண்டி ஒன்பதாவது வயதில் பாட்னாவுக்குச் சென்றார். அங்கே பார்சி பாஷையோடு அரபி பாஷையையும் கற்றுத் தேர்ந்து, க்ஷேத்திர கணிதம் முதலிய சாத்திரங்களிலும் வல்லவரானார். சிறு வயதினின்றே இந்து சமய சாத்திரங்களில் அவருக்கேற்பட்ட ஆர்வத்தின் காரணமாக, 14-வது வயதில் சமஸ்கிருத பாஷையையும் கற்கக் கருதி, நந்நாட்டில் கலைமகள் உறைவிடமெனப் புகழ்ப்பெறும் காசிமா நகரத்தை யடைந்து, தக்கார் பலரையணுகி, வடமொழியைக் கற்று, அம் மொழியில் வல்லவரானதோடு வேதம், சாத்திரம், உபநிடதம், காவியம் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்து, சிறந்த பண்டிதராகித் தம்மூர் வந்து சேர்ந்தார்.

---

* வங்காளத்தில் நிலச் சுவான்தாரர்களுக்கெல்லாம் ஜமீன்தார் என்று பெயர். தென்னாட்டு ஜமீன்தார்கள் விஷயம் வேறு.

ஆசிரியர், "**பாரதி**".

இராம மோகனர் கல்வியில் மாத்திரமே யன்றிக் கடவுள் வழிபாட்டிலும், ஒழுக்கத்திலும் இணையற்றவராக விளங்கினார். நாள்தோறும் சமய நூல்களை ஆராய்வதும், தம் தந்தையாரோடு சமய நுட்பங்களைப் பற்றி விவாதிப்பதும் அவருக்கு இன்பமான காரியங்களாம். அதன் பயனாக இறைவன் எங்கும் நிறைந்தவ னென்பதும், அவர் எல்லா சமயங்களுக்கும் பொதுவானவ ரென்பதும், வீணில் விக்கிரகங்களைப் பூசிப்பதில் பயனில்லை யென்பதும், அவரை பக்தி செய்வதாலேயே மகிழச்செய்ய வேண்டு மென்பதும், ஒழுக்க முடைமையே உயர்வுடைமை யென்பதும், பிறப்பை யொட்டிச் சமூக வேற்றுமைகளையும், உயர்வு தாழ்வுகளையும் பாராட்டுவது வீணென்பதும் ஆகிய கருத்துக்கள் அவரது உள்ளத்தில் வேரூன்றி வளர்ந்து வந்தன.

அக்காலத்தில் வடநாட்டில் சக்திமதம் எங்கும் பரவினமையின், விக்கிரக ஆராதனைகளின் பெயரால் பலவித அட்டூழியங்கள் நாட்டில் செய்யப்பட்டு வந்தன. சாதிச் செருக்கும், சமயப் பூசலும், ஒழுக்கத்தவறும், சீவ வதையும், நாத்திகமும் எங்கும் மலிந்தன. அதனைக் கண்ணுற்ற இராம மோகனர் "விக்கிரக நிவாரணம்" என்ற பெயரோடு விக்கிரக வழிபாட்டையும், அவ்வழியே செய்யப்படுகிற பிற மற வொழுக்கங்களையும் வன்மையாகக் கண்டித்து வங்காளி மொழியில் ஒரு நூலை எழுதி வெளியிட்டார். அது காலை அவருக்கு வயது பதினாறு. வங்காளி மொழியில் எழுதப்பட்ட வசன நூல்களில் முதலாவதும், அம்மொழியில் ஆக்கப்பட்ட வசன நூல்களனைத்திற்கும் வழி காட்டியானதும் இராம மோகனர் எழுதிய அந்நூலேயாமென்று பண்டிதர் பலரும் கூறுகின்றனர்.

## தேச யாத்திரை

விக்கிரக வழிபாட்டை இராம மோகனர் கண்டித் தெழுதிய காரணத்தால் அவருடைய சுற்றத்தார் பலரும் அவரை வெறுக்க முயலவே, அவருடைய தந்தையாரும் விக்கிரக ஆராதனையில் தமக்குள்ள பற்றின் காரணமாகத் தனயனிடத்தில் வெறுப்புற்று,



அவரை வீட்டை விட்டு வெளியேகும்படி உத்தரவிட்டார். "மெய் வருத்தம் பாரார்..." என்ற பாசுரத்தின்படி இராம மோகனர் தாங் கொண்ட கொள்கையினிடத்தில் உறுதியுடையவராய், சிறிதும் கலக்கமின்றி வீட்டை விட்டு வெளியேறி, தேச யாத்திரையை மேற்கொண்டார். இந்தியாவில் முக்கிய இடங்கள் பலவற்றிற்குச் சென்று, பண்டிதர்கள் பலரைக் கண்டு, நாட்டின் நிலையை யோர்ந்து, முடிவில் இமயமலையைக் கடந்து திபேத்து நாட்டை யடைந்தார். அங்கே ஒரு நகரத்தின் கண்ணுள்ள பண்டிதர்களிடத்தில் நட்புக் கொண்டு, அத்தேச பாஷையையுங் கற்று, புத்தமத நூல்களைப் பயின்று, அம்மத வுண்மைகளையுமறிந்து, அம்மதத்தின் பெயரால் நாட்டில் பரவியிருந்த குறைபாடுகளை யகற்ற விரும்பி, புத்தமதப் பண்டிதர்களிடத்தில் சமயவாதங்கள் புரியத் தொடங்கினார். புத்த சமயத்தார் சமயவாதங்களில் அவரை வெல்ல முடியாமையைக் கருதி, இறுதியில் அவரைக் கொன்றுவிடுவதெனத் தீர்மானித்தனர். அவ்வுண்மையை யுணர்ந்த அந்நாட்டு மங்கையர் சிலர் அழகும், அறிவும் ஒருங்கே உருவெடுத்து வந்தாற் போன்ற இளைஞராகிய இராம மோகனர்பால் இரக்கங்கொண்டு, கொலைஞர் கையிற் சிக்காதபடி அவரை மறைத்துக் காத்து, அந்நாட்டை விட்டு வெளியே சென்று உயிர் பிழைக்கும்படி அவருக்கு உதவி புரிந்தனர். அவர் திபேத்து நாட்டை விட்டுத் திரும்பி வந்த பொழுது, அவரது தந்தையார் அவர் மீது கொண்டிருந்த கோபத்தை விட்டு, மைந்தனது வருகையைக் கேட்டு உளம் பூரித்து, எதிர் சென்று இல்லத்திற் கழைத்து வந்து, இனிது நிகழ்ந்த வரலாறுகளைக் கேட்டு இறும்பூதுற்றார்.

அக்காலத்தில் இத்தேசம் கிழக்கிந்திய வர்த்தகக் கூட்டத்தாரின் ஆளுகையிலிருந்தமையால், அவ்வரசாங்கத்தின் உத்தியோகத்திலும் அனுபவம் பெற வேண்டி, இராம மோகனர் தமது 20-வது வயதில் ஆங்கிலத்தைக் கற்க ஆரம்பித்தார். விரைவில் அம்மொழியில் செவ்வையாக எழுதவும், படிக்கவும் கற்றுக் கொண்டதோடு, பிரான்சு, லத்தீன், கிரீக், ஹிப்ரூ முதலிய மொழிகளையும் பயின்றார்.

அதன் மீது 1800-ம் ஆண்டில் அரங்கபுரத்தின் கலெக்டர் கச்சேரியில் எழுத்தாளராக அமர்ந்தார். அவ்வேலையிலும் மேலதிகாரிகளால் நன்கு மதிக்கப் பெற்றார்.

## ஆசார சீர் திருத்தம்

இராம மோகனர் பிராமண குலத்திற் பிறந்தவராயிருந்தும், உண்மையினிடத்தில் பற்றுடையவராதலால், பிராமணர் செய்யும் சாதிக் கொடுமைகளையும், சமய இழுக்குகளையும் வன்மையுடன் கண்டித்து வந்தார். அதனால் தம் சுற்றத்தாரும், தம் தந்தையாரும் தம்மை வெறுப்பதையும் பொருட் படுத்தினவரன்று. அக்காலத்தில் வடநாட்டில் இந்துக்களில் **உடன் கட்டை யேறல்** என்ற கொடிய வழக்கம் சமயத்தின் பெயரால் நடை பெற்று வந்தது. அதாவது கணவன் இறந்து படுவானேயானால் அவனது உடலோடு மனைவியும் தீயிற் குளித்து இறப்பதாகும். அம்முறை ஒரு காலத்தில் கணவனது பிரிவாற்றாமைக்கு ஆற்றாது, கணவனுடன் தன்னிச்சையாய் உடன் கட்டை யேறி உயிர்விட்ட உத்தமிகளை முன்னிட்டுத் தோன்றியதாம். அதனால் கணவனும், மனைவியும் நற்பதவி யடைவார்களென்று கருதப்பட்டது. அஃது நாளடைவில் கணவன் மரித்தால் அவன் உடலோடு அவனது மனைவியை அவள் விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயப்படுத்தி, தீயிற் கட்டிப் போட்டுச் சுற்றத்தார் சுட்டெரிக்கும் கொடுமையான நிலைமைக்கு வந்து நின்றது. நாடெங்கும் சுற்றத்தாரின் கொடுமைக்கு ஆற்றாது பரிதபிக்கும் அனாதையாகிய கைம் பெண்களின் அழுகுரல் ஓங்கி நின்றது. 1815-ம் வருஷம் முதல் 1828-ம் ஆண்டுக்குள் கல்கத்தா நகரத்தில் மட்டும் 5000 பெண்மணிகள் உடன் கட்டை யேற்றல் என்ற கொடுஞ் செயலால் வதைக்கப் பட்டார்களென்றால் அதன் கொடுமையை யாரால் அளவிட முடியும்? இக்கொடிய செய்கை நமது இராம மோகனரது உள்ளத்தில் பாய்ந்து உருக்கலாயிற்று. தமது நெருங்கிய சுற்றத்தாரிடையிலேயே இதுபோல் நேர்ந்த ஒரு சம்பவம், தம்மாயுட் காலத்தில் எவ்விதமாயினும் அரசாங்கச் சட்டத்தின் மூலமாக நாட்டில் இச்சதிச் செயலை அறவே யொழிக்க வேண்டுமென்ற தீவிர எண்ணத்தை அவருக் குண்டாக்கியது.



## சதியைத் தடுக்கச் சட்ட மியற்றல்

பின்னாளில் தமது தந்தையார் காலமாய் விடவே தமது உத்தியோகத்தை விடுத்து மீதியான வாழ்நாட்களைத் தேசத் தொண்டில் செலவிட வேண்டுமென்ற கருத்துடையவராய் 1814-ம் ஆண்டில் தம்மிருப்பிடத்தைக் **கல்கத்தா** நகரத்திற்கு மாற்றிக் கொண்டார். அதுகாலை வங்காளத்தில் சமயத்தின் பெயரால் நரபலிகளும், சிசுக் கொலைகளும், சதிச்செயல்களும் ஏராளமாக நடை பெற்று வந்தன. அக்கொடுமைகளைக் கண்டு மனஞ் சகியாதவராய், கல்கத்தாவுக்குப் போந்தது முதல் அக்கொடுமைகளை நாட்டை விட்டொழிக்கப் பெரிதும் பாடுபட்டார். நரபலிகள் முதலிய வற்றை அரசாங்கத்தார் தடுக்க முற்பட்ட பின்னரும் உடன் கட்டை யேறும் வழக்கத்தை யொழிக்க அரசாங்கத்தார் முற்படவில்லை. அதனால் இராம மோகனர் உடன் கட்டை யேறும் வழக்கத்தின் கொடுமையைப் பற்றியும், அதைத் தடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் பல பிரசங்கங்கள் புரிந்தார்; பல புத்தகங்களை எழுதி வெளியிட்டார்; பண்டிதர் பலரோடு பல முறை சாத்திர வாதங்கள் செய்தார். தங் கருத்துக்கு உடன்பட்டார் பலரிடத்து மகஜர்கள் எழுதி வாங்கித் துரைத்தனத்தாருக்கு அனுப்பி வைத்தார். அச்சமயத்தில் இந்தியாவின் கவர்னர் ஜெனராலாயிருந்த **வில்லியம் பெண்டிங்** பிரபுவையும் அடிக்கடி பேட்டி கண்டு அக்கொடுஞ் செயலை நீக்கக் கேட்டுக் கொண்டார்.

தற்போது பல கொடுமையான வழக்கங்கள் இந்தியரிடையில் நிலவி வருவதும், ஆசார சீர்திருத்தக்காரர்கள் அவற்றைச் சட்டத்தின் மூலமாகத் தடுக்க முயல்வதும், அம் முயற்சியை வைதீகக் கூட்டத்தைச் சேர்ந்த கருணாடக வாதிகள் எதிர்த்து வருவதும் கண்கூடு. அதுபோல் அக் காலத்திலும் இராம மோகனரது கொள்கையின் மேன்மையை யறியாத பெரும்பாலான இந்திய மக்கள் "உடன் கட்டையேறல் என்ற செய்கை தடுக்கப்படின் இந்து மதம் சீர்கேடடைந்து விடுமென்றும், பெண்கள் நற்கதியை யிழந்து விடுவார்களென்றும், அரசாங்கத்தார் சமய விவகாரத்தில் தலையிட

லாகா தென்றும், ஆகவே, தொன்று தொட்டு வரும் அவ் வழக்கத்தை நிலை நிறுத்த வேண்டு மென்றும்" நாட்டில் பெருங் கிளர்ச்சி செய்யவும், துரைத்தனத்தாருக்கு மகஜர்கள் அனுப்பவும் முற்பட்டனர். இந் நிலையில் துரைத்தனத்தார் என்ன செய்ய மாட்டுவர்?

அப்படி யிருக்கையில், ஒரு நாள் தற்செயலாக, கல்கத்தா நகரில் இறந்துபோன ஒரு தனவந்தரின் மனைவியும் இளம் பருவத்தினளுமாகிய ஒரு பெண்மணி, தன்னை உடன் கட்டை யேறும்படி வற்புறுத்தும் சுற்றத்தாரின் வார்த்தைகளுக்கு உட்பட்டவள்போல் நடித்து, மயானத்திற்குச் செல்லும் வழியில் சிறிது தூரத்தில் இராஜப் பிரதிநிதியாரின் மாளிகை யிருப்பதைக் கண்டதும், திடீரென்று கூட்டத்தை விட்டு விரைந்தோடிச் சென்று, கணவனுடன் பேசிக்கொண்டிருந்த "லேடி வில்லியம் பெண்டிங்" பெருமாட்டியின் பாதங்களில் வீழ்ந்து உயிர் பிச்சைக் கொடுக்கும்படி வேண்டினாள். திடீரென்று நேர்ந்த அச் சம்பவத்தைக் கண்ணுற்றுத் திகைத்துப் பின்னர் விஷய முணர்ந்த அவ் வம்மையார், அப் பெண்மணியைக் காப்பதாக வாக்களித்து, உடனே தங்கணவரை விளித்து "இவ்விதம் பெண் கொலை புரியும் வழக்கத்தை நமது காலத்திலேயே இந் நாட்டில் ஒழித்துவிடவேண்டும்" என்று கூறினார். அச் சமயத்தில் அப் பெண்ணின் சுற்றத்தார் கவர்னர் ஜெனரல் துரையவர்களின் மாளிகை வாயிலை யடைந்து, அப் பெண்ணைத் தம்மிடம் ஒப்புவிக்கும்படிக் கேட்டும், துரையவர்கள் அதற்கு ஒருப்படாததை முன்னிட்டு வெட்கித் திரும்பினர். அவ் வமயத்தில் ஏற்கெனவே அங்கு சென்றிருந்த இராம மோகனர், தெய்வாதீனமாகக் கிடைத்த அச் சம்பவத்தை முற்படுத்தி, கவர்னர் ஜெனரல் தம்பதிகளின் மன முருகுமாறு உடன் கட்டை யேறும் வழக்கத்தின் கொடுமையை விரித்துரைத்தார்.

அவை யனைத்தையுங் கண்ணுற்ற கவர்னர் ஜெனரல் அவர்கள் இராம மோகனரது உண்மையை யோர்ந்து 1821-ம் ஆண்டு டிசம்பர் 4 தேதி சதிச் செயலைத் தடுத்து ஒரு சட்ட மியற்றினர்.



## சமயத் தொண்டும் தேசத் தொண்டும்

மேலே கூறியபடி இராம மோகனர் ஆசார சீர் திருத்தத்திற்குழைத்ததோடிராமல், சமய சீர் திருத்தத்திற்கும் முற்பட்டுழைக்கலானார். ஒரு புறம் தெய்வ பக்தி சிறிது மில்லாமல் கண்டதே காக்ஷி யென்று பலியிடுதல் முதலிய மூடச் செய்கைகளோடு விக்கிரக ஆராதனைகளைச் செய்துகொண்டு, சமய—சமூக வேற்றுமைகளைக்கொண்டு ஒருவருக் கொருவர் ஒற்றுமையின்றி, இந்திய பெரு மக்கள் கலாம் விளைப்பதையும், மற்றொரு புறம் கிறிஸ்து முதலிய புறச் சமயத்தாரின் போதனைகளால் இந்து மதத்தில் உண்மையில்லையென்றும், அஃது மூடச் சமயமென்றும் அதனை யிகழ்ந்து இந்திய மக்கள் பலர் புறச் சமயங்களில் புகுந்து வருவதையும் கண்ட இராம மோகனர் அவ் விருவகைக் கூட்டத்தாரின் அறியாமையை யொழித்து, இந்து மதத்தின் உண்மைத் தத்துவங்களையும், பரிசுத்தமான ஆஸ்திக மதக் கொள்கைகளையும் சர்வ சமரசத்துடன் நாட்டில் பரப்புவதற்கென அறிஞர் பலரைக் கூட்டி முயற்சித்தார். வேதாந்த விஷயங்களைப் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினார்; அநேக புத்தகங்களைத் தாய் மொழியில் எழுதிப் பிரசுரித்தார். 1816—17-ம் வருடங்களில் உபநிடதங்களை ஆங்கிலத்திலும், வங்காளியிலும் மொழிப்பெயர்த்து வெளியிட்டார். தெய்வ பாஷையிலுள்ளவற்றைத் தேச பாஷையில் வெளியிட்டதைக் கண்ட வைதீகக் கூட்டத்தார் இராம மோகனருக்குப் பலவித இடுக்கண்களை விளைத்தனர்.

எத்துணை இன்னல்களுக்கும் அஞ்சா நெஞ்சத்தினராய் நமது இராம் மோகனர் மகம்மதியரின் வேதமாகிய குரானையும், கிறிஸ்தவரின் வேதமாகிய பைபிளையும் மூல நூல்களிலேயே படித்து அவற்றின் உண்மைகளையும் உணர்ந்தார். அதன் மீது அம் மதங்களிலுமுள்ள குறைகளையும் சற்றும் அஞ்சாது எடுத்துக் கூற ஆரம்பித்தார். அது விஷயமாய்ப் பற்பல நூல்களை எழுதி வெளியிட்டார். **எல்லா மதங்களிலும் கவனிக்கையில் உட் கருத்தில்-உண்மை முடிவில் எங்கும் சமரசமே மிளிர்கிறது** என்ற உண்மையை உலகத்திற்கு விளக்கினார். இவரது அரிய நூல்கள் இந்தியாவிலேயே யன்றி

ஐரோப்பா கண்டத்திலும் பல தேசங்களிலும் பரவலாயின. மேல் நாட்டுப் பண்டிதர்களும் பலர் இவரது நூல்களின் அருமை பெருமைகளைக் கண்டு வியந்து பேசலாயினர். அது காலை இராம மோகனர் தாய் மொழியில் அநேக **கீதங்களையும்** எழுதினர். அவை இன்னும் வங்காளத்தில் எங்கும் பாடப்படுகின்றன.

அதன்மீது விக்கிரக ஆராதனையை யொழித்து பிரம்ம உபாசனை செய்வதையே கருத்தாகக் கொண்டு, தமது கொள்கைகளை நிலை நிறுத்தி வளர்க்க வேண்டி, தஞ் சமயத்திலீடு பட்டார் பலரைக் கூட்டி ஒரு சபையை நிறுவினர். அதுவே, பிற்காலத்தில் **பிரம்ம சமாஜ**மெனப் பெயர் பெற்றுக் கற்றுணர்ந்த மேதாவிகள் பலரது கூட்டுறவால் இற்றைக்கு இந்திய நாடெங்கும் பல கிளைச் சபைகளைக்கொண்டு நாட்டின் நலத்தை நாடி யுழைத்து வருகின்றது.

இராம மோகனர் "**சம்பந்த கௌமுதி**" என்ற பெயரோடு ஒரு பத்திரிகையை ஏற்படுத்தி அதில் பிரம்ம சமயக் கொள்கைகளைப் பற்றியும், ஆசார சீர்திருத்தங்களைப் பற்றியும், சமத்துவம், சுய மதிப்பு முதலியவற்றைப் பற்றியும், நாட்டின் நலத்திற்கான மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் எழுதி வந்தார். வரதக்ஷிணை, பல மனைவியரை மணத்தல், உயர் ஜாதிப் பிறப்பு, பல தெய்வ வணக்கம், விஞ்ஞான சாத்திர ஆராய்ச்சியின்மை, உலகியல் அறியாமை, பாலிய விவாகம் முதலிய குற்றங்களைக் களைய விரும்பி வேலை செய்து வந்தார்.

இந்திய மாணவர்கள் ஆங்கிலத்தோடு உயர்தரக் கல்வி கற்றுக் கொள்ளத்தக்க சாதனங்கள் அக்காலத்தில் மிக மிகக் குறைவாயிருந்த படியால் அரசாங்கத்தாரோடு வாதாடி நாட்டில் ஆங்காங்கே கலா சாலைகளை யேற்படுத்த வேண்டுமென்றார். கடைசியில் தாம் ஐரோப்பிய நண்பர் சிலரோடு கூடி 1817-வது ஆண்டில் இந்தியக் **கலா சாலைகள்** சிலவற்றை யேற்படுத்தி துரைத்தனத்தாருக்கு வழி காட்டினர். இந்திய மக்கள் உலகில் உயர்வு பெற்ற பிற நாட்டாருக்குச் சமமாக வாழவேண்டுமானால் தாய் மொழியோடு ஆங்கில



மொழியையுங் கற்று, உலகியலை யுணர்ந்து, விஞ்ஞான சாத்திரங்களைப் பயின்று, நாட்டு அரசியலிற் புகுந்து, சுய மதிப்பையடைந்து ஒற்றுமையுற்று, ஆசார சீர்திருத்த முடையவராய், தேச பக்தி, தெய்வ பக்தி முதலியன கொண்டு வீர மக்களாய் வாழ வேண்டுமென்பது இராம மோகனரின் உள்ளக் கிடக்கையாம். அவ்வாறு அவர் இந்தியாவில் தமது நோக்கத்தைச் சாதிப்பதற்கு இடைவிடாது உழைத்து வருகையில் அவர் இங்கிலாந்து செல்ல வேண்டிய அவசிய மொன்று வாய்த்தது.

## இங்கிலாந்து யாத்திரை

டெல்லி நகரை யரசாண்டு வந்த ஔரங்க ஜீப் சக்கிரவர்த்தியின் வமிசத்தில் வந்த "**அக்பர்**" என்ற மன்னர் தமது குறைகள் சிலவற்றை ஆங்கில மக்கட் கழகத்தாரின் முன்னர் அறிவிக்க வேண்டித் தமக்குப் பிரதிநிதியாக இராம மோகனரை இங்கிலாந்திற்குச் செல்லக் கேட்டுக்கொண்டதோடு, "இராஜா" என்ற பட்டத்தையும் அவருக் களித்து, வழிச் செலவுக்குப் பண உதவியும் புரிந்தார். அதுவேயன்றி, நம்நாட்டில் இராஜப் பிரதிநிதியார் உடன் கட்டை யேறும் வழக்கத்தைச் சட்டத்தின் மூலமா யொழித்ததைக் கண்ட வைதிகக் கூட்டத்தைச் சேர்ந்த இந்திய மக்கள் அச்சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று பார்லிமெண்டு சபையாருக்குப் பல மகஜர்கள் எழுதிக் கொண்டிருந்தனர். அதை முன்னிட்டுப் பார்லிமெண்டாரின் முன்னர் தமது சாக்ஷியத்தைக் கூறி, அச்சட்டத்தை நிலை நிறுத்த வேண்டியும் இங்கிலாந்து செல்ல வேண்டிய அவசியம் இராம மோகனருக் கேற்பட்டது. ஆகவே 1830-ஆம் நவம்பர்மீ 15 தேதியில் இங்கிலாந்திற்குப் புறப்பட்டார். வைதிகக் கட்டுப் பாட்டை நிராகரித்து, இந்தியாவில் முதன் முதல் கடல் யாத்திரை செய்த பிராமணர் இராஜா இராம் மோகன் ராயரே யாவர்.

இங்கிலாந்து செல்வதற்கு முன்னரே இவரது புகழ் அந் நாட்டில் பரவி யிருந்தபடியால், இவரது வரவைக்கண்ட ஆங்கிலேயர் மிகச் சிறப்போடு வரவேற்று உபசரித்தனர். இராஜ தரிசனமும்

அவருக்கு எளிதில் கிடைத்தது. அன்றியும் 1833-ம் வருஷத்தில் விக்டோரியா மகா ராணியாரின் மகுடாபிஷேகக் காலத்தில் பிற நாட்டுப் பிரதிநிதிகளைப் போலவே இவரும் நன்கு மதிக்கப்பட்டார். அத்தேசத்திலிருந்த கவிகள், இயற்கை நூற் புலவர்கள், தத்துவ சாஸ்திரிகள், சரித்திரக்காரர்கள் முதலிய பலரும் இராம மோகனரது நட்பை விரும்பிப் பெற்றனர். அது சமயத்தில் அவர் இந்திய அரசியல் சம்பந்தமாகப் பல விஷயங்களை, பார்லிமெண்டு மகா சபையில் வாதித்தார். இந்தியாவில் உடன் கட்டை (சதி) யேறும் வழக்கத்தின் கொடுமையைப் பற்றியும், இந்தியப் பெண் மணிகளின் அனாதரவான நிலைமையைப் பற்றியும் அம் மகா சபையோரின் முன்னர் உருக்கமாகப் பேசி உண்மையை விளக்கிப், பார்லிமெண்டாரை அச் சட்டத்தை உறுதிப் படுத்தும்படி செய்வித்தார்.

## இறப்பு

அப் பெரியார் 1831-ம் ஆண்டில் பிரான்சு தேசத்திற்குச் சென்று அங்கு சில நாள் தங்கி, பிரான்சு அரசரது விருந்தினராக விருந்தார். பிறகு மீண்டும் இங்கிலாந்து சென்றார். அது காலை ஆங்கிலத்தில் அன்னார் சில நூல்களை எழுதினார். அவற்றை ஐரோப்பியப் பண்டிதர் பலரும் மகிழ்ந்து கொண்டாடினர். இவ்வாறு ஐரோப்பாக் கண்டத்திலும் நற்புகழ் பெற்ற நம் இந்தியப் பெரியாரை கார்பெண்டர் துரையவர்கள் பிரிஸ்டல் நகரத்திற்கு அழைத்துச் சென்று கௌரவம் பாராட்டினர். அந் நிலையில் ஆங்கு இராஜா இராம் மோகன் ராயருக்கு ஜுர நோய் கண்டது. அதன் காரணமாய் நம் இந்திய மாதாவின் துரதிருஷ்டத்தால் 1833-ம் ஆண்டு செப்டம்பர் 27உ அன்னார் தேக வியோக மடைந்தார். அவரது மேனாட்டு நண்பர்கள் அம் மகானது பூத வுடம்பை பிரிஸ்டல் நகரத்தில் "அர்னொஸ்வேல்" நந்தவனத்தில் அடக்கம் செய்தார்கள். அதன் பின் இராஜா இராம் மோகனருடைய பிரிய நண்பராகிய துவாரகாநாத டாகூர் அவர்கள் ஐரோப்பாவுக்குச் சென்றபோது அம் மகானை அடக்கம் செய்த இடத்தில் ஒரு சமாதி கட்டுவித்துச் சிறப்புற்றார். வந்தேமாதரம்.

---



# நமது நந்தவனம்.

(நொடி : விடை அடுத்த பக்கத்தில்)

திரு. வை. சூரியநாராயண சாஸ்திரியார், M. A., L. T.

மண்டலந் தனிலே மலர்கள் முளைப்பது
தண்டிலே யெனினுந் தண்ணீர்த் தோன்று
(1) நாளப் பேர்பெறு நாண்மல ரென்னே?

மதிதலஞ் சுற்று மயிரக் கரத்தோன்
பாணிக் கிரகணம் புரிவதற் குரிய
(2) ஆயிர மிதழ்கள் அமைமல ரியாது?

அல்லியுங் கொட்டியு மாம்பலு நெய்தலும்
வாவியின் சேற்றில் வளரப் பெறினும்
காரணப் பெயராற் காண்டற் கடும்
(3) பங்க மதின்முளை பூவின் பெயரென்?

பிற்பகல் வெய்யோன் பிறந்த சஞ்செலக்
கன்னிகைப் பிரிந்த கற்பிற் சிறந்த
மகளிரை நிகர முகங் குவிந்து
(4) தாமரைப் பரப்பிற் றுயிலுவ தென்னே?

(5) வண்டிச் சக்கர வார்களை யன்ன
விந்தைய தாகவே விரிந்து பரந்துத்
தண்டு நுனியிற் றிகழ்மலர் யாதோ?

மண்ணில் முளைத்து முருகுறு மலரினுள்
மாந்தர் விரும்பா மலரில தேனுங்
(6) காமுறு மலரெனுங் காரணப் பெயரென்?

ஓரிடந் தங்கா ளெனினுஞ் செல்வி
(7) ஓய்ந்து பதியு மொப்பிலா மலரென்?

நீரினு நிலத்தினு நிகரிலா வண்ணஞ்
செவ்விதழ் குழுமிச் செழிக்கு மலரினுள்
எம்மலர் பதுமையின் எழிற்கை பாதம்
(8) முகமுப மேயம் முடிவுறப் பெற்றது?

(1) நளினம் (நாளம்=தண்டு)
(2) ஸஹஸ்ர (ஸஹஸ்ரம்=ஆயிரம்)
பத்திரம் (பத்திரம்=இதழ்)
(3) பங்கஜம் (பங்கம்=சேறு)
(4) தாமரஸம் (தாமரம்=ஜலம்)
(5) அரவிந்தம் (அர=ஆர்)
(6) கமலம் (1. கம்=விரும்ப, 2. ஜலம்)
(7) பத்மம் (பத்=அடைய)
(8) செந்தாமரை—

} தாமரை.

---

"தேசத் தொண்டர்கள் தேசாதிபதிகளைவிடத் திறமை வாய்ந்தவர்கள்."

"பெரியோர்களுக்குப் பணிசெய்து, நண்பர்களுக்கு உண்மையுடனும் இளைஞர்களுக்கு அன்புடனும் நடப்பதையே நான் விரும்புகிறேன்."

**கன்பூஷஸ்.**

* * * * *

"பழைய வழக்கங்களைக் கண் மூடித்தனமாய் பூஜிப்பது ஒழிய வேண்டும். இந்தியா விடுதலை பெறும் வரையில் ஓயாமல், களைக்காமல், திரும்பிப் பார்க்காமல், முன் வைத்த காலைப் பின் வைக்காமல், ஆபத்துக்களைக் கண்டலறாமல், அதிகார வர்க்கத்தாரின் கோபத்தையும் அடக்கு முறைகளையும் பொருட் படுத்தாமல், வீராவேசத்தோடு வெற்றி மேடைக்குச் செல்லுங்கள். உங்களை வேண்டிக் கொள்கிறேன். அதைரியமடையாதீர்கள்."

**சேன்குப்தா.**

கல்கத்தா காங்கிரஸ் வரவேற்புத் தலைவர், 1928.



பண்டித மோதிலால் நேரு

கல்கத்தா காங்கிரஸ் தலைவர்.

# ஆசிரியர் குறிப்புகள்.

## 43-வது இந்திய தேசீயக் காங்கிரஸ்

பல மதத்தினர், பல ஜாதியினர், பல கட்சியினர் கொண்ட இந்திய தேசத்தின் மாபெருஞ் சபையாகிய காங்கிரஸ் **பண்டித மோதிலால் நேரு** அக்ராசனாதிபத்தியத்தின் கீழ் கல்கத்தா மாநகரில் சென்ற டிசம்பர்மீ இறுதியில் கூடியது. பண்டிதரது அக்ராசனப் பிரசங்கம் அருமையாகவே யிருக்கிறது. ஆரம்பம் முதல் அந்தம் வரையில் தேசீய மணம் வீசுகின்றது. தேசத்திற்கு எவை இப்பொழுது வேண்டுமோ அவை அனைத்தையும் கூறிவிட்டார்.

வரவேற்புச் சபைத் தலைவர் ஸ்ரீமான் **யதீந்திர மோகன சென் குப்தா** அவர்கள் மிக உருக்கமாகவும், உறுதியாகவும் பேசியிருக்கிறார். பிரிட்டிஷ் ஆட்சியின் தவறுகளை விவரித்துக் காட்டியிருக்கிறார். இந்தியரனைவரும் ஓர் குலம், ஓர் இனம், ஒரு தாயின் மக்கள் என்ற உணர்ச்சியுடன் கூடிய **தேசீய மதம்** நமது தேசத்தில் உண்டாக்க நாம் பாடுபடவேண்டுமென்று கூறியிருக்கிறார். இவரது பொன்னுரைகளை மிகவும் போற்றி, நாம் அவைகளை அனுசரிக்க வேண்டும். வழக்கம்போலச் சில காகிதத் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தாலும், நேரு இட்டப்படி குடியேற்ற நாட்டுச் சுயாட்சி இப்பொழுது வேண்டுமெனக் காங்கிரஸ் தீர்மானித்தது போற்றற்குரியதே. இவ்வாண்டின் இறுதிக்குள் குடியேற்ற நாட்டுச் சுயாட்சி நமக்குக் கிடைக்கவேண்டும் இல்லாவிடில் நாம் ஒத்துழையாமையை ஆரம்பிக்க வேண்டும் எனவும் தீர்மானமாயிருக்கிறது. இந்த வேண்டுகோளுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் என்னதான் செய்யப் போகிறது? பார்ப்போம். பூரண விடுதலையே நம் தேசத்திற்கு வேண்டியது. மானிட உருவம் தாங்கிய எவனும் சுதந்திரம் வேண்டாப்

சென்ற சென்னைக் காங்கிரஸ் பூரண சுயேட்சை வேண்டுமெனத் தீர்மானித்த போதிலும், அது இதுவரையிலும் என்ன செய்திருக்கிறது? ஒன்றுமில்லை. எழுத்தளவில், பேச்சளவில் இருப்பதைக் காட்டிலும் காரியத்தில் காட்டுவது நல்லதல்லவா? இத் தீர்மானத்தால் ஒத்துழையா இயக்கத்திற்கு வித்திடப்பட்டிருக்கிறது. சுமார் 50,000 தொழிலாளர் ஆவேசம்கொண்டு காங்கிரஸ் பந்தலுக்குள் நுழைந்து, தொழிலாளர் ஆதிக்கத்தைச் சிறிது நேரமாயினும் செலுத்தியது வருங்கால உலகில் தொழிலாளரின் உன்னத ஸ்தானத்திற்கு அறிகுறியே. கல்கத்தா காங்கிரஸில் வீரர்களாக விளங்கிய ஸ்ரீமான்கள் **சுபாஸ் சந்திர போஸ், ஜவேரி லால் நேரு** ஆகிய இரு இளஞ் சிங்கங்களின் கர்ச்சனையைக் கேட்டு இந்தியர், வாலிப உணர்வு கொண்டிருப்பார்கள் என்றே நம்புகிறோம்.

## நேரு கமிட்டி அறிக்கை

1928-௵ மே௴ 19உ பம்பாயில் கூடிய **சர்வ கட்சி மகாநாடு** நியமித்த **நேரு கமிட்டி**யாரால் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கை மிக்க சிரமத்துடன் எல்லோருக்கும் பொருந்தும்படியாகவே தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த யாதாஸ்தில் சிறு திருத்தம் செய்துகொண்ட பிறகே காங்கிரஸால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த நேரு கமிட்டி அறிக்கையை இந்தியாவில் பற் பலவித அநேக அரசியல் வாதிகளும் பல பத்திரிகைகளும் போற்றியது மட்டுமன்றி, அநேக அயல் நாட்டு அரசியல் புநிணர்களும், அறிஞர்களும் போற்றியிருக்கின்றார்கள். விசால நோக்கத்துடன் நடு நிலையில் நிதானமாய் நின்று பார்த்தால், நேரு அறிக்கையை ஒவ்வொருவரும் ஆதரிக்காமலிருக்க முடியாது. இதைக் காட்டிலும் வேறொரு நல்ல திட்டத்தை இந் நிலையில் தயாரிப்பது எளிய காரியமல்ல.



## 44-வது தேசீய ஆசார சீர்திருத்த மகாநாடு

இந்த ஆசார சீர்திருத்த மகாநாட்டிற்கு பம்பாய் ஸ்ரீமான் **ஜெயகர்** தலைமை வகித்து மிக்க தைரியமாய் நமது சமூக ஊழல்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். வைதீகர்கள் இந்திய சமூக முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாயிருக்கிறார்கள் என்று அவர் கூறியிருப்பதை நாம் நன்கு ஆலோசித்தல் வேண்டும். மாதர் விடுதலையடைய வேண்டுமென்று வற்புறுத்துகிறார். கூடுகளில் கிளிகளை அடைத்து வைத்திருப்பதைப் போன்று, பெண்களை வீடுகளில் அடைத்து வைத்திருப்பவர்கள் இவரது மரகத வாசகங்களை மறுபடியும் மறுபடியும் படித்துச் சிந்திப்பார்களாக. உடன் கட்டையேற்றல் என்ற கொடிய வழக்கத்தைப்பற்றி இப்பொழுது வைதீகர்கள் என்ன எண்ணுகிறார்கள்? மனைவி மாண்டால், புருஷனையும் மனைவியுடன் எரிக்கவேண்டும் என்று வைதீகர்கள் அன்றும் இன்றும் சொல்லவில்லையே. புராதனப் புனித இந்திய சமூகம் வைதீகர்களால் பாழடைந்தது, பாழடைந்து கொண்டிருக்கிறது. நமது நாடு ஒரு சிறிய அன்னிய நாட்டாருக்கு அடிமைப் பட்டிருப்பது போல இந் நாட்டுச் சில லட்சம் வைதீகர்களுக்கு எத்தனையோ கோடிக்கணக்கான மக்களடங்கிய நமது தேசம் அடிமையாகி அவதிப்பட்டுக்கொண்டு தவிக்கிறதென்று அநேக லட்சக் கணக்கான தேச பக்தர்கள் இன்று கண்ணீர் வடித்துக் கதறிக் கொண்டிருக்கிறார்கள். எந்நாடு மூடப் பழக்க வழக்கங்களை ஆதரித்து அனுஷ்டிக்கிறதோ, எந்நாடு தனது முன்னேற்றத்தைத் தக்கபடி கவனிக்காது வைதீகர்களுக்குக் கட்டுப்பட்டு ஆராய்ச்சியின்றிக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றி நடக்கிறதோ, எத்தேசம் பெண்களை அடிமைகள் போன்று நடத்துகிறதோ, அத்தேசம் ஒருக்காலும் முன்னேறப் போவதில்லையென்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்.

## வாலிபர் மகாநாடு, கல்கத்தா

மேற்கு இந்திய வாலிபர்களால் நன்கு மதிக்கப்பட்ட ஸ்ரீமான் **நரிமன்** நாட்டு இளைஞர்களுக்குப் புத்துணர்ச்சி உண்டாக்கத்தக்க

முறையில் வீரத்துடன் பேசியிருக்கிறார். நாடெங்கும் பார்டோலியாக்க வேண்டுமென்றும், வாலிபர்கள்தான் தேச கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றும் முழக்கியிருக்கிறார். தமிழர்களுக்குத் தனது நாட்டுப் பாட்டுக்களால் புத்துயிர் அளித்த கவி அரசு சுப்ரமண்ய பாரதியாரின் தேசபக்தி குபீர், குபீர் என்று பற்றி எரியும் பாடல்கள் அடங்கிய புஸ்தகங்களைச் சர்க்கார் கண் மூடித்தனமாய் பறிமுதல் செய்ததைக் கண்டித்திருக்கிறார். "**இந்திய வாலிபர்கள் தங்கள் பொறுப்பை யெல்லாம் வயது சென்ற தலைவர்களுடைய கையில் ஒப்படைத்துவிட்டு, கைகட்டித் தூரத்தில் திருப்தியோடு இருந்துவிடமுடியாது. இந்தியா புதிய மாறுதல்களை அடையும்படி செய்வதோடு சுதந்திரத்தோடும் பெருமையோடும் விளங்கும்படி செய்ய வேண்டியது எங்களுடைய கடமை யென்பதை நாங்கள் அறிந்துகொண்டு விட்டோம்**" என்று உபசரணை சபைத் தலைவர் **ஸ்ரீ**மான் **சுபாஸ் சந்திர போஸ்** கூறியிருப்பதை இளந் தமிழர்கள் பன்முறை படித்துச் சிந்தித்துத் தீவிரமாக வேலை செய்ய முன் வந்து, தமிழ் நாடெங்கும் வாலிப இயக்கத்தைப் பிரச்சாரம் செய்து பரப்பி; அதைக் காத்து வளர்ப்பார்களாக. இத் தொண்டிற்காகத் தேசமே வாலிபர்களைக் கூவிக் கூவி ஆத்திரத்துடன் அழைக்கிறது. யௌவனர்களே! தயவு செய்து செவி கொடுங்கள்.

## இந்த வருடத்தில் சென்ற வருடத் தொடர் விஷயங்கள்

சைமன் கமிஷன் போன ஆண்டு இங்கே வந்தது இன்னும் இருக்கிறது. தேசமே அதை உபேக்ஷிக்கும்பொழுது எங்கோ சிலவிடங்களில் சிலர் அதற்கு மண்டகப்படிகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச்செய்வதால் இவர்களுக்குச் சில வெகுமதிகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. கொடைக்கானலில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் நாபா மகாராஜாவின் கஷ்டம் இனியும் ஒழியவில்லை. பறிக்கப்பட்ட பாரதியார் பாடல்கள் பழையபடி திருப்பி இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்றன. "சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தானே" என்ற முதுமொழி போன்று பாரதியாரின் பாடல்களைப் பறிமுதல் செய்து தடுத்துப் பாரதியாரின் புகழைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம்



முற்றிலும் பிரக்யாதி செய்துவிட்டார்கள் சென்னைச் சர்க்கார். வட ஆற்காடு ஜில்லாவில் சில காலமாக அடக்குமுறை தாண்டவமாடுகிறது. "பர்மா பர்மியர்களுக்கே" என்ற நோக்கங்கொண்டு இந்தியர்களுக்கு விரோதமாகச் சில சுயநல பர்மியப்புலிகள் பர்மாப் பிரிவினை விஷயமாகக் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் வாழும் இந்திய மக்களுக்கு அதிகமான ஓட்டுரிமைகளைக் குறைக்கச் சிலர் சிலோனில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

## ஆப்கனிஸ்தானம்

இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தில் மலைகளால் சூழப்பட்டு, மூடப் பழக்க வழக்கங்களால் இருட்டறை போன்று மூடப்பட்டுக் குழப்பங்கள் நிறைந்த சரித்திரமுடைய ஆப்கானிஸ்தானம் மேன்மை வாய்ந்த அமானுல்லா அவர்கள் அமீராக வந்ததிலிருந்து உயர்வு பெற்று விளங்கிக்கொண்டிருந்தது. இவர் இந் நாட்டில் அநேக சீர் திருத்தங்களைச் செய்திருக்கிறார். இவர் நல்ல சமர்த்தர், நூதன விவேகி, சுதந்திர வீரர், வைதீக வைரி, நாட்டின் நன்மைகளில் நன்கு நாட்டமுடையவர், பொது அறிவு மிக்கார் தேசத்தைத் திருத்துவதில் பெரிதும் ஆசை கொண்டவர்.

சென்ற ஆண்டு அமீர் ஐரோப்பாக்கண்டத்தில் பிரயாணம் செய்த பொழுது, ஐரோப்பிய தேசங்களெல்லாம் இவருக்கு அதிக மரியாதை அளித்தன. இவரது மேனாட்டுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு, தனது நாட்டிற்கு வந்தவுடன் பெண்கள் முக மூடி இல்லாமலிருப்பது, பெண் கல்வி முதலிய சீர்திருத்தங்களை நாட்டில் வேகமாய்ப் புகுத்தவே, வைதீகப் பித்துக்கொண்ட முல்லாக்களுக்குக் கனகோபமூண்டு கிளர்ச்சி செய்கிறார்கள். ஆப்கன் குழப்பமானது சிறு நெருப்புப்பொரி போல் பற்றியது இன்று காட்டுத் தீயென வேகத்துடன் பரவிப் பற்றிப் பிடித்துக்கொண்டு எரிகிறது. ரத்த வெள்ளம் ஓடாமலிருக்க வேண்டுமென்பதைக் கருதியே அமீர் அமானுல்லா தனது ஸ்தானத்தைத் துறந்து, இப்பொழுது காந்தஹாரத்திலிருக்கிறார். விஷயங்களை நன்கு பரிசீலனை செய்து பார்த்தால்

இந்தக் கலகம் சீர்திருத்தத்தைப்பற்றி உண்டானது மட்டுமல்ல என்று தோன்றும். அரசியல் விஷயத்தில் அமீர் மீது விரோதம் கொண்ட சிலர், சமூக சீர்திருத்த விஷயத்தில் வெறிகொண்ட மூல்லாக்களைத் தங்களுக் கனுகூலமாகக் கிளப்பி வேலை செய்கிறார்கள். அமீர் அமானுல்லா தன்தேசத்தை விட்டு, சென்ற வருடத்தில் வெளி நாடுகளுக்குப் போயிருக்கும் பொழுது, அரசியல் சூட்சிக்காரர்களுக்கு யோசனை செய்வதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அமானுல்லா அவர்கள் கமால்பாட்சா ஆட்சியின் அபிவிருத்தியில் கருத்தைச் செலுத்தி ஆவேசம்கொண்டு அதிக சீர்திருத்தங்களை தன்னாட்டில் திடீரெனப் புகுத்தியதே இக் குழப்பத்திற்குக் காரணம் என்று பொதுவாக எவரும் சொல்லக்கூடும். எந் நாடுகளிலும் சீர்திருத்தங்கள் என்றால் கூச்சல்கள்தான் குழப்பங்கள்தான். விஷயங்களைச் சர்ச்சை செய்து பார்த்தால், அரசியல் விஷயத்தை அடிப்படையாகக் கொண்டு இது எழுந்திருக்கிறதென்று சில அறிஞர் கூறுகின்றனர். சிறிது காலத்தில் எல்லாம் வெளிச்சமாகப் போகப் போகிறது.

கேவலம் தண்ணீர் தூக்கியின் மகனை பாச்சா சாக்கோ என்ற கலகக்காரத் தலைவன் தன்னை அமீராக்கி அட்டகாசம் செய்வது புலியிருந்து ஆட்சி செய்த இடத்தில் எலியிருந்து ஆட்சி செய்வது போலிருக்கிறது. பதவியை யிழந்த அமானுல்லா அவர்கள் இழந்த தன் ஸ்தானத்தை மீண்டும் அடைய வேலை செய்கிறார். இவருக்கு தேசத்தில் ஆதரவு அதிகம் இருக்கிறது. அமானுல்லா அவர்களின் வெற்றிக்காக இந்திய மக்கள் அனைவரும் மனமுவந்து பிரார்த்திக்கிறார்கள். ஆப்கனிஸ்தானத்தை ஆச்சர்யத்துடன் பார்த்து, உலகமே ஸ்தம்பித்து நின்று ஆப்கன் நிலை என்னாகுமோவென்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அமானுல்லா அவர்களுக்கு வெற்றி கிடைக்குமென்பதற்காகப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆப்கனிஸ்தானத்தின் முன்னேற்றம் ஆசியாவின் முன்னேற்றமென்றும் ஆப்கனிஸ்தானத்தின் வெற்றி இந்தியாவின் வெற்றி என்றும் இந்தியர் அனைவரும் யோசித்து நன்கு வேலை செய்தல் வேண்டும்.



## அகில இந்திய புஸ்தகாலய மகாநாடு

இந்த மகா நாடு கல்கத்தாவில் சென்ற டிசம்பர்மீ 27உ-யில் நடைபெற்றது. இதற்கு வரவேற்புக் கமிட்டித் தலைவரோ "ஆசியாக் கண்டத்தின் ஆஸ்தான வித்வான்" **ரவீந்திர நாததாகூர்.** ஆனால் அவர் அப்பொழுது அசௌக்கியத்தால் ஆஜராகவில்லை. அவருடைய பிரசங்கத்தை வேறொருவர் படித்தார். மகா நாட்டின் தெரிந்தெடுக்கப்பட்ட அக்ராசனரோ டாக்டர் **அன்னை பெஸண்டு அம்மையார்.** அவருக்கு அன்று காங்கிரஸில் வேலை அதிகமாயிருந்தபடியால், அவருக்குப் பதிலாக வங்காளச் சர்க்கார் மந்திரி கனம் **நாசிபூர் ராஜா** தலைமை வகித்தார். ஒரு முக்கிய தீர்மானம் வரும்பொழுது வேறொரு கல்விமானைத் தன் பீடத்தில் வைத்துவிட்டு இம் மந்திரியும் மறைந்து விட்டார். நமது நாடெங்கும் புஸ்தகங்கள் பரவ வேண்டும், வாசிப்பவர்கள் பெருகவேண்டும், நாடு அறிவால் பிரகாசிக்க வேண்டும் என்று எண்ணி ஆத்திரத்துடன் புஸ்தகாபிமானிகளால் கூட்டப்பெற்ற அகில இந்திய புஸ்தகாலய மகா நாட்டின் தலைவர்களும் நாட்டின் தலைவர்களும் இதில் பிரத்தியேகக் கவனம் செலுத்தி நடந்து கொள்ளவில்லையென்று வருந்தாமலிருக்க முடியவில்லை. தேசத்தின் நிலை இவ்வாறிருக்கிறது!

5-வது வருட அகில இந்தியப் புஸ்தகாலய மகாநாடு சென்னையில் கல்கத்தா சர்வ கலாசாலைப் பேராசியர் **பிரேமநாத் பானர்ஜி** அக்ராசனாதிபத்தியத்தின் அடியில் நடைபெற்ற பொழுது, பாஷைப் பிரிவினைப்படி புஸ்தகாலயங்கள் ஏற்பட்டு, அகில இந்திய அமைப்பினுடன் இணைக்கப்படவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேறியது. இதை அமுலுக்குக் கொண்டுவரின் தேசமக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்பது நிச்சயம். நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்த இயக்கம் அத்யாவஸ்யமானது. சென்னையில் முதன் முதலாக 1919-ம் ஞூல் அகில இந்தியப் புஸ்தகாலய மகாநாடு பரோடா சமஸ்தானத்துப் புஸ்தக இலாகாத் தலைவர் ஸ்ரீமான் **குடல்காரின்** தலைமையின் கீழ் நடைபெற்ற தருணத்தில், **அகில இந்திய புஸ்தகாலய சங்கம்** ஒன்றும் ஏற்பட்டது. பின் காங்கிரஸின் ஆதரவில் 1923-ம் ஞூல் காக்கினாடாவிலும், 1924-ல் பெல்காமிலும் 1925-ல் கான்பூரிலும், 1927-ல் சென்னையிலும் இம் மகா நாடுகள் கூடின.

அமெரிக்காவே இதில் இப்பொழுது தலை சிறந்து விளங்குகிறது. அடுத்தது கிரேட் பிரிட்டன். **கார்னீஜி** முதலிய கோடீஸ்வரப் பிரபுக்கள் அமெரிக்காவில் இதற்கு வேண்டியபடி கொடுத்து உதவியிருக்கிறார்கள். இந்தியாவில் இத்துறையில் முன்னின்று முதன்மையாய் வேலை செய்வது பரோடா சமஸ்தானமே யாகும். அமெரிக்காவிலிருந்து புஸ்தகாலய நிபுணர் ஸ்ரீமான் **பார்டன்** என்பார் பரோடாவுக்கு மகா ராஜாவின் அழைப்பின்படி 1910ஞல் வந்து, இச் சமஸ்தானத்தில் கிராம, தாலூகா, ஜில்லா புஸ்தக சாலைகளையும் குக்கிராமங்களுக்கெல்லாம் யாத்ரா புஸ்தக சாலைகளையும் தக்க நிர்மாணிப்புடன் அமைத்தார். இதன் பயனாகவே இப்பொழுது இங்கு நூற்றுக் கணக்கான புஸ்தகாலயங்கள் தக்க வசதிகளுடன் இருக்கின்றன. ஸ்ரீமான் **நியூடன் டட்** என்பவர் இந்த இலாகாவிற்குத் தலைவராயிருந்து ஊக்கத்துடன் வேலை செய்கிறார். ஆந்திரர்கள் இவ்வியக்கத்தில் நன்கு உழைக்கிறார்கள். ஒத்துழையாமைக் காலத்தில் இவ்வேலையில் ஈடுபட்ட அனேகர் சிறைக்குச் செல்ல நேரிட்ட படியால், பல புஸ்தகாலயங்கள் மறைந்தன. எனினும் இவ்வியக்கம் இங்கு வேரூன்றி வளர்ந்து கொண்டு வருகிறது. இதற்காகப் பத்திரிகை யொன்றுகூட **பெஜவாடா**விலிருந்து வெளிவருகிறது. வங்காளிகளும் அடுத்தபடியாகக் கவனம் செலுத்தாமலில்லை. சிறிய புதுக்கோட்டை சமஸ்தானங்கூட இதில் விசேஷ சிரத்தை காட்டி வருகிறது.

தமிழ் நாட்டில் புஸ்தகாலயங்கள் போதியபடி விருத்தியாகவில்லை. தோன்றித் தோன்றி ஆதரிப்பாரின்றி மறைகின்றன. தமிழ் நாட்டு மன்னர்கள், ஜமீன்தார்கள், பட்டாதார்கள், மிராஸ்தார்கள், மாஜி உத்தியோகஸ்தர்கள், செல்வவந்தர்கள் முதலியவர்கள் முன்னேறி வந்து மனமுவந்து இதில் வேலை செய்தால், இந்த இயக்கம் இங்கு விரைவில் விருத்தியாகித் தமிழகமெங்கும் பரவும். செந்தமிழ் நாட்டில் புஸ்தகாலய இயக்கத்தை உண்டாக்க நமது **"பாரதி"** பெரிதும் பாடுபடும். இதைப் பற்றிய கட்டுரைகள் இம்மாசிகையில் வந்து கொண்டிருக்கும். இந்த இயக்கத்தில் இச்சை



கொண்டவர்கள் இப் பத்திரிகையின் ஆசிரியருக்கு விஷயங்களை அறிவித்தால், வேண்டியவைகளுக்குக் கூடுமான வரை மகிழ்ச்சியுடன் முயற்சி செய்யத் தகுதியாயிருக்கும்.

## கவி அரசி சரோஜினி தேவியார் தூது.

கன்னிமேயோ விஷமப் புஸ்தகத்து வெளியீட்டின் பிரச்சாரத்தால் அமெரிக்கர்கள் இந்தியர் மீது கொண்டிருக்கும் தப்பான அபிப்பிராயத்தை அகற்றிப் பாரத கண்டத்தின் மாபெருஞ் சிறப்பையும், உயரிய தத்துவத்தின் அருமையையும் அவர்களுக்கு எடுத்துக் காட்டி, அவர்களுக்கிடையில் நமது கௌரவத்தை நிலை நாட்டச் சென்றிருக்கும் இந்தியத் தாயின் அருமைச் செல்வி—கவி உருக்கொண்ட பாரதக் கோகிலமாம் **சரோஜினி தேவி**யாரை அமெரிக்கர் அன்புடன் வரவேற்று, அருமையுடன் உபசரித்து, அவரது இயற்கை இன்னிசைப் பிரசங்க அமிர்தமாரியை இன்பத்துடன் பருகி ஆனந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க அபிப்பிராயத்தை உண்டாக்கும் சாதனங்களான பத்திரிகைகளெல்லாம், பல ரசங்கள் பொங்கிப் பொங்கிப் புரண்டோடும் அம்மையாரின் பிரசங்கத்தில் அப்படியே மயங்கி, அவரை வானளாவ தூக்கிப் புகழ்கின்றன. அரசியல் நிபுணர்கள், கல்விமான்கள், வியாபாரிகள், ஆசிரியர்கள், பற்பல விற்பன்னர்கள், மதபோதகர்கள் அடங்கிய பல சங்கங்கள் தேவியாரை அழைத்துக் கௌரவித்து மகிழ்கின்றன. அங்கு அவருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்புக் கிடைக்கிறது.

அவரை அநேக நகரங்களிலும், கானடா தேசத்திலும் அழைத்திருக்கிறார்கள். அம்மையார் இந்தியாவின் தூதுவர். அவர் பேசுவது இந்தியா பேசுவதாகும். அவர் கௌரவிக்கப்பட்டது இந்தியா கௌரவிக்கப்பட்டதாகும். சுருங்கச்சொன்னால் இப்பொழுது அவரே அங்கு இந்தியாவாயிருக்கிறார். இந்தியாவின் அன்புக் கொடியை—அறிவுக் கொடியை—அறக்கொடியை அமெரிக்காவில் நிலை நாட்டி இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபடும் கூட்டத்தார்களை அங்கு அமைத்துவிட்டு வெற்றியுடன் இங்கு திரும்பி வரும் தேவி சரோஜினியாரை வரவேற்க இந்தியா தேசமே எதிர்நோக்கி நின்று கொண்டிருக்கிறது.

## இந்தியாவின் கொடி எங்கே?

தற்பொழுது அமெரிக்காவிலிருக்கும் நம் கவியரசியார் ஒரு கூட்டத்திற்கு போயிருந்த பொழுது, அங்குப் பல தேச முக்கியஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அக்கூட்டம் நடைபெற்ற இடமோ பல்வேறு தேசக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு அம்மையாரைப் பேசக் கேட்டுக் கொள்ளப்பட்ட பொழுது அவர் கூறியதாவது:—"இக்கூட்டம் பலப் பல கீழை மேலை நாட்டுக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்க, அவைகளுக்குள் **இந்தியாவின் கொடி எங்கே?** உலக ஜனத்தொகையில் **5**ல் ஓர் பாகம் கொண்ட இந்தியர்கள் அடிமையாகக் கிடக்கும் பொழுது, நீங்கள் உலக சமாதானத்தைப்பற்றி பேசுவது கேலிக்கு இடமே. மற்ற சுதந்திர தேசக்கொடிகள் போல, இந்தியக் கொடியும் இவ்விடத்தில் பறந்தாலன்றி உலகத்தில் உண்மைச் சமாதானம் உண்டாகாது." அம்மையார் நீடூழி வாழ்க.

---

## ஆராய்ச்சி மேடை.

### அன்ன பூர்ணாலயம்.

ஸ்ரீமதி. நிருபமாதேவி அவர்களால் வங்க பாஷையில் எழுதப்பட்ட "**அன்ன பூர்ணா மந்திரம்**" என்னும் மிகச் சிறந்த நவீனத்தின் மலையாள மொழிபெயர்ப்பைத் தழுவி, அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியில் சதுர்மொழி வல்லுனர் ஸ்ரீமான் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் எம். ஏ. வரைந்த **அன்ன பூர்ணாலயம்** எனப் பெயரிய நாவலொன்று வரப்பெற்றோம்.

நம் நாட்டிற் பரவியுள்ள கேட்டினை விளக்கி மக்களுள்ளத்தைப் பண்படுத்துவனவாக வெளிவரும் நவீனங்கள் மிகச் சிலவாக தீய நெறியிற் புகுவிப்பனவாக வெளி வரும் நாவல்களோ மிகப் பல. அங்ஙனமாக, இந்நூல் எந்நயமும் தன்னகத்தே கொண்டு, நட்பின் மாட்சி, வறுமையிற் செம்மை, செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல், செல்வத்தாலாய பயன், முயற்சியின்மையால் வரும் கேடு, கூடா நட்பு, செல்வச் செருக்கால் விளையுந் தீமை, சீரிய காதல் ஆகிய இவற்றினைச் செவ்வனே விளக்கி, பொல்லா ஒழுக்கினையும் நல்லோரெனச் செய்ய வல்லதென்பதே எமது முடிபு.


# "பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலிக்க
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரெனவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணம் கமழும்

**'பாரதி'க்கு**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அதனைப்பற்றி அறிமுகம் செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக் கொடுங்கள்.

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| உள் நாடுகளுக்கு. வருடத்திற்கு | | ரூ. **2—0—0** |
| வெளி நாடுகளுக்கு | ,, | ரூ. **2—8—0** |
| | | அல்லது **4** ஷிலிங். |

விலாசம்:—

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.


Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt.

# "பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலிக்கு
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்திய ரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசிய மணம் கமழும்
'பாரதி'க்கு

உடனே சந்தாதார்களாய்ச் சேருங்கள். உங்கள்
நண்பர்களுக்கும் அதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

சந்தா விபரம்

உள் நாடுகளுக்கு, வருடத்திற்கு ரூ 2—0—0
வெளி நாடுகளுக்கு ,, ரூ 2—8—0
அல்லது 4 ஷில்லிங்.

விலாசம் :—

பொருப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt.




ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் தொன் மொழியாம் தென் மொழியைக் கற்கத் தொடங்கியது தமது பிற்காலத்திலேயென நூன் முகத்துக் கூறியிருப்பினும், எல்லாத் தமிழர்க்கும் பயன்படுமாறு ஒள்ளிய தெள்ளிய நடையில் அமைத்திருத்தல் மிகவும் பாராட்டற்பாலது. கற்றார்க்குக் கற்றவளவே தீ நெறி களைந்து நன்னெறி பயக்கும் இந்நூலைப் போலவே பிற பாஷையிலுள்ள மற்றைய நவீனங்களையும், உயர் நூற்களையும் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் தமிழகத்திற்கு அளிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

இவ்வரிய நவீனத்தைச் சர்வகலா சங்கத்தார் பாடசாலைகளுக்கும் பாட புத்தகமாக அமைப்பின் மாணாக்கர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்று நினைக்கிறோம்.

விலை ரூ 1—0—0. கிடைக்குமிடம்:— **R. S.** பிள்ளை,
காந்தாரி அம்மன் வீதி, திருவனந்தபுரம்.

S. K.

---

## மாதர் மகாநாடு அல்லது மகளிர் முன்னேற்றம்.

நூலாசிரியர் :— சேலம் **திரு. என். வேங்கடரமணன் அவர்கள்**
வெளியிட்டவர் :— **திரு சு. பழனியப்பா அவர்கள்,** ஒலவக்கோடு.

**விலை அணா 6.**

இஃது மதிபுரம் மாதர் கல்விக் கழகத்தில் நடைபெற்ற உபந்நியாசங்களின் வடிவாக வரையப்பட்டுள்ளது. நமது நோக்கம் பெண் கல்வியும் அதைப்பற்றிய ஆக்ஷேபணைகளும், இந்து தேசம், அதன் முற்கால தற்கால நிலைமை, விவாகம், மாதரொழுக்கம், மூட நம்பிக்கைகள், தொழில் முதலிய கலைப்புகளின் கீழ் நாட்டின் தற்கால நிலையில் ஆடவரும் பெண்களும் கவனிக்கவேண்டிய பல அவசியமான கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன. பொதுவாக சிறுவர் சிறுமிகள் முதல் யாவரும் படிக்கத்தக்க இனிமையான புத்தகமென இதைக் கூறலாம். மத்திய தரவகுப்புப் பெண் பள்ளிக்கூடங்களில் இப் புஸ்தகத்தைத் துணைவாசகப் புஸ்தகமாய் ஏற்படுத்த நாம் பெரிதும் சிபார்சு செய்கிறோம். இவ்வறிஞரது பேனா முனையிலிருந்து அநேக நூற்களை நாம் எதிர்பார்க்கிறோம்.

---


19518

# செய்தித் திரட்டுகள்.

மானிடர்கள் உறக்கத்தில் தங்கள் பாதிக் காலத்தைக் கழித்து விடுகிறார்களென்று கருதி, அமெரிக்காவில் ஒரு டாக்டர் தூக்கத்தைத் தொலைக்கும் வழியைக் கண்டுபிடிப்பதற்கு ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்.

ஜெர்மெனியில் நிர்வாண சங்கம் தோன்றியிருக்கிறது. இப்பொழுது இந்த இயக்கம் சிலவிடங்களில் ரகசியமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. இச் சங்கத்தார்கள் தங்கள் கொள்கையைப் பரப்பும் பொருட்டுப் புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் வெளியிடுகிறார்கள்.

ஹிந்தூர் மாஜி மன்னருக்கு பாரிஸில் அமெரிக்க மனைவி மில்லர் என்ற சர்மிஷ்டா தேவியினிடம் ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது.

கேரளம் ரவீந்திரநாத் தாகூர் என்று அழைக்கப்படும் கேரளம் மகாகவி வல்லத்தோடு நாராயண மேனன் வட நாட்டில் யாத்திரை செய்கிறார். கல்கத்தாவிலிருந்து நமது "பாரதி"க்கு அவர் அன்பின் ஆசிகளை அனுப்பியிருக்கிறார்.

சமீப காலத்தில் பரோடா இளவரசருக்கு விவாகம் மகா வைபவத்துடன் நடைபெற்றது. அப்பொழுது தங்க பீரங்கிகளில் மருந்துகளை வைத்துச் சுட்டார்கள். பீரங்கிகளை வெள்ளியிலும் தங்கத்திலும் வார்த்து வைத்துக்கொண்டிருப்பது உலகத்திலே பரோடா சமஸ்தானம் ஒன்றுதான். 150 லட்ச ரூபா விலை பெற்ற முத்து ஜமுக்காளத்தில் மணமக்கள் அமர்ந்தார்களாம்.

ருஷியாவில் கல்யாணச் சடங்குகளை நீக்கிவிட்டு, இன்னானும் இன்னாளும் மணம் புரிந்தனர் என்று பத்திரிகையில் விளம்புரப் படுத்தும் வழக்கம் அதிகமாகிக்கொண்டு வருகிறதாம்.

இலங்கை சட்டசபை மெம்பரும் 'தேசபக்தன்' பத்திரிகாசிரியருமான ஸ்ரீமான் K. நடேசய்யருக்கும் கோயமுத்தூர் மாதர் சங்கக் காரியதரிசியும் வேளாளர் குலத்தவருமான ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாளுக்கும் கலப்பு விவாகம் கொழும்பில் நடைபெற்றது.

கனம் தங்கிய சாஸ்திரியாருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட சர் K. V. ரெட்டி நாயுடு தென்னாப்பிரிக்காவில் ஏஜெண்டு ஜெனரல் வேலையை ஏற்றுப் பார்த்து வருகிறார்.